



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# விடிவிற்கு முந்திய



# மரணங்கள்

V. Ratnam.

வெளியீடு:-
தமிழீழ விடுதலைப் புலிகள்

அரசியற் பிரிவு
தமிழீழ விடுதலைப் புலிகள்

# விடிவிற்கு முந்திய மரணங்கள்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

விலை:- ரூ. 12

உங்களுடன்.....

தம் உயிர் ஈந்து இம் மண்ணிலே விடுதலைப் பயிரை உரம்பெறச் செய்து விட்ட தியாகிகளை நாம் என்றும் மறக்க முடியாது. மறந்தால் நாம் மனிதம் அற்றவர்களாகின்றோம்.

எம் தோழர்கள் -- நாம் எப்போதும் ஒரே குடும்பமாக வாழ்பவர்கள். இனிய உறவுகளை துறந்த நாம், எம்மை நேசித்து நம்மோடு நாமே ஐக்கியமாகி இறுகப் பிணைந்து விட்ட ஜீவன்கள். நமக்கு நாமே தாயாகி, தந்தையாகி, இனிய உறவாகி, இணைந்திருக்கின்றோம்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

எமக்கிடையே ஏற்படும் இழப்புகள்-- எமக்கு மிக நெருக்கமானவர்கள் நிரந்தரமாகவே பிரிந்து விடும்போது, எம்மோடு ஒன்றின, எம்மிலே ஒன்றின, அவர்களின் பிரிவுகள் எம்மை நிலைகுலையச் செய்கின்றன. உதிர்வை நினைத்து நாம் அழவில்லைத்தான். அழமுடியாதுதான். ஆனல் நாம் அடையும் வேதனை சொல்லமுடியாதது. சொன்னலும் யாராலும் புரிந்துகொள்ள முடியாதது.

புரட்சிக் காரர்கள் என்றல் கடினமானவர்கள் என்று எண்ணும் இந்த உலகம் மனிதர்களுள்ளே மிகவும் மென்மையானவன். மிருதுவான உணர்வுகளைக் கொண்டவன் அதனல்தான் புரட்சிக்கே புறப்பட்டவன் என்பதை உணரவில்லை. அந்த மென்மையான இனிய உள்ளங்களோடு நாம் உறவாட வாழ இன்னுமொரு பிறவி கிடைக்காதா என்று ஏங்குகின்ற ஏக்கங்கள் யாருக்கும் புரியாமலிருக்கலாம். ஆனல் எம்மைச் சார்ந்தவர்களால் நிச்சயம் புரிந்துகொள்ள முடியும்

அந்த தியாகிகள் கடந்துவந்த பாதை கடினமானதுதான். அந்தக் கடினங்களை எம்மோடு இறுதிவரை பகிர்ந்து வந்த எம் இனியவர்கள் இடையிலே உதிர்ந்து விடும்போது

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

எம் தாயை இழந்த துயர், எம் தந்தையை இழந்த துயர், எம் இனிய உறவுகளை இழந்த துயர், இவைகளையும் கடந்த துயர் உண்டு என்றால் அவற்றையும் கடந்த துயரடையும் எம்நிலை யாருக்கும் புரியா.

ஒருவனைப் பிரியும் போதே இந்நிலை எழும் போது பதினறு உயிர்களையும் ஒரே சமயத்தில் ஒரே தாக்குதலில் பலி கொடுத்த எம் நிலையை எந்த வெற்றியும் எந்தச் சந்தோஷமும் சீரமைத்து விட முடியாது.

தம் இனிய கனவுகளை இம் மண்ணிலே புதைத்து விட்டு இந்த மண்ணின் விடுதலைக் காகப் புறப்பட்ட அந்தப் பதினறு ஆருயிர் களை இந்த மண் மறந்து விடக்கூடாது. அவர் களின் ஆத்மாவின் கீதங்கள் இன்றும் எம் உள்ளங்களில் ஒலித்துக் கொண்டிருப்பதை இம் மண்ணின் மைந்தர்களோடு பகிர்ந்து கொள்கிறோம்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



கொக்கிளாய் நோக்கி .....

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# 1

மனித முகங்களே காணமுடியாத காடு, காட்டை ஊடறுத்துச் செல்லும் ஆற்றின் இரு கரையுஞ் செழித்திருந்த மரங்கள் எம்மை வரவேற்கின்றன. காட்டில் பூக்கும் ஒவ்வோர் பூவும் எம்முடன் பேசுகின்றன. அங்கே வீசும் தென்றல்; அங்கு பாடித்திரியும் பறவைகள்; ஓயாமல் ரீங்காரமிடும் வண்டுகள் இவை தான் எமது சொந்தங்கள், இந்த வகையில்தான் அந்தக் காடு ஒவ்வொரு கெரில்லாவாலும் நேசிக்கப்படும் தாயாகி விட்டாள்.

அன்றும் வழமைபோல் காட்டில் குளிர்மை இருந்தது; எமது வீரர்கள் அணிவகுத்து நின்றனர். இராணுவ முகாமை அண்மிக்க பல மைல்கள் செல்ல வேண்டியிருந்தது. எல்லோரும் ட்றக்ரரில் ஏறினர். ட்றக்ரர்கள் இரைச்சலை எழுப்பிக்கொண்டு காட்டுப்பாதைகள் ஊடாக வேகமாக ஓடுகின்றன. பாதைகள் சீரில்லை: பெரிய மரவேர்கள் பாதைக்குக் குறுக்கே கிடந்தன. குன்றுகளும், குழிகளும் பார்க்கின்ற இடமெல்லாம் தெரிகின்றன.

''தடாம்'' ''தொம்''என்ற சத்தம் பலமாக கேட்டுக் கொண்டு இருக்கிறது.; சேறும் சகதியுமான பாதை. சேற்றினுள் சில்லுகள் புதைந்து சேற்றை அள்ளி வீசுகின்றன. ட்றக்ரர்களில் இருந்த தோழர்களின் ஆடைகளில் சேறு படிந்தது;

''மாமா' என்ன சேறடிக்குது?'' என்றான் சைமன்,

''ஓம் அம்மான் அது அப்படித்தான்'' என்றான் மாமா

பெட்டிக்குள் இருந்து சிரித்துக் கொண்டு சைமன்

''மாமா பகிடி விடாம வடிவா ஓடு இல்லையேல் கல்லுகள் தான் வரும்'' என்றான்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

"அதையும் பார்ப்பம் என்பது போல் மேலும் வேகமாக ஓடுகின்றான்?

"இரண்டு பேரும் சண்டையிட்டுக் கொண்டால் எங்களுக்கென்ன............
யோரடிக்காம போகும்" என்றான் பழசு:

ட்றக்ரர்கள் வேகமாக ஓடிக்கொண்டிருக்கின்றன. வேதாவின் ட்றக்ரர் சேற்றில் புதைந்து விட்டது. எந்தப் புதைவில் இருந்தும் எடுத்துவிடும் திறமை அவனிடம் இருந்தது. எல்லோரும் உதவி புரிந்தும் முடியவில்லை; சிறிய இருத்தல் படிக்கல்லை எடுத்து வந்தான் வேதா.

"உம் நிறுக்கப் போறான் பாருங்க" என்றான் சைமன்;

"சும்மா போடாப்பா சைமன்" என்றவன் ஒரு முன் சில்லை நிலத்தில் முட்டாதவாறு படிக்கல்லை கொடுத்து விட்டு ஒரு இழுவைதான் மூசிக்கொண்டு ட்றக்ரர் வந்து விடுகின்றது. வேதா இலேசாக ஒரு சிரிப்பு சிரித்தான்.

ட்றக்ரர் ஓட்டுவதில் மாமாவிடம் ஒரு தனி இயல்பு உண்டு. ஒரு பக்கம் உயரம்மற்றக்கரை சரியான பள்ளம் ஓடி வரும் போது தான் தென்படுகின்றது. புரளப் போகிறோம் என்று எல்லோரும் ஒரு கணம் நினைத் தோம். வெட்டித்திருப்பி பிறேக்கை அழுத்தினான். இறு மரச்-செடிகளை முறித்து நின்றதும் திரும்பி ஒரு பார்வை; தான் ட்றக்ரரை புரளவிடாமல் எடுத்திற்றன் என்ற புழுகு.

"எப்படியம்மா ஓட்டம்"?என்றான் மாமா.......

"நல்லாயிருக்கு மிச்சோட்டை இதிலேயே முடிச்சிப்பார்த்திற்ற" என்றான் கெனடி.

"கிழடு நீ சும்மாயிரு" என்றான் வேதா;-

இருவரும் சண்டையிட்டுக் கொள்கின்றனர்,

ட்றக்ரர்கள் மீண்டும் ஓடத் தொடங்குகின்றனர்.

இருபக்கமும் நின்றிருந்த மரக்கிளைகளை உரசின. முட்கள் உடலைக் கிழித்தன. பள்ளம் ஒன்றில் சில்லுகள் விழுந்து பெட்டிக்குள் இருந்தவர்களை தூக்கி குத்தியது. குலுக்கிய தில் இருந்து மீள்வதற்கு முன் அடுத்த பள்ளம்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

மாறி மாறி உடலை நோதல் படுத்தியது; எனினும் இப் பாதைகள் ஊடாகவும் இலட்சிய முனைப்போடு தான் இயங்கினோம்.

நெஞ்சில் நிறைந்திருந்த மண்ணின் நினைவுகள் நீண்ட பயணத் தொடரின் வேதனையை அப்போது உறுத்தவில்லை; காட்டுப் பாதையூடாக ஓடிக்கொண்டிருந்த ட்றக்ரர்கள் ஆற்றைக் கடக்கவேண்டியிருந்தது. ஆற்றுக்குள்ளே புதையலாம்; இறங்கி நடந்தால் தனியே ட்றக்ரரை எடுக்கலாம். என்று பேசிக் கொள்கின்றனர். மாலை நான்கு மணிக்கு ஆரம்பமான பிரயாணம் இன்னும் முடியவில்லை "இரவு நேரத்தில் அதுவும் குளிரில் தண்ணிக்குள் இறங்கி நடக்கிறதெண்டால்"........ என இழுத்தான் கெனடி. எல்லோரும் ட்றக்ரர்களில் இருந்து இறங்கி ஆற்றினுள் இறங்கினர்.

காதுகள் ஊடாக காற்று ஜில் என்று குளிர்ந்தது.

முழங்காலுக்குச் சற்று மேலே மடித்து விடப்பட்ட பச்சை நிற உருமறைப்பு ஆடைகள்; ஒன்றாகச் சேர்த்துக்கட்டிய சப்பாத்துக்கள் இரண்டும் ஒரு கையில்; ஒவ்வொருவர் தோள்களிலும் பைகள்; மறுகையில் ஆயுதங்கள்; இந்நிலையில் சேற்றினுள் புதைக்கின்ற கால்களை இழுத்து இழுத்து தூக்கி நடந்து கொண்டிருக்கின்றனர். தண்ணீர் மட்டம் இடுப்பளவையும் தாண்டி வயிற்றையும் நனைத்தது. சிலர் தடுமாறி விழுந்து விட சரிந்தபோது மற்ற நண்பர்கள் அவர்களை அணைத்து நிலைப்படுத்திக் கொண்டு ஆற்றைக் கடந்து விடுகின்றனர். நீளமான உருமறைப்பு ஆடைகளில் இருந்து நீர் சிந்திக் கொண்டிருந்தது. இரண்டு ட்றக்ரர் தோழர்களை மறுகரையில் ஏற்றத் தயாராய் நின்று கொண்டிருந்தன.

வேதா தோழர்களை திரும்பிப் பார்க்கிறான்.

என்னம்மான் வேதா! இறங்க வேணுமோடா? எனத் தோழர்கள வேதாவைக் கேட்கின்றனர் அதற்கு அவன் இல்லையம்மான் இருங்கோ என்றான். ட்றக்ரர் ஆற்றினுள் இறங்கியது; பெரிய சில்லுகள் நீரை அள்ளி தோழர்கள் மீது வீசுகின்றன. பெட்டிக்குள் இருந்தவர்கள் நனைகின்


றனர். குளிரையும் ஊடறுத்து ட்றக்ரர் உருண்டு கொண்டிருக்கின்றது. மாமாவின் ட்றக்ரரும் பின்னே வந்து கொண்டிருக்கின்றது. லையிற் வெளிச்சம் நீரில் பட்டு மரங்களில் தெறித்திருந்தது. காத்தானின் ட்றக்ரரும் ஆற்றில் இறங்கத் தயாராக வந்து நிற்கின்றது. ஒளி வெள்ளத்தில் அந்தப் பகுதி மிதந்தது.

வேதாவும் மாமாவும் அதிசிறந்த வாகனச்சாரதிகள். இவர்கள் ஓடும்போது தனி விமர்சனம் எழும் ஓட்டிசுட்டான் பொலிஸ்நிலையத் தாக்குதலை முடித்து விட்டு வீடுகளைக் கிழித்து ஓடிய ஓட்டம் தான் நினைவில் வரும்: இவர்களால் பயிற்றப்பட்ட சாரதிகள் எத்தனை பேர்..........! ''ட்றக்ரர் புதைந்து விட்டது'' என்று காத்தானின் செய்தியை வேதாவின் வோக்கி ரோக்கி அலறியது. வேதா ஆற்றுள் இறங்கிச் செல்கிறான். ட்றக்ரர் கரை வந்து சேர்கிறது. ஆபத்தானதும் துயரம் மிக்கதுமான பாதைகள் ஊடாக பிரயாணம். எல்லோரிடமும் மௌனம் சூழ்ந்திருக்கின்றது. யாருக்கும் பேச்சு வரவில்லை சீரியஸாகி இருக்கின்றனர்.

நீரால் நனைந்த ஆடைகளைப் பிழிந்து உதறிக் கொண்டு சைமனும் ஜெகனும் ஏதோ பேசிப் பலமாகச் சிரித்துக்கொள்வது கேட்கின்றது. அந்தச் சிரிப்பு எல்லோரது மௌனத்தையும் குதறிக் கொண்டெழுந்தது. ''கலரும் மாறிப்போச்சு'' என்று ஜெகன் கௌடியோடு பகிடி விட்டதனால் தான் அந்தச் சிரிப்பு. அவனின் அந்தக் குறும்புத்தனம் எல்லோரையும் சிரிக்க வைத்துவிடும் தோழர்கள் மீது பயங்கரமாக அன்பைச் செலுத்தும் அவன் தோழர்கள் அந்த இருளில் நனைந்து பேசாமல் நிற்பதால் அவ்வாறு சொல்லியிருக்க வேண்டும்.

ஒரு நாள் பலத்த மழை பெய்தது. எமது கூடாரங்கள் ஊடாக நீரடித்து ஓடிக்கொண்டிருந்தது. சடுதியாக ஏற்பாடு செய்திருந்த அமைவிடம்; அவ்வளவு நன்றாக இருக்கவில்லை, இதனால் மரங்களுக்குக் கீழே ஒதுங்கிக் கொண்டும் பரண்களில் ஏறி நூலங்களை முழங்காலில் வைத்துக் கொண்டும் நின்றபடியும் இருந்த தோழர்களை

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



எம். கே. கேமசிறி (வின்சென்ற், பழகு)

வயது - 21

பருத்தித்துறை

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

நோட்டமிட்டவாறு அவன் நின்றுகொண்டிருக்கிறான். சிறிய உணவுத் தயாரிப்பில் ஈடுபடமுடியாதவாறு அடுப்பில் நீர் நிறைந்து கிடக்கின்றது. விறகுகளும் நனைந்து விட்டன. தேநீர்கூட அருந்த முடியாது. பசிக்களை ஒருபுறம். "சனியன் பிடிச்ச மழை இந்த நேரத்திலையா பெய்யவேணும்" என நினைத்துக்கொண்டு தோழர்கள் பேசாதிருந்தனர். அந்த நேரத்தில் ஏதாவது கதை செய்வான். ஜெகன் கதை சொல்கிறான் என்றாலே ஒரே சிரிப்புத்தான். துயரம் சூழ்ந்த நாட்களில் இருந்து மீட்டு எழுந்து சந்தோஷங்களை ஊட்டும் திறன் அவனுக்குரியதே.......

# 2

காட்டுப்பாதையூடாக மரங்களையும் செடிகொடிகளையும் விலக்கிக் கொண்டு ட்றக்ரர் ஓடிக்கொண்டிருக்கிறது. இருண்ட காடு. சாமம் ஆகிவிட்டிருந்தது. பற்றைகளை முறித்துச் சல சல............ என்றசத்தம் கேட்டது. சத்தம் வந்த திசையை நோக்கி எம் பதினாறு தானியங்கித் துப்பாக்கியை சடுதியாகத் தயார் நிலைக்கு மயூரன் எடுத்திருந்தான். மயூரனை வேகா அழைத்தான். "அவதானமாகப் பார்" என மயூரனிடம் பணிகிறான். மயூரன் சிறந்த பார்வை சக்தியுள்ளவன். "முள்ளம்பன்றிகள் ஓடுகின்றன" என்று கூறிவிட்டு தயாபரனோடு பேசிக்கொண்டிருக்கின்றான்.

மயூரன் சிறந்த போர்ப்பயிற்சி எடுத்திருந்தான். மனதை ஒருநிலைப்படுத்தி குறியை எய்வதில் அவனிடமிருந்த திறமை எம்மை வியக்கவே செய்யும். அந்தச் சிறு வயதில் யாரும் பெறுவதே இயலாது. மாலை நேரங்களில் பயிற்சிக்காக கொடுக்கப்பட்டிருந்த AIR GUN துப்பாக்கியை தூக்கிக் கொண்டு திரியும் அழகே அழகு!

பறந்து கொண்டிருக்கும் காக்கா குருவிகளை இலக்கு வைப்பதில்தான் அவனுக்குப் பிரியம். ஒரு முறை

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

காகம் ஒன்று மேலே பறந்து கொண்டிருந்தது. அதன் இறக்கைகளை அகல விரித்து விமானம் இறங்குவதுபோல் நிலத்தை நோக்கி பறந்து கொள்வதும் திடீரென மேலெ ழுவதுமாக இருந்தது. இந்த நேரத்தில் அவனது இலக்கு விரைவாக வைக்கப்படுகிறது. காகம் மணலில் இறக்கை விரித்து துடித்துக்கொண்டு கீழே விழுந்தது. இவ்வாறு பயிற்சி முகாமிலே அவனிடம் காணப்பட்ட திறமைகள் சொல்லி யடங்காது. களங்கள் அவனது திறமையைப் பன்மடங்கு வளர்த்தது.

சமையல் வேலைகளாயினும் சரி எந்த வேலைகளை யும் திறம்பட செய்து முடிப்பான். துடியாட்டம் மிக்க அவனது தோற்றம், தெளிந்த சிரிப்பும் நெஞ்சில் இன் றும் திரையிடுகின்றன.

மயூரன் வயதில் இளையவனாக இருப்பதால் அவனை எல்லோருமே தம்பி என்றே அழைப்பர்.

பட்சிகளின் கீதங்களும் யானைகளின் பிளிறல்க ளும் நரியின் ஊளைச்சத்தங்கள் போன்றனவும் கானகத் தின் இன்னிசை நிகழ்வுகள். காத்தானின் ட்றக்ரர் வெளிச் சம் மரங்களைத் தழுவிச் சென்று கொண்டிருக்கிறது: நடுக்காடு.

மனிதசஞ்சாரமற்ற பிரதேச எல்லையைக் கடந்து சென்று கொண்டிருக்கின்றது; பின்னால் எழுந்திருந்த தூசுமண்ட லங்கள் ஊடாக ட்றக்ரர் வெளிச்சங்கள் தெரிந்தன. பாதையின் நடுவே பெரிய பள்ளம் இருந்தது. நிறுத்தி உடலை அசைத்து ஸ்ரேறிங்கை வெட்டித் திருப்பி எடுத் துக்கொண்டிருக்கிறான். காத்தானின் நினைவின் நரம்புகள் படீர் என்று ஒலித்தது. அவனது எண்ணங்களில் சூழ்ந்த நிலையை அறவே மறக்க முயல்கிறான். ஆனால் அவனால் முடியவில்லை. அவளின் காதலி 'ட்றக்ரர் இரைச்சல் கேட் கும் போது நீங்கள் போவதாக நினைத்துக் கொள்கிறேன் என்ற அவளின் வார்த்தைகள் அவளின் பரிதவிப்பை ஒரு கணம் அவனில் நிலைக்க வைத்து விடுகின்றன. 'பாவம் அவள்; நான் இறந்து விட்டாலும்' என்று அவன் கவலை

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கொள்கிறான். ட்றக்ரர் இரைச்சல் சதா தெருவில் கேட்குக் போதும் அவன் அடையும் வேதனையை எண்ணிக்கூடப் பார்க்க முடியாத அவனின் அந்தக் கணங்கள் துடியாய் துடித்தன.

''காத்தான்......காத்தான் .. நான் வேதா பேசுகிறேன்'' எனக் கூறிவிட்டு பதிலுக்காக காத்துநின்றான். ''வேதா நீங்கள் பேசுவது தெளிவாக கேட்கிறது.'' என்றான் காத்தான். இவ்வாறு இருவரும் பேசிக்கொண்டிருக்கின்றனர்.

நல்லதும் பாதுகாப்பானதுமான ஓரிடமாக ட்றக்ரரை நிறுத்தும்படி'' வோக்கி ரோக்கி ஒலிக்கிறது. அடர்ந்த மரங்களுள்ள காட்டை அண்டி சிறு வெளி காணப்பட்டது அந்த வெளியை அண்டி ட்றக்ரர்கள் தரிக்க தயாராயின எல்லோரது ட்றக்ரர்களும் வந்து சேருகின்றன.

வேதா இறங்கி நடந்து வந்தான். சிரித்துக் கொண்டவாறே ஜெகன் ஆச்சரியத்தோடு ''என்ன அப்பா இந்தப் பாதையில ஓடுறது... — இரவும் நித்திரையில்லை சாதுவா தூங்கி விட்டா எல்லாம் போய்ச்சுது'' எனச் சொல்லிக் கொண்டு தோளில் கை போட்டு சிரித்துக் குதூகலித்து நிற்கின்றனர்.

ட்றக்ரர் பெட்டிகளுக்குள்ளேயும் தோழர்கள் குறண்டிக் கொண்டு கிடக்கின்றனர்

விடிவதற்கு சில மணி நேரங்களே இருந்தன.
குளிர்காற்று மேனியைக் குளிர்த்தி அழுத்திச் சென்றது. மரங்களில் இருந்து பனி நீர்த்துளிகள் சிந்திக் கொண்டிருக்கின்றது. பறவைகள் விடியலுக்கான கீதம் இசைத்துக் கொண்டிருக்கின்றன. ட்றக்ரர்கள் மீதும் பனி நீர்கள் படிந்திருக்கின்றன.

விடிய நடைப்பயணம் மேற் கொள்ள வேண்டியிருந்தது. சிங்கள இராணுவத்தினர் காட்டுள் வரலாம். என்ற ஐயப்பாட்டின் பேரில் காவல் பலப்படுத்தப்பட்டிருக்கின்றது. காட்டில் மணல் பகுதியாக இருந்த இடத்தை நோக்கி வேதாவும் சைமனும் ஜெகனும் ஓய்வை எடுத்துக் கொள்வதற்காக சென்று கொண்டிருக்கின்றனர்.

Tamileelam Archive

# 3

சூரிய உதயத்தோடே அந்த நீண்ட வழிப்பயணம் ஆரம்பமாயிற்று. நீண்ட ஒற்றையடிப்பாதைகள். அந்தப்பாதைகள் நெளிந்தும் கிடந்தன.

காடு பற்றிய அறிவு உடையவர்களால் மட்டுமே அங்கு நகர்ந்து கொள்ள முடியும்.

சிறந்த வழி காட்டியாக காந்தியண்ணனும் செயற்பட்டார். சுற்றிலும் பழகிய காட்டுச் சூழல். இராணுவ சீருடைக ளோடும் இயந்திரத்துப்பாக்கிகளோடும் வரிசையாகநகர்ந்து கொண்டிருக்கின்றது. அதிகாலைப் பொழுதிலிருந்து நடக் கத் தொடங்கியவர்கள் இன்றும் பல மைல்கள் நடக்க வேண்டியிருந்தது.

''எனது நாட்டில் ஒரு சாண் நிலம்
எஞ்சி இருக்கும் வரை'


எமது வீரர்கள் நடந்த பாதைச் சுவடுகள்
இருக்கும் வரை

''எனது தன்னுணர்வு இருக்கும் வரை
விடுதலைக்கான பயங்கரப் போரை
எதிரியின் எதிரில் நான் பிரகடனம் செய்வேன்''

என்ற தொனிப்பு அந்த வரிசையின் நகர்வில் இருந்து எழுந்து கொண்டிருக்கின்றது.

எல்லோர் முகத்திலும் சந்தோஷம் நிறைந்து கிடக்கின்றது. அவர்கள் உறுதியாக நடந்து கொண்டிருக்கின்றார்கள்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



**ரஞ்சன் (சைமன்)**
தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive
வயது - 26
பொத்துவில்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# 4

இயற்கையின் சூழமையில் தன்னை மறந்து சூழ்ந்து கொண்டு வருகின்றான்'. சைமன்;

அவனது கண்கள் அங்கும் இங்குமாக இயற்கையின் வனப்பை மேய்கின்றன. எல்லையே காணமுடியாது விரிந்து கிடக்கும் பரந்த வெளிகளில் தனது மனதை குளியல் செய்கின்றான்.

அந்த எல்லையற்ற இயற்கையில் அவனுக்கிருந்த ஈடுபாடு மெய் சிலிர்க்க வைப்பதொன்று, அவன் ஒரு இயற்கையின் குழந்தை. படம் பார்ப்பதற்கான லீவு கிடைத்தால் கூட தொலை தூரம் நடந்து சென்று வயல் வெளிகளில் சுற்றித் திரிந்தவன்.

தலை இடிக்கும் போது மாத்திரை எடுத்துக் கொள்வதை அவன் விரும்புவதில்லை.

அம்மான்! ''எனக்கு தலையை தடவி விடம்மான்'' என்று கெஞ்சிக் கொள்வான். அவனை நினைக்கும் போதும் அவனது செயல்களை சொல்லும் போதும் மனதுக்குள் ஏதோ ஏதோ.........நினைவின் அழுத்தங்கள்.

இவனுடைய பிறந்த இடமான மட்டக்களப்பு பிரதேசத்தில் தமிழீழ விடுதலைக்கான போராட்டங்களையும் அரசியல் நடவடிக்கைகளையும் நிறைய ஆற்ற வேண்டும் என்ற ஆவல் அவனிடம் சதா பிறந்து கொண்டிருக்கும்.

சிறுவயதிலிருந்தே தமிழ் மக்களின் அடிமை நிறைந்த வாழ்க்கையைக் கண்டு வந்திருக்கிறான்.

அதற்கான புரட்சிகர நடவடிக்கைகளில் வீர தீரம் மிக்க இளைஞனாக மக்கள் மத்தியில் பிரபல்யம் ஆகின்றான்.

வசதி நிறைந்த வாழ்க்கை, அவனுடைய தந்தையாரிடம்

Tamileelam Archive

இருந்த பெரிய பண்ணைகள், கார்கள், பங்களாக்கள், ஆடம்பரமான வாழ்வு அத்தனையையும் உதறித் தள்ளியவன்.

அவனது தந்தை இத்தனைக்கும் அரசை அடி வருடும் எம். பி. (கனகரட்ணம்) அவர் எமது இயக்கத்தால் தண்டிக்கப்பட்டவர். அவ்வாறு தனது தந்தை தண்டிக்கப்பட்டாரே என்றும் அவன் கவலை கொள்ளவில்லை. மாறாக தமிழினத்தின் விரோதியாகவே அவரைக் கண்டான்.

இவனது தந்தையின் சூட்டுச் சம்பவத்திற்கும் இவனுக்கும் தொடர்பு இருப்பதாக கருதிய சிறிலங்கா அரசின் ஏவற்படை இவனைக் கைது செய்கிறது.

கடுங்காவற் சிறைத் தண்டனையை அனுபவித்தான். அவனது வாழ்க்கை சிறைக்குள் சீரழிந்து போய் விடவில்லை. சுதந்திரக்காற்றை சுவாசிக்க துடித்த அவனை துர்நாற்றம் வீசும் சிறைப் பகுதிக்குள் அடைத்தனர். எந்த நிலையிலும் துவளாத நெஞ்சு படைத்தவன். தமிழீழ விடுதலைக்கான போராட்டப் பயணத்தில் உயிர்த்துடிப்போடு கலந்து கொள்கிறான்.

சிறந்த இலட்சியப்பற்றும் கொள்கைப் பிடிப்பும் உள்ள அவன் எமது அமைப்பில் சேர்ந்து கொள்கின்றான். சைமன் பங்குகொண்ட தாக்குதல்கள் வீரமும் தியாகமும் நிறைந்தவை.

தமிழீழ தாயகத்துக்கான மீட்புப் போர் நாட்களில் சைமனது பங்கு நிறைவானதே.


ஒரு முறை!... . —

ஆரியர்குளச் சந்திக்கருகில் தனித்துவந்த கவச வாகனம் ஒன்றை தாக்குதற்கு தயாரானான்.

எரிந்து கிடந்த வீட்டின் சுவருக்குள் உபஇயந்திரத் துப்பாக்கி சகிதமும் கைக்குண்டுகள் உடனுமாக தனது தோழர்களோடு காத்து நிற்கின்றான்.

கவசவாகனம் அந்த தார் றோட்டில் உல்.....என்று இரைந்துகொண்டு வருகிறது. மேலே தலையை நீட்டிக் கொண்டு வந்த அந்த இராணுவத்தினன் தலையில் குண்டு

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



பரமேஸ்வரன் (காந்தி)

17 - 08 - 1956

தம்பலகாமம்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

பாய்கின்றது, சைமன் எறிகுண்டுகளின் பாதுகாப்பு ஊசிலை இழுத்து எறிகின்றான், சிலநிமிட நேரங்கள் நடந்த தாக்குதலில் அவர்களும் திருப்பித் தாக்கியபோது சைமனின் கழுத்தை உரசிக்கொண்டு குண்டு ஒன்று செல்கின்றது:

அவன் அணிந்திருந்த ஆடையும் இரத்தத்தால் தோய்ந்தது அந்த நிலையிலும் தொடர்ந்து போராடுகிறான்.

வெற்றிகரமாக தாக்குதலை முடித்துவிட்டு தனது தோழர்களோடு தளத்தை வந்தடைகிறான்.

# 5

ஒரு முறை கஸ்ரோவும் அவரது குழுவினரும் இவ்வாறான நடைப்பயணம் ஒன்றை மேற்கொண்டபோது கரும்புத்தோட்டங்கள் ஊடாக நடந்து சென்றுகொண்டிருந்தார்கள். தாங்கமுடியாத பசியின்மேலீட்டால் கரும்பை முறித்து உண்டுகொண்டு வழி நீட்டுக்கும் சக்கைகளை இட்டுச் செல்கின்றனர்: அதன் மூலம் அவர்களை எதிரி தொடரக்கூடியவாறான நிலையை ஏற்படுத்தியிருந்தனர்.

உண்மையில் தடயங்கள் விடுவதன் மூலம் எதிரி எம்மை பின் தொடரக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது, இதனால் தான் பழசு பிஸ்கட் பெட்டி உறையை மண்ணுள் புதைத்து விட்டு வரிசைக்குள் புகுந்து கொள்கின்றான்.

நாம் விட்டுச் செல்லும் சிறு தடயங்கள் கூட எமது போராட்ட வாழ்க்கையை எவ்வளவோ தூரம் பின்னடையவும் செய்து விடுகின்றன. இதில் அவனுக்கு மட்டுமல்ல அனைவரும் சிறு சிறு விடயங்களில் கூட நிதானமாக செயல்பட்டார்கள்.
நடைப்பயணம் நகர்ந்து கொண்டிருக்கின்றது:

காற்தடங்கள் கூட தெரியாதவாறு குழைக் கொப்புகளாக் பின் வந்தவர்கள் அழித்துக் கொண்டு வருகின்றார்கள்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கொதிக்கும் வெய்யில்!
தாகம் மேலிட்டது!

நா, வறண்டு போயிற்று: எங்கே தண்ணீர் எடுப்பது காட்டுக்குள் எந்த திசையில் நீருண்டு? யாருக்குத் தெரியும்? நேரமும் பன்னிரண்டாயிருந்தது. நடந்து சென்ற வழியில் யானை படுத்து உழக்கியிருந்த கலங்கலான நீர் நிற்கும் 'மோட்டை' ஒன்று எதிர்ப்பட்டது. அதனை நோக்கி அடித்துக்கொண்டு இருக்கின்றனர். துண்டு ஒன்றை விரித்து அதனூடாக நீரை உறிஞ்சிக் குடித்தனர்: பழகவும் கீழே நன்கு குனிந்தவாறு நீரைப் பருகிக் கொண்டிருக்கிறான். அந்த நீருள் குடம்பிகள் நெளிவது தெரிகின்றது. அந்த நேரத்தில் அத் தண்ணீர் பெரிதானதே. தண்ணீர் தாகத்தால் மெலித்திருந்த நடை, பின்னிய கால்கள் வலுப்பெறுகின்றன. புதிய வேகம் பெறுகிறது நடைப்பயணம்.

வழியின் இரு மருங்கும் குரங்குகள் கூட்டம் கூட்டமாய் வழிமறிப்பதுபோல் நின்றுவிட்டு எமது அணியினர் நெருங்கியதும் ஓடி மரங்களில் ஏறின:

மகான் ''அடேய் குரங்கைப் பார்'' என்று ஜெகனைப் பார்த்துச் சொன்னது தான் போதும்.

''உன்ர கூட்டாளிகள் தானே'' என்று குறுக்கிட்டான் சைமன். 'கொல்' என்று நண்பர்கள் சிரித்துக் கொள்கின்றனர்: மகானுக்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் கோபம் வருவதே கிடையாது. 'கிழடு' என்று நண்பர்கள் அவனை அழைப்பார்கள். சிரித்துக்கொண்டு வயோதிபரைப் போல் நடை நடந்து செல்வான், ஒரே சிரிப்புத்தான்.

மகானிடம் காணப்பட்ட தன்னலமின்மையால் அவனில் நண்பர்கள் சொல்லொ அன்பு வைத்திருந்தனர் பகிடிக்கு சண்டை புரிந்து கொண்டவாறே சந்தோஷித்துச் சென்றனர்;

மகான் இப்படி நன்றாகச் செய்வான்; இரண்டு கைகளிலும் கம்பினை எடுத்தால் கையில் கம்பு இருப்பது தெரியாமல் சுழற்றிச் சண்டையிட்டுக் கொள்ளும்போது



தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

எதிரிகள் பலமாக பின்வாங்கி விடுவர். இலம்படி தெரிந்தவர்களுடன் பயிற்சிக்காக சண்டையிடும் போது ரசித்துக் கொண்டே நின்று விடுவோம்.

ஆயுதங்களைக் கையாளும் விதமும் குறிப்பிடத்தக்கதே. அவனுக்கு ஆயுதத்தின் மேல் அலாதிப் பிரியம். சும்மா இருக்கும்போது தூக்கி அணைத்துக் கொண்டு துடைத்துக்கொண்டுமிருப்பான், எல்லோருடைய ஆயுதத்தோடு ஒப்பிடும் போதும் இது மகானுடையது என்று அடித்துக் கூறி விடலாம். அதன் பளபளப்பிலிருந்து.

அவனுடைய வீட்டில் வறுமை நிலையிலும் தமிழினத்தின் விடுதலைக்காக முழுமையாக அவன் பாடுபட்டான்

''மச்சான் டேய் இது சோழர் காடு'' என்றான் வேதா. ''நல்ல வேளை, குசேலன் காடு இல்லைத்தானே' என்றான் பழசு.

டேய் சனியன் சீரியஸா கதைக்கிறன் நீ,......... என்று இழுத்தான் வேதா.

''பெரிய மரங்கள் மட்டுமே நிற்கின்றன. கீழே பசிய புற்கள்தான் பார்? முள்ளுகளே இல்லாத காடு அதனால் அப்படிச் சொல்லிக் கொள்கிறார்களடா'' என வேதா சொல்லி முடித்துக் கொண்டான்.

பழசுவுக்கு காட்டைப்பற்றி ஏதாவது கேட்க வேண்டும் என்ற ஆசை எழுந்தது.

''வேதாவிடம் எப்படிக் கேட்பது? அவர்களிடையே நடந்த அன்பான யுத்த நிகழ்ச்சியை தோழர்கள் கேட்டு ரசித்துக்கொண்டு வருகின்றனர்.

அந்தச் சோழர் காட்டு மரங்களின் இலைகளை காற்று உதிர்த்தியது. எம்மை வாழ்த்தி மலர் தூவியது போல் இருந்தது!

அரையடி நீளமான வாலுள்ள சிட்டுக்குருவியின் உடலமைப்பை ஒத்த குருவிகள் பல வர்ணங்களில் பறந்து கொண்டிருக்கின்றன. சில குருவிகள் மரங்கள் செடிகளில் உள்ள பூக்களைச் சிண்டுவதும் விடு விடு என இறக்கை உதறிப் பறந்தும் செல்கின்றன;

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இந்தக் குருவிகள் கூட சுதந்திரத்தை அனுபவிக்கும் போது நான் மட்டும் எத்தனை நாள் அடிமை வாழ்வு வாழ்வது என்ற கேள்விகள் நிமாலிடம் எழுந்தன.

சுதந்திரக் காற்றை சுவாசிக்க துடித்தது அவனது உள்ளம், எனது நிலம், எனது மொழி'' என உச்சரித்துக் கொண்டு அந்தக் குருவிகள் எதிர்ப்பட்டன. புதிய தென்பைக் கொடுத்துச் சென்றன.

பழசுவும் நிமாலும் அந்த வரிசையில் அருகருகே வந்துகொண்டிருக்கின்றனர். இருவரும் எழில் சுமந்த கானகத்தை எண்ணி வியப்பெய்தினர். நிமால் சாதுவானவன். யாரோடும் அதிகமாக பேச வராது. எதிலும் வெட்டொன்று துண்டிரண்டாக நடந்துகொள்ளும் பண்பினன். பயிற்சியின் போதோ எந்த வேலைகளைச் செய்யும் போதுமோ அலுத்துக் கொள்ள மாட்டான். திடமான உடற்கட்டு வாய்ந்தவன். அவனுக்கு பழசு என்றால் போதும்.

பழசு கொக்கிளாய் இராணுவ முகாம் தாக்குதல் மேற்கொள்ளப் போகிறோம் என்ற சந்தோஷம் மேலிட ''இந்த முகாமைத் தாக்கிவிட்டு திரும்பி உள்ள பொலிஸ் நிலையங்கள் எல்லாம் தகர்த்தெறிவோம்'' என்கிறான். அவனின் கனவுகளை கேட்டுக் கொண்டு நீண்ட களைப்புக்கிடையிலும் சோனி சிரிக்கின்றான். நீண்ட பயணத்திலும் எல்லோரும் களைப்புற்றுத்தான் இருக்கின்றனர்.

'என்னம்மான் வேதா இந்த கட்டயல்களைக் கடந்து கிராமங்களே இல்லையா?'' பழசு கேட்டான். 'இருக்கம்மான் சனங்கள் தான் இல்லை.

நகர்ப்புற கெரில்லா வாழ்க்கை வாழ்ந்த பழசுவுக்கு காட்டுப்புற கெரில்லா வாழ்க்கை நன்கு பிடித்திருந்தது. காட்டுப்புற கெரில்லா வாழ்வின் கஷ்டங்கள் அவனுக்கு தெரியாதன அல்ல. காட்டின் அமைவைப் பொறுத்து சில வேளைகளில் சிறப்பாகவும் அமைந்துவிடுகின்றன.


தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

தடங்களை அழித்துக்கொண்டு வந்தான் கௌடி. சேறு நிறைந்த நிலப்பகுதி: சப்பாத்துக்களை கழற்றி தோளில் இட்டவாறு நடந்து செல்கின்றனர். முழங்காலிற்கு மேல் சேற்றில் கால் புதைந்து ஒருகாலை உன்னி இழுத்து அடுத்த காலைப் புதைத்து அவதிப்பட்டு மெல்ல மெல்ல நகர்கின்றனர். ஓரிடத்தில் வழிதவறிச் சிறிது விலகிய மயூரன் புதைந்துகொண்டே போனான். நெஞ்சுவரை சென்று அப்பால் புதையவில்லை. அவன் பயந்தும் விட்டான்.

அருகில் நின்றவர்களின் உதவியோடு நகரத் தொடங்கினான். அந்தப் பகுதியைக் கடக்க பலமணி நேரங்கள் எடுத்தன. கரை சேர்ந்தவர்கள் புற்களாலும் இலைகளாலும் சேற்றைத் தட்டிக்கொண்டிருக்கின்றனர். 'பாத இறைகளுக்குள் கடி ஏற்பட்டிருந்தது சேற்றுப்பூச்சிகள் தமது தொழிலைச் செய்யத் தொடங்கின; களைப் புற்று மரங்களில் சாய்ந்திருந்து காந்தி அண்ணா யோசித் துக் கொண்டிருந்தார்.

''அடேயப்பா கொஞ்சநேரம் இதில் ஆறிச் செல்வோமே என்றார் காந்தி அண்ணர்.

தோழர்களோடு அண்ணர் கதைத்துக்கொண்டும் சிரித்துக்கொண்டும் நிற்பதை அவதானித்துக் கொண்டு சென்ற வேதாவும் பழசுவும் சிங்கள ராணுவத்தினர் அந்த காட்டுக்குள் வரலாம் என்ற ஐயப்பாட்டில் காவலில் ஈடு பட்டிருந்தனர்.

சப்பாத்துக்கள் பாதங்களை வெட்டியிருந்தன. வேதனையுற்ற பகுதிகளுக்கு காற்றுப்படும்படி செய்து கொண்டிருந்தான் கௌடி. ஆ! வலிக்கிறதே! ...... என்ற சொனியின் முனகல் மகானை அசர வைத்து விடுகிறது.

''என்னடா''? என அன்பாக அவனருகே சென்று ஆறுதல் கூறி அரவணைக்கிறான். காயமடைந்திருந்த பகுதியை சிறு பஞ்சொன்றினால் துப்பரவு செய்து மருந்து இட்டு கட்டி விடுகிறான். ஆயுதங்களை கழற்றி சுத்தம் செய்து கொண்டிருக்கின்றனர் சிலர். படுத்துத் தூங்கிக்கொண்டிருக்கின்றனர் சிலர். காற்று மேலாக வீசிக்கொண்டிருக்கின்றது.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

மரத்தில் சாய்ந்திருந்த சைமன் தனது 'தோல் பைக்குள் இருந்த புத்தகம் ஒன்றை வாசித்துக் கொண்டிருந்தான். உற்றுக் கவனித்தபோது 'பாலஸ்தீனக் கவிதைகள்' என்று எழுத்துக்கள் பளிச்சிட்டன? அப்போது அவன் உச்சரித்துக்கொண்ட சில வரிகள்;

' துயரங்களின் தோழர்களே!
தளையுண்ட நண்பர்களே!
வாருங்கள்
என்றென்றும் தோல்வியுறு
அணிவகுத்துச் செல்வோம்.
நாம் எதையும் இழக்கோம்
நமது சவப்பெட்டிகளைத் தவிர ......

சைமன் ஒரு கவிதைப் பிரியன். அவன் ஒருமுறை கவிஞர் ஒருவரைச் சந்தித்து உரையாடினான். பொழுதுகள் செல்வது தெரியாத உரையாடல். உரையாடல் முடித்து வந்த சைமனின் கவிமழையில் நனைந்த களிப்புகளை கட்டியிருந்தது.

தரையில் ஊர்ந்து சென்ற காட்டுண்ணியை தடிக் குச்சியால் குத்தி நசித்து விடுகிறார். அது மண்ணில் புதைந்து விட்டது. "வெயிற் காலமாய் இருப்பதால் மிருகங்களில் இருந்து அவை தரைக்கு இறங்குகின்றன' என்கிறார் காந்தியண்ணை.

தனது உடலில் இருந்த சில காயத் தழும்புகளைக் காட்டி "இவை உண்ணி கடித்ததால் ஏற்பட்டதாகச் சொல்கிறார். தென்னமரவாடியில் நான்கு பிஸ்கட் துண்டுகளுடன் ஒரு நாட்பூராவும் நடந்து சென்று இரவு தங்கியிருந்த போது அசதியினாலும் களைப்பினாலும் உண்ணி கடித்ததே தெரியவில்லை அம்மான்" என்று காந்தி அண்ணை கூறியதும், மனோனும் கெனடியும் கலக்கத்தோடு பார்த்தனர்.

"திருகோணமலைக்கு போகவேணும் அதற்குள்ளாக நீங்க கொக்கிளாய் இராணுவ முகாமைத் தாக்கப் போறதால் நானும் வரவேணும் என்று ஆசையாக இருந்தது" என்றார் காந்தி அண்ணை.


தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இராணுவத்தினர்மீது தாக்குதலை மேற்கொள்வதில் காந்தி அண்ணுவுக்கு ஒரு அலாதிப்பிரியம். சிங்கள இராணுவத்தினர் அவர் வாழ்ந்த பிரதேசங்களில் தாங்கொணு கொடுமைகள் இழைத்ததை நேரில் கண்டவர். திருகோணமலையில் எமது கெரில்லாத் தளங்களை அமைத்து நிலை கொள்வதற்கும் புதியவர்களை அணுகி படிப்படியாக நம்பிக்கைக்கு உரியவர்களாக மாற்றி, இயக்க வேலைகளை திறம்பட ஆற்றியவர். தளத்தில் இருந்து பலமைல்கள் நடந்தே உணவுப் பொருட்களாயினும் எடுத்து வரவேண்டியிருந்த சமயங்களில் எல்லாம் அவரின் தளராத உழைப்பு மறக்கமுடியாதது

இராணுவத்தினர் தொடர்பான நடமாட்டங்களை அறிந்து தகவல் எடுத்துக்கொண்டு வந்து அடிப்பம் அம்மான், என்று கெஞ்சிக்கொண்டே இருப்பார்.

பதட்டமில்லாதவர்,

சிறிதும் பய உணர்வு அற்றவர்,

எதிரியோடு மோதுவதில் இணையற்றவர்.

காந்தி அண்ணுவால் அறியப்பட்ட இராணுவ நடமாட்டத்தை கட்டுப்படுத்தவேண்டிய நிலை தவிர்க்க முடியாததாக இருந்தது. இல்லையேல் நாம் அப்பிரதேசங்களில் நிலை கொள்வது சிரமத்துக்குரியதாக இருந்திருக்கும்.

இதற்காக திருகோணமலையில் இருந்த இராணுவ முகாம்களின் இராணுவக் கெடுபிடிகளுக்கு மத்தியிலும் தளராத மனத்தோடு அவற்றைக் கடந்து முல்லைத்தீவுக்கு வந்து வெடிமருந்துகளையும் ஆயுதங்களையும் எடுத்துச் சென்ருர் இருபது மைல் தூரம் வரை வெடிமருந்துக்கான்களை தனியாக சுமந்து வந்து சேர்ப்பார்.

அவரோடு யாரும் நடந்து கொள்ள முடியாது. அவ்வளவு நடை. தூர இடங்களுக்கான நகர்வுகளின் போது ஏனையவர்கள் ஓடிச்சென்றுல் தான் அவரோடு செல்லலாம். குதியும், இயங்கு திறனும். இட்ட பணியை பொறுப்பாக இயற்றும் பொறுமையும் அனுபவமும் அவரிடம் காணும் தனி இயல்புகள்.

காந்தியண்ணு உட்பட எல்லோருக்குமே பசியினுல் வந்த களைப்பு. அவர்களின் பசியை உப்பு விஸ்கட்கள்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தீர்த்திருந்தன. இரண்டு மணியாகியிருந்தது. காந்தியண்ணு எழுந்து நடக்கின்ருர்.

அவரைப் பின் தொடர்ந்து அனைவரும் தயாராகிக் கொண்டு சென்று கொண்டிருக்கின்றனர்.

# 5

உப இயந்திரத் துப்பாக்கியை காத்தான் தயார் நிலையில் வைத்திருந்தான்.


வீரர்களிடையே சம்பாஷணைகளும் நிகழ்ந்து கொண்டு தான இருக்கின்றது .வரிசையைப் பார்க்க அழகாக இருக்கின்றது. பச்சை நிறத்தோடு கூடிய உரு மறைப்பு ஆடைகள் இயற் கையோடு ஒன்றியிருந்தன.

நீளமான உரு மறைப்பு காற்சட்டையின் இருகாற்பக்கமும் சாரங்களும் பிஸ்கட்டுகளும் இருந்தன, சேட்டில் இருந்த இரண்டு பைகளிலும் மருந்துப் பொருட்களும், அத்தியா வசியப் பொருட்கள் சிலவும் இருந்தன. காட்டில் நடந்து வரும் போது அவ்வாறே அசையாது ஒழிந்து கொண்டால் யாரும் அங்கு நிற்பதே தெரியாது.

தோளில் ஆயுதங்களைக் கொழுவிக் கொண்டு உயிர்த்துடிப் புள்ள வனத்தில் ஒன்றிச் செல்கின்றனர்.

கடைசியில் காலைக் கெந்திக் கொண்டு ரவி வந் தான். பார்க்கக் கவலையாக இருந்தது. ''என்னம்மான் கெந்திக் கொண்டு'' என்று கேட்டான் காந்தரூபன்'' சூரை முள்ளு தைத்து விட்டது'' என களைப்புடன் பதில் சொன் ஞன். ரவி தோளில் தாங்கிப் பிடித்து கீழே இருத்திஞன் கழுத்தில் கட்டப் பட்டிருந்த கறுப்பு நூலில் தொங்கிய ஊசியை எடுத்தான். உள்ளங்காலை இறுகப்பிடித்து சதைக் குள் ஊசியை இட்டு முள்ளை மேலே தள்ளிஞன். முள்ளு கறுத்த தலையை நீட்டிக் கொண்டு வெளியே வந்தது. இரத் தமும் கசிந்தது. அதனை துடைத்து விட்டு மீண்டும் அமத்தி

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



சிறீமுருகன் (காத்தான்)

5- 03- 1991

பரந்தன்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இரத்தத்தை எடுத்து விட்டு காயத்தில் ஊபிற்றால ஒட்டினான். வலி குறைந்து வருவது ரவியின் முகத்தில் தெரிந்தது.

ரவி எழுந்து நடக்கின்றான். அவனுக்கு சிறிது நேர இருக்கத்தான் செய்தது. ரவிக்கு இந்தக் காயம் பெரிதானதாகவோ? கஷ்டமானதாகவோ? இருக்கவில்லை. ஆயினும் அன்றைக்கு ஏற்பட்டிருந்த பசிக்களை நித்திரையின்மை நடந்த களை, நீண்ட நினைவுகள் யாவும் சேர்ந்திருந்ததால் அவன் சோர்ந்திருக்கலாம். அவனது வாழ்க்கையில் இது போன்ற கஷ்டங்கள் நிகழாமலில்லை. சொகுசான ஆடம்பரமான வாழ்க்கை வாழ்ந்தவனும் இல்லை. அவை மீது அவனுக்கு வெறுப்புத்தான் அதிகம். தனித்துவத்தை விட்டுக்கொடுக்க மாட்டான். இயற்கையாக இருப்பதையே விரும்புவான். முடிவற்ற எல்லைகளைப் பார்த்து தூரத்தே ஒலிக்கும் சோகமான திரை இசைப் பாடல்களை பெரிதும் ரசிப்பான்.

கால் பந்து விளையாட்டு வீரன் இவன். விளையாட்டு மைதானத்தில் இறங்கினால் தனிக் களை களைப்பெழும். சுவாரஷ்யமான விளையாட்டுவீரனும் கூட. எதிர்ப்பக்கத்தில் இருந்து வரும் பந்தை மறித்து உருட்டி ஏய்த்து தன் பகுதியினருக்கு கொடுப்பான். திரும்பி வாங்கத் தயாரா இக் கொள்ளும் அவன் கோலிறக்கும் பாணி மெய்சிலிர்க்க வைக்கும். அது அவனுக்குரியதே. அவ்வாறு [illegible] திரிந்து கிட்டுத் துடிப்பாய் இயங்கு[illegible] அவனது கால்கள் நொந்தும்போது ஏற்படும் வேதனை.......

தோழர்களது கண்கள் சிவப்பாக இருந்தன.... மகானும் காத்தானும் வாக்குவாதப் பட்டுக் கொண்டனர்.

"எல்லாம் இந்த சைமனால் தான்" என்றான் மகான்
"இல்லை நீ தான் எடுத்தனி, தா" என்றான் காத்தான்
சிரித்துக்கொண்ட சைமன் வரிசைக்குள் மறைந்து சிரித்துக்கொண்டு நடந்து வந்தான். காத்தானுக்கு யாரோ கொடுத்திருந்த அழகிய வெள்ளிச் சங்கிலியை சைமன் எடுத்து மகானின் தோல்பையிலிட்டு விட்டான். அது

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

மகானுக்குத் தெரியாது............

ரவிக்கு அவர்கள் பகிடியாக சண்டையிட்டுக் கொள்வது கூட சற்றும் பிடிக்கவில்லை. அவர்களை சந்தோஷப் படுத்துவதற்காக இடையில் சேர்ந்து கொள்கின்றான்.

ஓ! எமது தோழர்களிடையே எத்தனை எத்தனை விதமான இயல்புகள். ஒவ்வொருவரும் அன்பின் பிணைப்பில் இணைக்கப்பட்டிருந்தனர்.

அவர்கள் ஒவ்வொருவரும் வித்தியாசமான புத்தகங்களைப் போன்றவர்கள். அன்பாக சண்டை செய்வார்கள். அன்பாக சச்சரவை நிகழ்த்துவார்கள். அணைப்பும் ஆறுதலும் கூறி அடுத்த கணமே சிரித்தும் மகிழ்வார்கள். யாரும் யாரோடும் கோபித்துக் கொள்வதே கிடையாது.

சாத்தானும் மகானும் சிரிக்கத் தொடங்கினார்கள்!

## 7

தூரத்தே கொக்கிளாய் கிராமம், தென்னைகள் காற்றில் ஆடின. நீண்ட செம்மண்ணிறபாதை அநாதரவாகக் கிடந்தது. எல்லோரும் தென்னந் தோப்பை நெருங்கிக் கொண்டனர்,


பலாமரம், கனிதரும் வேறு பழ மரங்கள், வீட்டுக் கூரைகள் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கிடந்தன.

மாடுகள், ஆடுகள், நாய்கள், அன்பான வளர்ப்புப் பிராணிகள் வெறித்து நின்றன,

சிறு குழந்தைகள் தம் கை அளாவி மணல் விச செய்து முற்றம் குப்பைகள் மண்டிக் கிடந்தன.

அண்ணா, அப்பா, அம்மா என எழுதிய மழலையின் கொப்பி ஒன்று மர இடுக்கில் சொருகிக் கிடந்தது: எத்தனையோ வீரம் மிகுந்தவர்களை உருவாக்கிவிட்டு அந்த கொக்கிளாய் கிராமம் மட்டும் அந்நியர் கெடுபிடியால் செத்துக் கிடந்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



செல்வராசா (மகான்)

26 - 05 - 1962

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தது, யார் அங்கு சென்றாலும் காரணமறியாத வேதனை வாட்டும்.

மண்ணின் மடியில் தோழர்கள் தூங்கலானார்கள் நடந்த களைப்பில் சோர்வுற்றிருந்தவர்கட்கு மண் மெத்தையானது, எந்தச் சுமையும் எமக்கில்லை என்பது போல் கைகளை அகல விரித்துக் கிடந்தனர்.

தனபாலனும் ரவியும் மாமாவும் இலைகளின் விரிப்பில் தூங்கத் தயாரானார்கள்.

காலில்பட்டிருந்த காயங்களின் வேதனையோடு தூங்குகின்றார்கள்.

இளநீர் பறித்துக் கொண்டு வருவதற்காக வேதா குழு சென்றது. அங்கே தமது தோட்டங்களில் பறிப்பதற்காக நின்ற, கிராமத்தவர்கள் எம்மை கண்டதும் ஓட முயன்றார்கள்.

கார்த்தி அண்ணர் அவர்களை சிங்களத்தில் அழைத்தார் சைமன் கார்த்தி அண்ணைவை 'சிங்களவர் தமிழில் பேசுவது போல்' கூப்பிடுமாறு சொன்னான். அவ்வாறே அவர்கள் மீண்டும் அழைக்கப்பட்டனர்.

'தமது உயிருக்கு ஆபத்து வந்து விட்டது, 'நாம் சாகப் போகிறோம்' எங்களை 'ஆமிக்காரர் சுடப் போகிறார்கள் என அவர்கள் அஞ்சியிருக்க வேண்டும். அவர்களின் முகம் மாறிவிட்டது. கண்கள் கலக்கமுறுகின்றன. கைகள் நடுக்கமுறுகின்றன. அந்தப் பெரியவரையும் சிறு குழந்தையையும் பார்க்க முடியாத காந்தரூபன் தலைகுனிந்தவாறு நிலத்தை நோக்கினான். நிச்சயமாக அந்தக் கணங்களில் காந்தரூபனின் முகத்தை கண்டு கொண்டால் அவர்கள் இராணுவத்தினரில்லை என்றே நினைந்து விடுவார்கள்.

அவர்கள் எங்களை யார் என தெரிந்து கொண்டால் கதை பரப்பத் தொடங்கி விடுவார்கள்.

அது எதிரியின் காதுக்கு எட்டிவிட்டால் எல்லாம் போய் விடுமே அதனால் அவர்களை சிறிது வெருட்டவும் செய்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தோடு, அந்தக் குழந்தை முகத்தைப் பார்த்த காந்தருப னில் தாங்கிக் கொள்ளாத வேதனை, என்ன என்று தேட்டறிய வேண்டும் என்ற ஆவலோ என்னவோ! குறைந்தது 'தம்பி' என்றாவது அழைக்க வேண்டும் என்பது போல் துடித்தான். அந்தக் குழந்தை ஏதோ பறிகொடுத்தவனைப் போல் இரண்டு கைகளையும் தூக்கியபடி நிற்பதைப் பார்த்து சகித்துக்கொள்ள முடியவில்லை.

'அவனுக்கு என்ன நடந்தது' என்று கேட்கும்படி காந்தி அண்ணவை வற்புறுத்தினன்.

'சொல்லுவார்களா'' அவர்கள்; எனினும் தழுதழுத்தத குரலில் ''அவனது தாய் இறந்துவிட்டாளோ என்ன நடந்ததோ தெரியவில்லை, இது வரைக்கும் அவனைக் காணவில்லை அதிலிருந்து அவன் ஒரு மாதிரியாகத்தான் ஐயா'' என்றார் அந்தப் பெரியார்.

அவர்கள் நடந்து போவதை வெறித்துப் பார்த்துக்கொண்டு நின்றான் காந்தருபன்

"அந்தப் பெரியவரின் சால்வை நிறத துவாய் தோளில் கிடந்து காற்றுக்கு மெல்ல அசைந்தது. அந்தக் குழந்தை பெரியவரோடு ஓடி ஓடி சேர்ந்து சென்று கொண்டிருந்தான்.

இளநீர்க் கோம்பைகளை மறைத்து விட்டனரும். எல்லோருக்கும் ஏற்பட்டிருந்த நீர்த்தாகம் தணிந்திருந்தது காத்தான் உயரிய மதன்னைமரம் ஒன்றில் முதுகைச்சாய்த்து தவாறு சிந்தனையில் ஆழ்ந்திருந்தான்

இலைகள் வெட்டாது தென்னை ஓலைகளுக்கு ஊடாக கழுவித் துடைத்த வானில் எதைக் கண்டானே?

காத்தானை அந்த நிலையில் பார்க்கும்போது மகனுக்கு தாங்கிக் கொள்ள முடியவில்லை.

''என்னம்மான் யோசிக்கிறேங்க சொல்லம்மான்'' என்று ஆறுதலாக கேட்கிறான்,

''ஒன்றுமில்லையம்மான்'' என்று கூறியவாறு உபயந்திரத் துப்பாக்கியை இறுக அணைத்துக் கொள்கிறான்.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தோழர்களில் சிலர் புளியமரத்தில் ஏறி புளியங் காய்களை ஆய்ந்து சாப்பிட்டுக்கொண்டு நிற்கின்றனர். கொக்கிளாய் இராணுவ முகாம் சில மைல் தூரத்திலே தான் இருக்கிறது. பாதுகாப்பு பலப்பட்டிருந்தது. ஜி 3, ஏ, 8 கள் சகிதம் காவலில் நின்றவர்கள் காட்டில் சிறு சத்தத்திற்கும் காது கொடுத்தனர்.

கண்களை உருட்டி அங்கும் இங்குமாக பார்த்துக் கொண்டு இருந்தனர். அந்த நேரத்தில் கொக்கிளாய் கிராமத்தில் தோழர்கள் நிற்கின்றனர். அங்கு எதைப் பார்த்தாலும் நெஞ்சம் நெகிழவே செய்கிறது. வேலிகள் பிளந்து அலங் கோலமாய் கிடக்கின்றன.

பட்டியில் கட்டப்பட்டிருந்த பசுக்கன்றுகள் அந்த இடங்க ளிலேயே செத்துக் கிடக்கின்றன.

அந்த வீடுகளில் இருந்து பிணவாடை வீசிற்று. எதையும் அறிய வேண்டும் என்ற ஆவல் மிக்க கெனடி அந்த இடம் நோக்கிச் செல்கிறான்.

வீட்டின் கதவுகளைத் திறந்து கொண்ட கெனடி ஒளித்துக் கொண்டு வெளியே வந்தான். அவனைத் தொடர்ந்து தன் னைச் சுதாகரித்துக் கொண்டு சைமன் பார்க்கிறான்.

ஒரு பெண் கழுத்தில் சுருக்கிட்டுக் கொலை செய்யப்பட்டுத் தொங்க விடப்பட்டிருந்தாள்.

அவள் வாழ்ந்த வீடு இன்று அவளின் கல்லறை.
அவள் வீட்டு 'இறப்பி'லேயே அவள் இறப்பும் எழுதப் பட்டிருந்தது. அந்த வீட்டுச் சுவரில் கரியால் சிங்கள வாச கங்கள் எழுதப்பட்டிருந்தன; அவற்றை கறையான் மேய்ந் திருந்தன.

'யார்க்கும் எத்தீங்கும் செய்தறியாத அந்தக் குழந்தை அவன் தாய்க்கு என்ன நடந்ததோ தெரியவில்லை' என்ற பெரியவரின் வாசகங்கள்' நினைவை உறுத்த ஒரு கணம் மலைத்து நின்றான் சைமன். அவனைப் பெற்ற தாய், அவன் பிறந்த மண்; அதற்கு............ இந்தக் கதியா?

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அந்தக் குழந்தை யாரிடம் இனி பரிவைக் காண்பான். அவனைத் தலைசீவி வளர்த்தெடுத்தவள் தலை கவிழ்ந்து தூங்குகிறாளே.

எழுந்து வந்து என் மகனே என்பாளா?
ஆனால் நிச்சயம் நாளை அவனைத் துப்பாக்கி அணைக்கும்.

அவனும் நாளை காடு மேடுகளில் அலைவான். விடுதலைத் தீ ஓங்கி வளரும் என நினைத்துக் கொண்டான்''

''அந்தப் பெண் இராணுவத்தினரால் கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டிருக்க வேண்டும்'' என்றான் வேதா

அந்தக் கிராமத்தில் இழையோடி நின்ற துயரங்களைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.
கிணற்றில் நீரள்ளுவது போல் விழுந்து கிடக்கும் துலா. இன்னும் வேலிச் கயிற்றில் தொங்கி ஆடிக்கொண்டிருக்கும் ஆடைகள், தூசு மண்டிக்கிடக்கும் வீடுகள், பாதி உண்டு காய்ந்து கிடக்கும் உணவு.

கிராமிய பண்பாட்டு உறைவிடங்களான முல்லைத்தீவின் கரையோரமாக இருந்த கிராமங்களின் அழிவுகள் மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவரது நெஞ்சையும் அழியா வடுக்களாகி விட்டன.

மின் மினிப்பூச்சிகள் மரத்தின் ஒளிகாலும் சில இடங்கள மரங்களில் படர்ந்திருந்த பூஞ்சணங்களில் சிந்திய ஒளியின் பின்னணியில் எல்லோரின் முகங்களும் மங்கலாய்த் தெரிகின்றன. காற்று ஊ ஊ ... என்று இரைந்து கொண்டிருக்கின்றது, கதைக்கும் சத்தம் மெதுவாக கேட்டுக் கொண்டிருக்கின்றது.


தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கொக்கிளாய் இராணுவ முகாம் மீதான இராணுவ ஆராய்வை அருகே உள்ள செடிகளோடு ஒன்றியிருந்தது. பனிக்குளிரில் விறைத்திருந்தும் நுளம்புக் கடிகளின் உபாதைகளோடும் இரவு காலங்களில் அந்த முகாம் பற்றிய ஆய்வுகள் திரட்டப் பெற்றிருந்தன. சகல நிலைகளில் இருந்தும் நிதானமாக மேற்கொள்ளப்பட்ட தகவல்களில் அந்த முகாம்களிலுள்ள சிங்கள இராணுவத்தினரின் பழக்க வழக்கங்களைக் கூட அறிந்திருந்தனர்.

முகாமிலுள்ள பதுங்கு குழிகள், முள்ளுக் கம்பி வேலிகள் பாதுகாப்பு அரண்கள், மண்மூடைகள், முகாமின் அண்ணளவான பரப்பளவு என்பனவற்றையும் இராணுவ வீரர்களின் தொகை அவர்கள் உபயோகப்படுத்தும் ஆயுதங்கள் என்பன பற்றிக் கணிசமான அளவு தகவல் திரட்டி இருந்தனர்

கடைசி நேரம் வரை திரட்டப்பட்ட தகவலின்படி முழுமை மிக்க இராணுவ முகாம் மாதிரி தயாரிக்கப்பட்டது. இம் மாதிரியை வைத்தே தாக்கும் அணியினருக்கு விளக்கம் கொடுக்கப்பட்டது இராணுவ முகாம் பற்றிய முழுத் தகவல்களையும் அண்ணர் எடுத்துக் கூறினார்.

இராணுவ முகாம் தாக்குதலின் போது முல்லைத் தீவு இராணுவ முகாமில் இருந்து இராணுவத்தினருக்கு கிடைத்து இருக்கும் உதவியை தடை செய்வதற்காக நாயாற்றுப் பாலத்தருகில் தடுப்புக் குழுவும் தயாராக்கப்பட்ட மருத்துவக்குழு கூடும் குழுவிலேயே அங்கம் வகித்தது. வானத்தை நோக்கி இயந்திரத் துப்பாக்கிகள் நீண்டு கொண்டிருந்தன. அங்கே நிசப்தம் நிலவியது.

எல்லோர் மனதிலும் இனம்புரியாத உணர்வுகள் சூழ்ந்தன. கொக்கிளாய் இராணுவ முகாமைத் தாக்கப் போகிறோம் என்ற சந்தோஷம் எல்லோரிடமும் காணப்பட்டது. தாக்குதலுக்கு அழைத்துச் செல்லாது வீரர்கள் சிலர் நின்றனர்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அவர்களில் ஒரு வீரன் 'தானும் வரப்போவதாக அழுது கொண்டிருந்தான். ஒதுக்குப்புறமாக இருந்து மூஞ்சியை நீட்டிக் கொண்டிருந்தவனை அண்ணர் கண்டு கொண்டதனால் ''சரி வாடாப்பா என அழைத்தார்

இவ்வாறு அண்ணர் அழைத்தபோது எங்கிருந்துதான் அவனுக்குச்சிரிப்பு வந்ததோ..........

இரவிலேயே தாக்குவதாக முடிவெடுக்கப்பட்டது. இரவு வேளைகளில் நாம் நகரும்போது அவர்கள் கண்டு கொள்ளும் வாய்ப்பைக் குறைக்க வேண்டு மென்பதாலும் இரவு தாக்குதலை நிகழ்த்த திட்டமிடப் பட்டது. எல்லோருக்கும் தேவையான அளவு ரவைகள் வழங்கப்பட்டன. குண்டுகள், லோஞ்சருக்கு தேவையான செல் என்பனவும் கொடுக்கப்பட்டிருந்தன,

வெள்ளையன் தனது லோஞ்சரை எடுத்து முழங்காலில் இருந்துகொண்டு தடித்த மரத்தை நோக்கிக் குறி பார்த்தான். மரத் தோப்புகளின் பசும்புத் தரைகளின் கீழ் அவனிருந்த நிலை கண்களில் நிழலாடுகின்றன. அந்த நிலையை அப்படியே கமரா படம் பிடித்து விடுகிறது,

வெள்ளையன் வீரம்மிகுந்த பல தாக்குதல்களை நிகழ்த்தியிருக்கிறான்' பலாலி ராணுவ முகாமில் ஹெலி கொப்ரர் மீதான ஏவுகணைத் தாக்குதல் வாசனும் வெள்ளையுமாக மேற்கொண்ட திர வரலாறு.


ஆயிரக்கணக்கானவர்களின் ஆயுத முகாம் நவீன யந்திரத் துப்பாக்கிகள் கவச வாகனங்கள் சூழநிற்க துணிந்து நின்று மோதிய நினைவுதான் அந்தக் கணங்களில் எழுகின்றன, அவர்களை எம்மால் மறக்க முடியுமா?.........

# 8

கிராமத்திலிருந்து முகாமை நோக்கி எல்லோரும் நகரத் தொடங்கினர். சில மைல் தூரத்திலே. முகாம்



தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive



செல்வராசா (கெனடி)

வயது - 23

கிரான்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இருப்பதால் நிதானமாக நகர்ந்து கொண்டிருக்கின்றனர். கெனடி சருகுகளை மிதித்து விடுகிறான்;

காட்டில் யாரோ ஏதோ முறிப்பதுபோன்ற சத்தம் அங்கு நிலவிய அமைதியைக் கிழித்து விடுகிறது.

முகாமை வழிகாட்டிச் செல்பவரின் முதுகில் வெள்ளை நிற அட்டை கட்டப்பட்டிருந்தது இருளில் வெள்ளை நிறம் பிரகாசமாக தெரியுமென்பதாலேயே அது அணியப்பட்டிருந்தது,

அந்த வெள்ளை நிறம் சைமனின் பார்வையில் படுகிறது. ''அவன் அதிக தூரத்திற்கு போய் விட்டான்'' என்று கூறினான் சைமன். தனபால் மரத்தோடு ஒளிந்து நின்றவாறு சந்தேகத்தோடு காட்டைப் பார்க்கிறான், இரவு வேளைகளில் இராணுவத்தினர் மிருகங்களை வேட்டையாட வருவதுண்டு.

அவ்வாறு அவர்களில் சிலர் வந்திருந்தால் எமது அசைவைக் கண்டு கொள்ள வாய்ப்புண்டு. இதனால் முகாமை தாக்கும் முயற்சி தோல்வி அடைந்து விடும். எனவே ஒவ்வொரு அசைவும் பாதுகாப்பை முதன்மைப்படுத்தி ஜாக்கிரதையுடன் நிகழ்ந்தது.

சேறு நிறைந்த நிலப்பகுதி எதிர்ப்பட்டது. சேற்றில் கால் புதைந்து நடக்கும் போது சத்தம் எழுவதைக் குறைப்பதற்காக மிக மெதுவாக அசைந்து கொண்டிருக்கின்றனர். இதனால் அந்தப் பகுதியைக் கடக்க பல மணி நேரங்கள் தேவைப்பட்டது.

மரங்கள் ஆடவில்லை காற்று வீசவில்லை. மின்மினிப் பூச்சிகள் ஒளிப் பொட்டுக்களை ஏந்திக் கொண்டு குறுக்கு மறுக்குமாக பறந்து கொண்டிருக்கின்றன. சில் வண்டுகளின் ரீங்காரம் காட்டின் ஹிருதயத்தின் மெல்லிய அதிர்வால் ஒலித்தது. செடிகளை விலக்கிக் கொண்டு நுழைந்த வீரன் ஒருவன் 'ஐயோ'' என்றான் மிக மெதுவாக, பின்னோக்கி வந்த வீரன் அந்தப் பாளையை விலக்கிப் போகுமாறு சொன்னான். அந்தச் செடியில் கூடுகட்டிவி

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ருந்த குளவிகள் கலேந்து தாக்கியிருந்தன. தாங்கமுடியாத வலி அவனுக்கு ஏற்பட்டு இருந்தது.

குளவி கன்னத்தில் குத்தியிருந்ததால் அவனால் பேசுவதற்கே முடியவில்லே, நடந்து சென்ற இடத்தில் தடைகளற்ற பாதைகளாக இருந்தமையால் கால்களே தனது போக்கில் விட்டிருந்தான் வேதா.

அந்த நேரத்தில் மரம் ஒன்றின் அடிக்கட்டை பலமாக தாக்கி விடுகிறது. நல்ல வேளேயாக காயம் ஏதும் ஏற்படவில்லே.

என்னடாப்பா இன்னும் காம்பைக் (Camp) காணவேயில்லே'' என்று முணு முணுத்தவாறு காந்தரூபனுக்கு அருகாகச் சென்று கொண்டிருக்கிருன் வேதா.

வேதாவின் கதையை ஆமோதிப்பது போல் லேயிற்வெளிச்சம் தெரியும் ஏதையும் காணவில்லே என்ருன் காந்தரூபன் ஆள் நடமாட்டங்களே உணர்ந்த ஆட்காட்டி காழ் காழ் என்று கத்திற்று. ''சனியன் காட்டிக் கொடுத்து விடப் போகிறது'' என்று நச்சரித்தான் வேதா,

ஆட்காட்டிக் குருவி பறந்து கத்திக் கொண்டால் அது கத்துமிடத்தில் மிருகங்களோ? அல்லது மனிதர்களோ? நடமாடுவதாக ஊகிக்கச் சந்தர்ப்பமுண்டு.

அது சிறிது தூரம் பறந்து சென்று மண்ணில் இருந்து விடுகிறது.

''கோல்சர்'' பட்டிகள் (ரவைக் கூடுகள்) செடிகளோடு உராசும் சத்தம் கேட்டுக்கொண்டிருக்கின்றது.


அதிக தூரம் நடந்திருப்பதால் எல்லோருக்கும் கால்களில் வலி ஏற்பட்டு இருந்தது.

உடல் அடித்து முறித்திருப்பது போன்ற உணர்வு ஒவ்வோர் அசைவிலும் தென்பட்டது.

குதிக்காலில் முள் தைத்திருந்ததால் நுனிப்பாதத்தால் ''கெந்திக்'' கொண்டு வருகின்ருன் ரவி.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



சண்முகநாதன் (றஞ்சன், மாமா)

*16 – 01 – 1931*

கல்லடைவெளி

Tamileelam Archive

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

வெண்மணற் பகுதிகளூடாக செல்லும்போது மணற் பகுதியில் பாதங்களில் ஏற்பட்ட சொர சொரப்பான அழுத்தம் காலுக்கு ''ஒத்தடம்'' கொடுப்பது போல் இருந்தது. அந்த வெண்மணற் பரப்பிலேயே உடலை அழுத்தி உறங்க வேண்டும் போலிருந்தது.

சூடான வெப்பக் காற்றை வீசியது அந்த மணற் பகுதி. தூரத்தே மின் வெளிச்சங்கள் தெரிந்தன. எல்லோரது கண்களிலும் தெரிந்த அந்த ஒளி புத்துணர்வைப் பொங்கச் செய்தது.

கெனடி ''டேய் தனபால் இது தான் (Camp) வெளிச்சமடா என்முன்.

கரை தெரியாது அலைந்த படகு திடீரென கலங்கரையைச் சந்தித்த சந்தோஷத்தை விட பன்மடங்கு சந்தோஷத்தை அனுபவித்தனர்.

முகாமை அண்மிக்க சிறிது தூரத்திற்கு முன்னர் குழுக்களை பிரியும் படி கூறப்பட்டிருந்தது.

அதற்கான தகவல்களை மீண்டும் வோக்கிரோக்கி ஒலித்தது. ஜெனரேட்டர் இரைச்சல் பலமாக கேட்டுக் கொண்டிருந்தது. சிறிது சிறிதாக ஜெனரேட்டர் சத்தம் அதிகரித்துக் கொண்டே போனது. இதனால் ஓரளவு விரைவாக நகரக் கூடியதாக இருந்தது.

# 9

முகாமைச் சுற்றி நவீன யந்திரத் துப்பாக்கிகள் நீண்டு கொண்டிருக்கின்றன; வீரக்கனல் தெறிக்கும் பார்வைகள் முகாமை சூழ்ந்திருந்தன;

நேரம் பன்னிரண்டு மணிக்கு மேலாகியிருந்தது.

உறக்கமோ நடந்த களையோ அவர்களுக்கு அப்போது தெரியவில்லை முகாமின் சகல பகுதிகளும் ஒளி பாய்ச்சுகின்ற

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

றன: படுத்தவாறே சுற்றிலை எடுத்திருந்த இடங்களில் நின்ற செடி, கொடிகள் சிறு மரங்கள் தம் கரங்களால் தழுவின; கரும் சடை விரித்து உறைந்து போயிருந்தது இருள்.

இராணுவ முகாமை வெற்றிகரமாக தாக்கி முடிப்போம் என்ற நம்பிக்கை எல்லோரிலும் சுடர் விட்டெரிந்தது. முகாமை அண்மித்திருந்த கடல் ஆர்ப்பரித்தது. அலை கடலின் ஓசைகள் காதில் ஒலித்தன,

எந்தக் கணமும் தாக்குதலை நிகழ்த்த தயாராய் விழித்திருந்தனர் வெள்ளையனின் ஏவுகணை ஜெனரேட்டரை எப்போது குறிபார்க்கும் என ஆவலோடு காத்திருக்கின்றனர். புதிய வீரமிகு வரலாற்றை எழுத துடித்துக் கொண்டிருக்கின்றனர். எமது மக்களின் சொல்லொணாத் துயரங்களுக்குக் காலாக இருந்தவர்களின் சிறிலங்கா இனவெறியரசால் நீட்டப்படும் பணமுடிப்புக்கும் வேறு சலுகைகளுக்காகவும் கூதல் காய்ந்தவர்களின் உதிரம் கறை படியப் போகிறது.

தாக்குதல் குழுவினர் முகாமுள் நுழைவதற்காக தடைகளை வெட்டிக் கொண்டிருக்கின்றனர். தலைப்பின்னல் போன்று வழிமறித்துக் கிடந்த முள்ளுக்கம்பி வேலி அறுந்து விழுகின்றது. சடக் சடக் என்ற சத்தம் கேட்டுக் கொண்டிருக்கின்றது. வேறு திசையாலும் தாக்குதலணியினர் நகர்ந்து கொண்டிருக்கின்றனர். பழசுவிகை குழு முழங்கையால் மண்ணில் உந்தியவாறு தோளை உயர்த்தி கைகளில் ஆயுதமேந்தி நகர்ந்து கொண்டிருக்கின்றது.

முழங்கையை சிறு கற்கள் குத்தி விடுகின்றன.

சிந்திய இரத்தத்தோடு மண் ஒட்டி வலுவேறுகிற கரங்கள் கால்கள் தரையில் இழுபட்டுக் கொண்டு வரும் போது முட்கள் கீறி விடுகின்றன,

அந்த நேரத்தில் யாரும் அதனை நோக்கவில்லை, விழிகள் முகாமைத் துருவித் துருவி ஆய்ந்தன. சிறுசத்தம் கூட

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

விரைந்து விடுவதை ஒருவரும் அனுமதிக்கவில்லை. எச்சரிக்கையோடு நகர்ந்து கொண்டிருக்கின்றனர்.

'தடாம்'! என்று வானியை எடுக்கும் சத்தம் கேட்கின்றது. அந்த விநாடி பழசுவின் குழு உறைந்து போய் நிற்கின்றது. மேலும சப்பாத்துக் கால்கள் நிலத்தில் உராசி வரும சத்தம் கேட்கின்றது,
ஒரு இராணுவ வீரன்,

அவன்பின் ஓடிவந்த நாய் லொள்! ... ..எனக்குரைக்கின்றது. மலகூடத்தை நோக்கி வந்த இராணுவத்தினன் பழசு குழு நின்ற திசை நோக்கி எஸ். எம். ஜி. ஆல் சடசடத்து விட்டு முகாமில் உள்ள இராணுவத்தினர்களின் பெயரைக் கூப்பிட்டுக்கொண்டு ஓடுகின்முன்,

பழசு குழுவினரில் சொனியின் தலையில் குண்டு பாய்கின்றது. அவனுக்கு அருஇல் சங்கரியும் காயமுறுகின்முன்.சொனி தலையை மண்ணில் புதைத்து ''அம்மா!'' ...... என்முன். அந்தச் சத்தம் மிருந்தவேதனை உற்று எழுந்தது இதயத்துடிப்பு நின்றுவிடாதிருந்தது. கொர்! ... .. கொர்.. ! என்ற சத்தத்தோடு இரத்தம் பீறிட்டு மண்ணில் பாய்கின்றது.

சங்கரியின் உடல் செங்குருதியால் தோய்ந்து கிடக்கின்றது, பழசு தன்னேடும் வழி நீட்டும் நடந்து வந்த தோழர்களின் நிலையைக்கண்டு துடித்துப் போகிமுன்.
அவனது வோக்கி ரோக்கி எல்லாத்திக்கும் செய்தியை சொல்கின்றது.
அவர்கள் அனைவரின் முகங்களிலும் கவலை தோய்கின்றது. அந்த விநாடி அவர்கள் அடைந்த வேதனை...... ....

சொனிக்கு தாயைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை நெடுநாளாய் கிடந்தது,

''நான் செத்துப் போயிற்று அம்மாவுக்கு சொல்லு மச்சான்'' என்ற அவனது வார்த்தைகள் நினைவில் சூழ்ந்து கொல்கின்றன. அந்த வீரமறவர்களின் வாழ்வின் முடிவை

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

நேரில் கண்டு கொள்ள யாரால் தான் முடியும்.

காடு மேடுகளில் எல்லாம் சுதந்திரப் பயிரின் வளர்வுக்காக நான், தேதி தெரியாதல்லவா அலைந்தார்கள்.

கவலை தோய்ந்த நாட்களிலும் நிலை குலையாதல்லவா நின்றனர்.

அவர்கள் நடந்த பாதைகள்............

அவர்கள் பதித்த தடயங்கள்........... அழிந்து விடப்போவதில்லை. முன்னோடிகள் கடந்த சுவடுகள் இன்னும் அவர் நெஞ்சங்களில்.

சங்கரி முணகிக் கொண்டு தவித்தாள்.

எந்தத் துயரங்களையும் வேதனைகளையும் தாங்கிக் கொள்ளும் மனோ வலிமை மிக்க அவன் வறுமைமிக்க ஒரு குடும்ப நிலையில் இருந்தும் தன்னை விடுதலைக்காக முழுமையாக அர்ப்பணித்தவன்!

அவனது தாய் ''வெளிநாடு செல்லும்படி அவனைக் கேட்டாள்''

அப்போது அவன் ''என்னம்மா இது'' என்று தாயை அனுதாபத்தோடு நோக்கினான்.


அயல் வீட்டில் தானே ''மரண ஓலம்'' கேட்கிறது இருந்து விட முடியுமா அவனால்

சிறந்த போர்க்குணம் மிக்க இவன் இராணுவத்தினரை நேருக்கு நேர் எதிர் கொண்டு போராடிய வீர வரலாறுகள் மறந்து விட முடியுமா?

கடலில் எமது நடவடிக்கைகளை எந்த நேரத்திலும் சலிக்காது செய்து முடிப்பான். அதிக நிறையுள்ள யந்திரங்களை தனியாக சுமந்து செல்வான். படகை கரையிழுத்து நிறுத்தும் போது வலுவேறிய கரங்களில் தசைகள் திரண்டு முறுக்கேறி நிற்கும்,

முற்கோபக்காரனாக இருந்தாலும் இரக்கமுள்ளவன். தனது தோழர்கள் யாராவது துக்கித்து இருப்பதைச் சகித்துக்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



**அன்ரனி (சொனி)**

வயது — 19

நுணாவில்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கொள்ள மாட்டான். இவ்வாறான நற்குண இயல்புகளை எல்லாம் கொண்டிருந்த எமது தோழர்களை இழந்து விட்ட நாம் வெற்றிகரமாக பின்வாங்கியிருக்கலாம். அவ்வாறு நாம் நடந்து கொண்டிருந்தால் எமது மண்ணில் வேதனைக ளுக்கு அந்த நடவடிக்கை மீட்பளித்திருக்குமா?

# 10

கொஞ்சமா இம்மண்ணின் வேதனைகள்.........?

முல்லைத்தீவின் கரையோரக் கிராமங்களில் ஏற்பட்ட சொல் லொணாத் துயரங்கள் இன்னும் தொடர்கின்றன.

அகதிகள் முகாம்களிலே தமது எதிர்கால வாழ்வு எப்படி அமையுமோ என்ற அங்கலாய்ப்பு அம்மக்களை வாட்டுகிறது. தமிழ் மக்களின் பொருளாதாரம், கல்வி, கலை, கலாச்சா ரம் அனைத்தும் அங்கே பறிக்கப்பட்டதோடு பாரம் பரிய மாய் வாழ்ந்து வந்த பண்பாட்டு ஊற்றுக்களாக விளங்கிய அந்தக் கிராமங்களை தடை செய்யப்பட்ட பிரதேசமாக சிறிலங்கா இன வெறியரசு பிரகடனம் செய்தது.

இதன் பின்னர்;

அங்குள்ள தமிழ் மககள் வியர்வை நீக்கி முழு உழைப்பை யும் நல்கி வளர்த்தெடுத்திருந்த அந்தக் கிராமத்தின் முழு வளங்களையும் அனுபவிக்க முடியாமல் வெளியேறி விட்ட னர்.

யாரும் அங்கு வாழ முடியாது. உட்செல்ல முடியாது. உட் செல்பவர்கள் எல்லாம் 'தெரு நாய்களைப்' போல் சுட்டுக் கொல்லப்படுகின்றனர்.

முழு மக்களினதும் உழைப்பிலும் உருக்கொண்டிருந்த அந் தக் கிராமம் காடையர் கூட்டத்தின் குடியிருப்புகளாக விலங்குகளின் பண்ணைகளாக மாறப் போகிறது. ஆயுதம்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தரித்த நிலையில் எமது பிரதேசங்களை ஆக்கிரமித்து விட திட்டமிட்ட அரசின் நடவடிக்கைகளினால்......... அலம்பில் கருநாட்டுக்கேணி, கொக்கிளாய், கொக்குத் தொடுவாய் தென்னை மரவாடி போன்ற தமிழ் கிராமங்களில் தொடர்கின்றன.

முல்லைத்தீவின் கிராமங்களில் புகுந்த இவர்களின் இராணுவ அராஜகம் தலைக்கு மீறியது. கோரத் தாண்டவம் ஆடினர். எழில் சுமந்த அந்த கிராமத்தின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. அவர்களின் உடைகள் சூறையாடப்பட்டன.

எத்தனையோ உயிர்களை பலி எடுத்தார்கள். எங்கும் எலும்புக் கூடுகளும் மண்டை ஓடுகளுமாக நிறைந்து மயானமாகி விட்ட அப்பிரதேசங்களில் இன்னும் பிண வாடை அகலவேயில்லை.

எமது மக்கள் முடிவற்ற சோகத்தை அனுபவிக்கிறார்கள். கற்பழிக்கப்பட்ட சகோதரிகள், விதவைகளாக்கப்பட்ட பெண்கள், சிறுவர்கள், வயோதிபர் கூட கொலை வெறித்தனத்தில் சிக்கினர். வாழ்வில் துயரமும் வேதனையையும் அனுபவிக்கும் எமது மக்களின் நிலையை எம்மால் எவ்வளவுக்குத்தான் சகித்துக் கொள்ள முடியும்...?

எமது மண்ணில் தொடர்ந்தும் வேதனைகளும் துன்பங்களுமே நிறைந்திருப்பதை தொடர்ந்தும் தாங்கிக் கொள்ள முடியுமா? நாம் வாழ்ந்த பிரதேசங்கள் பறிபோவதை அனுமதிக்க முடியுமா?


எமது சுதந்திர தாகத்தை இவர்கள் அடக்கிவிட முயல பல வழிகளை கையாளுகிறார்கள். இக்கிராமங்களின் அழிவுகள் அந்த வகையான அந்நியப் படுத்தலின் கோர முகங்களைத் தான் காட்டிக்கொண்டிருந்தன. ''எந்த நிலையிலும் துவழாது எமது போராட்டத்தை முன்னெடுப்போம்.''

எமது மக்களிலிருந்து எம்மை அந்நியப் படுத்த இவர்கள் எடுத்த முயற்சி இதுமட்டுமன்று. இன்னு பல.

மொசாட் பயங்கரவாதக் கூட்டோடு இணைந்து செயற்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



வரேந்திரன் (தனபாலன்)

வயது - 19

காரைநகர்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

பட்டு வருமிவர்கள் தொடர்ந்தும் 'தமிழீழத்தில்' தலை குனிவர். தலை குனிந்து வருகின்றனர்.

முல்லைத்தீவு மண்ணில் சிங்களக் காடையர்களை குடியேற்றி அவர்களுக்கு பாதுகாப்பும் உறுதுணையுமாக நாம் இருப்போம் என உறுதி பகன்றவர்கள்தான் இந்த கொக்கிளாய் இராணுவ முகாமினர்.

இந்த இராணுவத்தினரே முல்லைத்தீவு மண்ணின் முழுமையான துயரங்களுக்கும் வழி சமைத்தவர்கள்.
இந்த நிலையில் தான் எமக்கு ஏற்பட்டிருந்த இழப்போடும் நாம் தொடர்ந்தும் இராணுவத்தினரோடு சண்டையிட்டோம்.

# 11

உக்கிரமான சண்டை நடந்து கொண்டிருக்கின்றது. டுமீல்......டுமீல்......சட சட சட.........சட தடு தடுத் திடு திடுத் முகாமைச் சுற்றி நின்ற சுடும் குழுவினரின் பிரிவுகள் வேகமாக இயங்கிக் கொண்டிருக்கின்றது. நான்கு திசைகளிலும் இருந்து தீயைக் கக்கிக்கொண்டு சென்ற ஏவுகணைகள் முகாமின் சுவரில் மோதிபலத்த சத்தத்தோடு வெடிக்கின்றன. துப்பாக்கிக் குண்டுகள் எதிரியை நோக்கிப் பாய்கின்றன.

பழசு குழுவினர் முகாமின் மலகூடத்துக்கு அண்மையிலும் கருங்காலி மரம் ஒன்றுக்கருகிலும் பாதுகாப்பு எடுத்திருந்தனர். பழசு குழுவினரின் தாக்குதல் பயங்கரமாக நடந்து கொண்டிருக்கின்றது.

எறி...... சுடு......என்ற வார்த்தைகள் எழுந்து கொண்டிருக்கின்றது. பழசு இடுப்பில் சொருகியிருந்த கிறனேட்டை எடுத்து கிளிப்பை இழுத்து முகாமை நோக்கி எறிகின்றான். அந்தக்குண்டு முகாம் கோலுள் விழுந்து வெடித்துச் சிதறுகின்றது.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

''மகே அம்மே'' என்று இராணுவத்தினர் கதறும் சத்தம் கேட்கின்றது. அந்த ஒலிகள் முகாமின் அவலமான நிலையைக் காட்டிற்று.

சிங்கள இராணுவத்தினர் தனது தோழர்களை பலிஎடுத்ததற்காக பழி வாங்கி விட்ட சந்தோஷம் அவனில் குடி கொள்கின்றது.

எமது தரப்பினர் மேலும் புது வேகம் பெறுகின்றனர். முகாமை நெருங்குவதற்காக சுடுவதும் ஓரடி முன்னேறுவதுமாக நிற்கின்றனர்.

முகாமின் மைதானப் பக்கமாக எமது சுடும் குழு ஒன்று நிற்கின்றது. அவ்விடம் நோக்கி எதிரியின் துப்பாக்கிகள் இயங்குகின்றன. அந்த விநாடி அங்கு நின்ற சிறு மரச் செடிகள் முறிந்து வீழுகின்றன. சிறிது விலகி குண்டு ஒன்று சென்றிருக்குமானால் ஒரு தோழன் உயிரோடு பேராடியிருப்பான். நல்ல வேளையாக அவன் தப்பித்துக் கொள்கிறான். தன்னைச் சுதாகரித்துக் கொண்டு தரையோடு உடலை ஒட்டி வைத்து எம் பதிறை தானியங்கித் துப்பாக்கியின் அடிப் பாகத்தை தோளோடு இறுக அழுத்திக் கொண்டான்.

இரு பக்கமும் தொடர்ச்சியாக கடும் சமர் நடந்து கொண்டிருக்கின்றது. முகாமிருளில் மூழ்கிக் கிடக்கின்றது. அங்கிருந்து துப்பாக்கிச் சூடுகள் வரும் போது மட்டுமே ஒளிப்பிழம்புகள் தெரிந்தன.

ஒளிப்பிழம்புகளை நோக்கி தாக்கும் அணியினர் சுட்டுக்கொண்டிருக்கின்றனர். தாக்குதலணியில் தலைமை தாங்கும் ஒவ்வொரு பிரிவினரும் கட்டளை இட்டு தாக்குதல் வீரர்களோடு முன்னேறிக் கொண்டிருக்கின்றனர்.

ஒரு வீரன் உரத்த சத்தத்தோடு இராணுவத்தினரை தூஷிக்கிறான்.

தனது வெற்று ரவைக் கூட்டை நிரப்புதற்காக கோல்சர் பட்டிகளிலிருந்து கையில் அகப்படும் ரவைகளை அள்ளி விரைவாக நிரப்பிக் கொண்டிருக்கிறான்: அந்த சமயம் அவ


தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

னுக்கு அருகில் துப்பாக்கிக்குண்டு ஒன்று மண்ணை நோக்கிச் செல்கிறது.

அவன் ஒருகணப் பொழுது தனக்கு நேர இருந்த விபத்தைப் பற்றிச் சிந்தித்தான்.

மண்மூடைகளில் பாதுகாப்பை ஏற்படுத்திக் கொண்டவர்கள் சிறிதும் நகரவேயில்லை. அங்கு இருந்து கொண்டே L.M.G. எல். எம். ஜி, எம். எம். ஜி. போன்ற இயந்திரத் துப்பாக்கிகளை இயக்கிக் கொண்டிருக்கின்றனர். இந்த நிலைகளை நோக்கி றொக்கட் லோஞ்சர்கள் இயங்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

தாக்குதலின் போது எங்கு தொய்வு ஏற்படுகிறதோ அங்கு சென்று உதவுவதற்காக இருந்த விசேட அதிரடிப் படைப் பிரிவுக்கு செய்தி கொடுக்கப்படுகின்றது. அந்தக் குழு சுடும் பிரிவில் நின்று இயங்கிக் கொண்டிருந்தது. இக் குழுவில் குறிதவறாத துப்பாக்கி சுடுகின்றனர். சிறந்த தாக்குதல் வீரர்கள் களத்தில் பல தடவை ராணுவத்தினரோடு மோதிய அனுபவஸ்தர்களே அடங்கியிருந்தனர். அங்கிருந்து தீயைக் கக்கிக் கொண்டு மிகப் பதிவாக வீரர்களின் தலைகளுக்கு மேலாக சென்ற ஏவுகணை மண்மூடை அடுக்கப்பட்டிருந்த சுவரில் மோதுகிறது. மண்ணை அள்ளிச் சென்று புகை மண்டலம் ஒன்றையே ஏற்படுத்தி விட்டது. அந்த இடத்தில் இருந்து துப்பாக்கி சூடுகள் வருவது நின்று விடுகின்றன. அப்பகுதியில் நின்ற இராணுவத்தினர் கொல்லையுண்டிருக்கலாம்.

தாக்குதலணியில் நின்ற வீரன் ஒருவன் ஓடிச் சென்று பார்ப்பதற்காக எழுவதும்; தரையோடு விழுந்து படுத்து விடுவதுமாக இருந்தான். அவ்வாறு அவன் செல்வதற்கு உள்ளம் சம்மதிக்கவில்லை. பெரிய போராட்டம் ஒன்றை நடாத்தி விட்டு ஏனையவர்களின் துப்பாக்கிப் பிரயோகங்களைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஒரு மணி நேரமாக நடந்த தாக்குதலில் எமது தரப்பிலிருந்து துப்பாக்கிச் சூடுகளை குறைத்துக் கொண்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

டோம். அந்தக் கணம் பொழுதுகளில் எதிரி 'எமது பலம் குறைந்து விட்டதாகவோ நாம் தோற்றுவிட்டதாகவோ' ஒரு முறை நினைத்திருக்க வேண்டும் அவ்வாறு அவன் எண்ணிக் கொண்டானோ என்னவோ? அங்கிருந்து பலத்த குண்டு மாரி பொழியத் தொடங்கிற்று. சிறிது பொறுத்துக் கொள்கின்றோம். அது அவர்களை பன்மடங்கு வளர விடுவதாக இருந்து விடுகின்றது. இந்த நிலையில் றொக்கட் செலுத்தும் பிரிவு இயங்க வேண்டி இருந்தது. எழுந்து நின்றால் உடலில் குண்டு பாயும் அபாய நிலை அங்கு இருந்தது. எனினும் அவர்களின் தாக்குதலை முறியடிக்க அதுவே வழியாக்கப்பட்டது.

திடமான உடற்கட்டும் உயரிய தோற்றமும் கொண்ட அந்த இளம் வீரன், றொக்கட் பொருத்திய நிலையில் எழுந்தான். அகல விரித்த கால்கள் அவனது குறியை உறுதி செய்கின்றன. நேரிய அவனது பார்வை குறி தவறாது முகாமை முற்றுகையிட்டது. எதிரி மூர்க்கமாக இருந்து சண்டையிட்ட பகுதியை "நிர்மூலம் ஆக்கு" என்று ஏவுகணைக்கு கட்டளை இடுகிறான். அவனது கட்டளையை சிரமேற் கொள்வது போல் இயங்கிற்று.

தொடர்ச்சியான ஏவுகணைத் தாக்குதலால் எதிரி கிலி கொள்ளத் தொடங்கினான். றொக்கட் சுவரில் மோதி வெடித்த போது கற்கள் சரசரத்துக் கொண்டு மரங்களுக்கு மேலும் எமது வீரர்களுக்கு மேலும் விழுந்து கொண்டிருக்கின்றன.

நாம் அவர்களைப் போல் சரமாரியாக துப்பாக்கிக் குண்டுகளைச் செலவு செய்ய முடியாது நாம் உபயோகிக்கும் ஒவ்வொரு துப்பாக்கிக் குண்டும் எதிரியை கொன்றொழிக்கவே பயன்படவேண்டும் எமது இயக்க ஆரம்ப காலங்களில் நாம் பட்டிருந்த அனுபவங்கள் எம்மை அவ்வாறு வழி நடத்தின.

எத்தனையோ தாக்குதல்களை கட்டுத் தோட்டக்களோடு நாம் எதிர் கொண்டிருந்தோம். எனவே தான் அங்கு இயங்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கிய ஒவ்வோரணியும் நிதானமாகவும் அவதானத்தோடும் செயற்படுகின்றன.

எல் போன்ற அமைப்பை உடைய அந்த கட்டடத்தின் பகுதிகளில் பல பொந்துகளும் சிதைவுகளும் ஏற்பட்டு இருந்தன. அந்தக் கட்டடம் முன்னர் மாணவர் சமுதாயத்தை வளர்த்தெடுத்தது. இன்று அது காட்டுமிராண்டித்தனமானவர்களின் கொலைக்களமாக மாறிவிட்டது.

தாக்குதல் அணியின் பீ. பிரிவினர் முகாமை அண்டிய மைதானத்துள் ஊர்ந்து கொண்டிருக்கின்றனர். பழசு நின்ற திசை நோக்கி இராணுவத்தினர் பயங்கரமாக தாக்கினர். பழசுவின் அருகில் விழுந்து கிடந்த வோக்கி ரோக்கி பழசு! பழசு! " என்று கூப்பிட்டுக் கொண்டிருக்கின்றது. பழசு, இனி யாரோடும் பேசமாட்டான். அவன் கைகள் இனி துப்பாக்கியை ஏந்தவும் மாட்டாது. அவனது விழிகளை நிரந்தர தூக்கம் தழுவிவிட்டது. அந்த வீரனின் முகத்தில் வெற்றிக் களிப்பு சுடர் விட்டிருந்தது.

பழசுவின் தந்தை ஒரு சிங்களவர். இவனது தாய் தமிழிச்சி. இந்தக் குடும்பச் சூழலில் இருந்து விடுதலை உணர்வு ஊட்டப் பெற்ற பழசு தன் தாய்மொழி மீது — தன் தாய்நாட்டின் மீது — ஏற்பட்ட சொல்லொணாத் துயரவடுக்களைக் கண்டு போராட வேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப் படுகின்றான்.

அந்த சமயம் இவன் எமது அமைப்பை தேடி அலைந்தான். தொடர்பு எளிதில் கிடைக்காத வேளையில் சலிக்காது மாதங்கள் பல காத்து நின்றான்.

சந்தித்து தொடர்பை ஏற்படுத்திக் கொண்ட நாள் முதல் இவனது ஊக்கமும் விடாமுயற்சியினாலும் இவன் வளரத் தொடங்கினான். அமைப்பில் போர்ப்பயிற்சியை எடுத்துக் கொண்ட நாள் முதல் இவன் பங்குகொண்ட தாக்குதல்கள் பல. பருத்தித்துறை பொலிஸ் நிலையத் தாக்குதல் தொட்டு வடமராட்சி வடக்கு கிழக்குப் பகுதிகளில் இராணுவத்தின

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

நேரடியான தாக்குதல்களிலும் இவனும் முன்னின்று தாக்குதலை நடாத்தியிருக்கின்றான். இவன் மேற்கொண்ட தாக்குதல்கள் தியாகமும் தீரமும் மிக்கவை

பழகு எமது இயக்கத்தின் கொள்கையை மக்கள் மத்தியில் பலமாக வேரூன்றப் பாடுபட்டான். இவனிடம் காணப்பட்ட அனுபவமும் திறமையும் ஒவ்வொரு நடவடிக்கையையும் திறனே ஆற்றுவதற்கு உறுதுணை நின்றன.

பொலிகண்டியின் கடற்கரையோரமாக எமது தோழர்கள்; கடற்புலியினரின் வருகைக்காக காத்து நின்றனர். படகு வருகின்ற செய்தியை யாரோ இராணுவத்தினருக்கு காட்டிக் கொடுத்திருக்க வேண்டும். இது தான் எமது வளர்ச்சிக்கு தடைக் கற்களாக அமைந்து விட்டிருந்தன. இந்தக் காட்டிக் கொடுப்பாளர்களினுல் நாம் இழந்துவிட்ட வரலாறுகள் தான் எத்தனை! எத்தனை! இன்றும் அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறூர்களே என்ற நினைப்பு பழகுவின் எண்ணங்களில் மின்னின.

இராணுவத்தினர் கவச வாகனங்கள் சகிதம் அந்தக் காலப்பகுதியை அண்டிய தெருவில் நாங்களே ராசா என்பது போல் உலாவித் திரிந்தனர். இரும்புத் தொப்பிகளை தலையில் கவிழ்த்திருந்தனர்; எனது வீதிகளில் திமிரோடு உலாவிக்கொண்டிருந்தனர். பழகு தனது தோழர்களோடு தாக்கும் நிலைகளை எடுத்து இருக்கின்றுன். றெக்கட் தாக்குதல் ஆரம்பமாயிற்று. இராணுவத்தினரின் கவச வாகனங்கள் சிதைவுற்றன. திக்குத் திக்காக நின்ற இராணுவத்தினரை துப்பாக்கி குண்டுகள் பலி எடுக்கின்றன. நிமால் எறிந்த கைக்குண்டுகள் இராணுவ வீரர்களின் உடல்களை கூறு போட்டன. ஏராளமான சிங்கள சிப்பாய்கள் கொலையுண்டனர். இந்த நிலையில் படகு வேறு திசையாக கரையிறங்கிக் கொள்கிறது. இராணுவத்தினரை அங்கு நிலைகொள்ள விட்டிருப்போமாகில் எமக்கு பாரிய இழப்பு ஏற்பட்டிருக்கும். இந்த பயங்கரமான சூழ்நிலையில் தான் பழகு எதிரியோடு மோதவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கின்றது.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இவ்வாறு எம்மோடு தோளோடு தோள் தந்த பழசுவை இன்று இழந்துவிட்டிருந்தோம்.

அந்தச் செய்தியை யாரும் ஜீரணித்துக் கொள்ளவில்லை அந்தவிநாடி பொழிந்து தள்ளிய குண்டுமழைகள் அவனின் நினைவை ஒருகணம் நெஞ்சில் நிறுத்தி கனம் செலுத்தின.

பழசு குழுவினர், தலைமையை ஏற்ந்த செய்களாயினர் அவர்களை போர்க்களத்தே வழிநடத்திய பழசு இல்லை...... பழசு இது வரையும் இக்கட்டளைகள் இன்னும் சாகவில்லை. அவை அவர்களின் காதுகளில் ஒலித்தன. அவர்களை அவை வழி நடத்துகின்றன. இறந்து கிடந்த தோழர்களின் உடலைக் குறுக்காக இழுத்து போட்டு எதிரியோடு தொடர்ந்தும் போராடுகின்றார்கள். அப்போது அந்த தோழர்கள் பட்ட வேதனை..............

இறந்து கிடந்த தோழர்களின் உடலைக் கவராக சண்டையிட்டுக் கொண்டிருந்த தோழர்கள் புதிய வலிமையைப் பெறவேண்டியிருந்தது.

'என்னோடு வாழ்ந்த தோழனின் உடல் எனது உயிர்க் காப்புக்கு அவசியம் தானா? நானும் இறந்து விட்டாலென்ன என்று கணப் பொழுதுகள் சிந்தனைகள் மேலோங்கிற்று இந்தவேளையிலேயே அந்தத் தோழன் காயமுறுகிறான். கவர் படுத்திருந்த இறந்த தோழனின் உடலூடாகப் புகுந்த துப்பாக்கிக் குண்டு அவன் கைகளை உடைத்துச் செல்கிறது.

அப்பாவித் தமிழ் மக்களோடு துப்பாக்கி சூட்டுப் பயிற்சியை எடுத்த இராணுவத்தினர் வீதிகளில் திடீரெனப் பாய்ந்து கண்மண் தெரியாமல் சுட்டுத் தொலைத்தவர்கள். பெரிதாக வேறொன்றும் சாதிக்கவில்லை. இவர்கள் நிராயுத பாணிகளான மக்களோடு தான் வீரப் பிரதாபம் பேசியவர்கள். வீரம் செறிந்த தாக்குதல்களை இவர்கள் சந்தித்ததே கிடையாது. தமிழீழப் பகுதிகளில் இவர்கள் ஏற்படுத்தியிருந்த கொலை வெறித்தனமான நடவடிக்கைகளும் காட்டு மிராண்டித் தனமான செய்கைகளுக்கும் முற்றுப்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

புள்ளி வைக்க வேண்டும் என்ற எண்ண அலைகள் வெடித்துச் சிதறுகின்றன. விடுதலைப் புலிகளின் தீரமும் தியாகமும் நிறைந்த தாக்குதலால் அவர்கள் கிலி கொண்டிருந்தனர். முகாம் கலவர முற்றுக் காணப்பட்டது. அந்தத் தேசமே அதிரும் சத்தங்கள் எழுந்து கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு வினாடியும் வெடிச்சத்தத்தோடு பிறக்கிறது. புகை மண்டலங்கள் முகாமை சூழ்கின்றன. பனிக் குளிர் காற்று புகை மேல் எழும்பாது பற்றியிருக்கின்றது. இராணுவத்தினர் எமது தோழர்கள் நின்ற திசை நோக்கி பராலையிற் செலுத்தினர். சிவந்த ஒளியைப் பாய்ச்சிக் கொண்டு விண்ணில் நின்று ஒளிர்ந்து கொண்டிருக்கின்றது. பெருக்கெடுத்தோடிய செங்குருதி ஆறு அந்த ஒளியில் மேலும் சிவப் பெய்திற்று.

அங்கே போராடிக் கொண்டிருந்த தோழர்களை அணைத்திருந்த இருள் சிணுங்கிக் கொண்டு விலகியது இப்போது அவர்கள் முழுமையாக எங்கு நிற்கிறார்கள் என இராணுவத்தினர் கண்டு கொள்ள வாய்ப்பாகி விட்டது. சடுதியாக உயர்ந்திருந்த தலையை மறைப்பதற்காக மணல் நிறைந்த பகுதியை கைகளால் விலக்கி தரையோடு ஒட்டி விட்டிருந்தனர்.

நவீன துப்பாக்கிகளான எல். எம். ஜி. எம். எம். ஜி. கள் இடம் குறித்து இயங்கின.

தொடர்ச்சியாக பாய்ந்து கொண்டிருந்த குண்டுகள் அவர்கள் படுத்திருந்த இடங்களுக்கருகில் விழுந்தன. அந்த முகாம் நிலம் பகுதிகள் துப்பாக்கி றவைகளால் உழுது விடப்படுகின்றன. அந்த நொடிகளில் எமது தோழர்கள் சிலர் காயமுற்றனர்.

நிமால் துடித்துக்கொண்டிருக்கின்றான். அங்கே அவன் படும் வேதனையைப் பார்க்க முடியவில்லை. எரியும் தணலில் உடல் அகப்பட்டது. போன்ற வேதனையை அவன் உறுகின்றான்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

எமது வீரர்கள் களத்தில் பலியாகிக் கொண்டிருக்கின்றனர். வீராவேசமாக பொருந்திக் கொண்ட தோழர்களின் இலட்சிய சாவைக் கண்டு எமது தோழர்கள் கலங்கவில்லை. அவன் குற்றுயிராக கிடந்து தவித்துக் கொண்டிருந்த கணங்களில் எதிரியின் குண்டு மீண்டும் அவனை நோக்கி பாய்கின்றது. ஆ! அம்மா என்ற அவலக்குரல் ஈனமுற்று எழுந்தது. அவனின் ஏ. கே 47 துப்பாக்கி அவன் கையின் பிடியில் இறுகிக் கிடக்கின்றது.

அவனது முன்னைய நாட்கள்...... ஓ! எவ்வளவு இனிமை மையானவை. அவனது இளமைக்காலம் சின்னம் சிறிய வயதில் அவன் சிறு கை அளாவிய செயற்கோலம்தான் எத்தனை

கிரிக்கட் விளையாட்டிலும் காற்பந்து விளையாட்டிடிலும் இவனுக்கு அலாதிப் பிரியம்; சிறந்த விளையாட்டு வீரன், தனது திறமைகளை செயலில் காட்டும் தன்மை படைத்திருந்தான். சிறுச் சிறு துன்பங்களின் போதும் தாய் போல் நின்றுனே அவன் துயருற்ற வேளை யார் அவனருகில் நின்றோம்.

கொக்கிளாய் இராணுவ முகாம் மீது அசுரத் தாக்குதலை மேற்கொண்டிருந்த அவன், மண்ணில் சாய்ந்தான்.

அசுர வேகம் பெற்றிருந்த தாக்குதலில் இராணுவத்தினர் சார்பில் ஏற்பட்டிருந்த உயிரிழப்புக்கள் பற்றி எதுவும் அறிய முடியவில்லை. அந்த இராணுவ முகாமில் வெடித்த ஒவ்வொரு குண்டும் எதிரியின் உடலைத் துண்டாடுகின்றன.
'பாதுகாப்பாக இருக்கலாம் எங்களை பயங்கரவாதிகள் நெருங்கவே மாட்டார்கள்' என்ற இராணுவத்தினரது எண்ணங்கள் இடிந்து விழுகின்றன.

பாசிச வெறியர்களில் ஒருவன் கட்டளை இடும் சத்தம் உரத்து துயரோடு ஒலிக்கின்றது.

"டேய் இன்னும் அவனைப் பார்" என்றான் ஒருதோழன அந்தச் சத்தம் வந்த திசையை நோக்கி "சுடடா" என்றான்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அந்தக் கட்டளையை ஏற்ற வீரன் எழுந்து நின்று சடசடத்து விட்டு இராணுவத்தினரின் துப்பாக்கிக் குண்டின் பாதுகாப்பைப் பெறுவதற்காக கீழே படுத்து முகாமை நோக்கினான்.

தாக்குதலின் போது கிறனைட் வீச்சாளராக இருந்த சில வீரர்களை நோக்கி C பிரிவுத் தலைவன் இறந்து கிடக்கும் தோழர்களின் துப்பாக்கிகளை எடுத்துச் சண்டையிடுமாறு பணித்தான். சூடும் குழுவினரின் பகுதியில் இருந்து வெளிச்சத்தைக் கொட்டிக் கொண்டு வந்த கிறனைட்கள் முகாமுள் விழுந்து வெடித்துக் கொண்டிருக்கின்றன. கிறனைட் லோஞ்சரால் சரியான முறையில் செலுத்தப்பட்டிருந்த குண்டுகள் குறித்த இடங்களில் விழுந்து வெடித்துக் கொண்டிருக்கின்றன.

எனினும் எதிரியின் தாக்குதலை முழுமையாக எம்மால் தகர்க்க முடியவில்லை. அந்தக் கணத்தில் முகாமை நெருங்கியிருந்த காத்தான் வெடிமருந்து அடைத்திருந்த கலனை கொழுத்தி எறிவதற்காக எழுந்தான்.

அந்தோ பரிதாபம்!

எதேச்சையாக கலனில் பொருத்தப்பட்டிருந்த கெற்பில் துப்பாக்கிக்குண்டு அதிர்வைக் கொடுக்கிறது. காத்தான் உடல் துண்டு துண்டாகிச் சிதறுகிறது. வெடிச்சத்தத்தின் ஓங்காரப் பெருவெளியில் அவனது குருதி சிதறிப் பறந்தது. போராடிக் கொண்டிருந்த தோழர்கள் மீதெல்லாம் இரத்தம் பட்டது.
அருகில் இருந்த பெற்ரோல் எறிகுண்டும் சேர்த்து வெடித்திருந்ததால் அவனது உடல் தீப்பற்றி எரிந்தது.

எமது மண்ணின் தொடர்ச்சியான வேதனைகளுக்கு விடுதலை கிடைக்கும் என்ற நம்பிக்கை சுடர்விட்டெரிந்தது.

சாகப்போகிறோம் என்று நினைத்து அவர்கள் போராடவில்லை. சுதந்திரமான வாழ்வுக்கு வழிசமைக்கிறோம் என்றேதான் நினைத்தார்கள். உலக ஏகாதிபத்தியத்தின் கூட்டோடு தமது பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொண்டவர்களோடு பொருதுகிறோம். எங்களில் யாரும் புறமுதுகு காட்டி ஓடவேயில்லை. அந்த இடத்தில் எமது தோழர்களிடமிருந்த மனோவலிமையும் மனோதிடமும் தற்தியாகமும் போற்றுதற்குரியவையே.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

காத்தானிடம் இருந்த கொள்கைப் பிடிப்பையும் உறுதியையும் மறந்துவிட முடியுமா?

ஒரு இனத்தின் முழுமையான துயரநிலையைத்தான் அவன் கருத்தில் கொண்டான். சிறு சிறு உதவி செய்தவர்களை எல்லாம் காலம் காலமாக நன்றிகூர்ந்து பேசுவான்.

எமது அமைப்பில் இவன் ஒரு சிறந்த வாகனச்சாரதி. தாக்குதல்களின் போது வாகனம் ஓடுவது சாதாரண விடயமா?

ஒழுங்கைகள் மதகுகள் பாலங்கள் எங்கும் சாமர்த்திய ஓட்டிய அந்த கரங்களும் ஒடிந்து விட்டன.

காத்தானின் சாவு காற்றில் கலந்து விட்டது: வீரம் செறிந்து விட்டிருந்த கொக்கிளாயை மேவித்திரியும் தென்றல் இனி எமது சரித்திரம் பேசும். அந்தத் தென்றல் திக்கெல்லாம் சேதிசொல்லும். தெருவில் ட்றக்டரா இரைச்சலைக் கேட்டுத தனது காதலன் என ஓடித்தவித்த காதலியின் காதில் தூது போயிருக்கும்.

அவளும் கேட்டிருப்பாள்............... அவள்?...............
அந்த வழியில் கண்ணீரில் தோய்ந்த விழிகளை விட்டுக் காத்திருப்பாளா; பாவம்...............

தாக்குதல் குழுவின் சகல பிரிவினரும் சுட்டுக் கொண்டு முன்னேறிக் கொண்டிருக்கின்றார்கள்.

பழசு குழுவினர் நின்ற இடம் நோக்கி துப்பாக்கிகுண்டுகள் செலுத்தப்படுகின்றன.

வெற்று ரவைக் கூட்டை ரவைகளால் நிரப்பிக் கொண்டு முன்னேறுகிறான் ஜெகன்.

காந்தி அண்ணா இயந்திரத் துப்பாக்கியை இரண்டு கைகளாலும் ஏந்திக்கொண்டு முகாம் முற்றவெளியில் நகர்ந்து கொண்டிருக்கிறார், காந்தி அண்ணா நகர்ந்துகொண்டிருக்கும் திசைகள் நோக்கி குண்டுகள் பாயந்துகொண்டிருக்கின்றது.

காந்தி அண்ணாவால் தற்காத்துக் கொள்ள முடியவில்லை. வயதில் மூத்தவராக இருப்பதால் அவரை எல்லோரும் அண்ணா என்றே அழைத்தார்கள்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

காந்தி அண்ணு இராணுவத்தினரின் கொடூரம்மிக்க தாக்குதல்களை நேரிடையாக கண்டு கொண்டவர். தாம்வாழ்ந்த பிரதேச மக்கள் அனுபவித்த சொல்லொணுத் துயரங்களுக்கு முற்றுப் புள்ளி வைக்க முயன்றவர். ஆயுதம் தரித்த சிங்களக் காடையர்களின் அட்டகாசத்தால் பீதியுற்றிருந்த அவரது தாய் சுகயீனமுற்றிருந்த தாயின் வேதனை நிறைந்த காலப்பகுதி. எழுந்து நடக்கமுடியாது. படுத்த படுக்கையிலேயே கிடக்கின்ருர், இருமிக் கொண்டும் தூக்கமின்றியும் அந்தத்தாயின் நாட்கள் கழிந்தன. அந்த நிலையில் தாய்க்கு அருகில் நின்று கடமை புரியமுடியாத தவிப்பு அவரை ஆட்கொள்கிறது. யாரோ இவர் தீவிரம்மிக்க ஆளெனுர் என காட்டி கொடுத்து விடுகிருர்கள். அந்த சமூகத்தில் இருந்த ஒருசில காட்டிக்கொடுக்கும் துரோகிகளால் இவர் அங்கு நிலைகொள்ள முடியவில்லை. எந்தக் கணமும் எதிரியின் வலை விரிப்பில் சிக்க நேரிடும். இதனுல் அவரால் தாய்க்கு கடிதம் ஒன்றையே வரைந்து அனுப்ப முடிந்தது.

காந்தி அண்ணுவுக்கு மார்பில் குண்டு அடிபடுகிறது. அந்த நேரத்தில் அவனுக்கு அருகில் சண்டையிட்டுக் கொண்டிருந்த ஜெகன் "காந்தி அண்ணு! காந்தி அண்ணு!" என்று அழைத்தான்.

அவன் கண்களில நீர் தாரையாக ஓடியது. காந்தி அண்ணுவின் உடலில் பெருகிய குருதியோடு அந்தக் கண்ணீர் கலந்தது. பாசமிக்க ஜெகன் தமது தோழர்களின் துயர அனுபவத்தைச் சகிக்க முடியாது தவித்தான். அந்த நிலையிலும் காந்தி அண்ணு ஜெகனுக்குச் சொன்ன வார்த்தைகள்..............

"அம்மான் தொடர்ந்தும் போராடுங்கடா!

அடியுங்க அம்மான் என்னைப்பற்றி யோசிக்க வேண்டாம்"

என்ற அவரின் வார்த்தைகள்; அவர் அடைந்திருந்த வலியையும் தாண்டி வருகின்றன.

'எனது துப்பாக்கியையும் எடுத்துச் சண்டைபோடு! என்ற வார்த்தை நெஞ்சை உலுப்புகின்றன.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

பிரிவைச் சந்திக்க முடியாத தோழர்களின் கண்கள் குளமாகின டராலியிற் எரிந்து முடிகின்றது.

காந்தி அண்ணுவும் பிரிந்து சென்றுவிட்டார்.

இறந்து கிடக்கும் தோழனேயும் தாண்டி எமது தோழர்களின் உணர்வுகள் வெடிக்கின்றன.

ஜெகனை 'இடி அமீன்' என்றுதான் அழைப்போம். பார்வையில் அவனது தோற்றம் அப்படித்தான். கருமையானவன். சிரிக்கும் போது வெண்ணிற பூக்களின உதிர்வைப் போலிருக்கும்.

எல்லோரையும் சந்தோஷமாக வைத்திருக்க முயலும் சிறந்த குணத்தால் அவனில் எல்லோரும் அன்பைக் கொணடிருநதனர். காந்தி அண்ணுவின் வீரச்சாவை நேரில் கண்டு தாங்கிக் கொள்ள அவனுல் முடியவில்லை, தனேடு வாழ்நது சிரித்தும் அழுதும் சிறு குறும்பு செய்தும விளையாடிய தோழர்களின் நினைவுகள் அவனைச் சூழ அவன் பட்ட வேதனைகள் யாரறிவார். பெருமூச்செறிந்தான்.

அவனது கையிலிருந்த எம் பதினறு துபபாக்கியை ஏநதியபடி முகாமை வெறித்துப் பாாததுக்கொண்டு கிடக்கின்ருன் சுடும் குழுவில் இருந்து இயங்கி ஷெககட செலுத்தும் பிரிவினர் முகாமை நோக்கி குறி வைக்கின்றனர். முகாமுக்கு அண்மையில் சில தென்னைகள் நின்றன, ஷெககட முகாமை நோக்குகின்றது. தீயைக கக்கிக் கொண்டு போகின்றது.

பலத்த சத்தத்தோடு மோதி வெடிக்கின்றது.

தடாம் என்ற சத்தத்தோடு தென்னே முறிநது விழுகின்றது.

திடு திடு என தெங்காய்கள் உருண்டன.

இராணுவத்தினர் மலைத்துப் போயிருக்க வேண்டும்,

இழையோடிய துயரத்தோடு ஜெகன் அவதானித்துக் கொண்டே இருக்கின்ருன்.

அவனுக்கு அருகில் இருந்த சில தோழர்கள் ,,ஜெகன்'' ''ஜெகன்'

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

எனக் குரல் கொடுத்தார்கள் அவன் அவர்களின் குரல்களுக்கு காது கொடுக்கின்ற நிலையிலில்லை.

மண்மூடைகளுக்குள் கவர் எடுத்திருந்த இராணுவத்தினர் சிலர் சிறிது தலையை உயர்த்திக் கொண்டு எழுகின்றனர்.

அந்தக் கணம் ஜெகனின் துப்பாக்கி தீயைக கக்கிக் கொண்டு இருக்கின்றது. இராணுவத்தினரும் திருப்பிச் சுட்டுக்கொண்டு இருக்கின்றனர். சளைக்காது தொடர்ந்து போராடுகின்றான். முன்னர் 'யாரோ' அவனுக்குச் சொன்ன வார்த்தைகள் மெய்நடத்துகின்றது. இராணுவத்தினரின் சார்பில் அவலம் நிறைந்த ஒலி அண்மையாகவே எழுந்து கொண்டிருக்கின்றது- பூரணமான ஒரு ஆத்ம திருப்தியை அவன் அடைந்திருக்க வேண்டும். தனது உயிர்த தோழனின் வார்த்தைக்காக வாழந்து விடுகின்ற பெருமை அவனைத் தூக்கிப்போட்டது.

ஜெகனின் குறிதவறுத மூர்க்கமான தாக்குதலால் எதிரி நிலை குலைந்து போகின்றான், எனினும் எங்கோ ஓர் மூலையில் இருந்து ஜெகனின் சாவை யாரோ எழுதி விட்டார்.

இடிஅமீன் அநதோ! உலக வாழ்வில் இருந்து பிரிநது விட்டான


# 12

தாக்குதலில் இராணுவத்தினர் ஏராளமானோர் இறந்திருக்கலாம் என ஊகிக்கச் கூடியதாக இருந்தது.

றொக்கட் தாக்குதல்களும் தொடர்ச்சியான கிறனேட் பிரயோகங்களும் எதிரியின் பலமான தாக்குதலை ஓரளவு தணித்திருந்தன. ஒன்றரை மணித்தியாலங்களாக உக்கிரமான தாக்குதல் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன, தோழர்களின் இழப்புக்கள் எம்மை வாட்டியபோது அவை எம்மை வலுப்படுத்துகின்றன.

உக்கிரமான போர் மேகங்கள் சூழ்கின்றன.


தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive



சந்திரகுமார் (காந்தரூபன்)

*30 - 07 - 1964*

மட்டக்களப்பு

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

நேரம் இரண்டு மணியாகியிருக்கின்றது.

குளிர்காற்று ஜில...... என்று வீச்க்கொண்டிருக்கின்றது. காற்று அந்த புகாமின வெண்மணலை எம்மீது அள்ளி எறிகின்றது. சதா ஒலித்த துப்பாக்கி வேட்டுக்கள் தாலாட்டுவது போன்ற உணர்வைத் தந்துவிடும் போலிருக்கின்றது. தூக்கம் நிறைந்த விழிகள் இடையிடையே மூடிவிழிக்கின்றன.

இருபக்கமும் துப்பாக்கி சமர்கள் ஓரளவு குறைகின்றன. இராணுவத்தினர் துப்பாக்கி சூட்டை நிகழ்த்தும் வேளைமட்டும் அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்படுகின்றன.

தாக்குதலுக்கு தலைமைதாங்கி வந்திருந்த அண்ணர் தாக்குதல் பிரிவுகளுடன் தொடர்பை எடுத்துக் கொண்டிருக்கின்றார்.

சுடும் குழுவில் நின்றிருந்த மயூரன் பலத்த காயமுற்று விட்டான். அவன் அடைந்திருந்த காயத்தினால் ஏற்பட்ட வலியைத் தாங்கிக் கொள்ள முடியாது தவிக்கின்றான். இருபதும் நிரம்பாத அந்த சிறுசு துடிக்கின்றான். சாவை எதிர்நோக்கி கிடக்கின்றான். காலம் செய்த கோலந்தான்.

அழுகுரல்களும் வேதனைகளும் அவனைச் சூழ்ந்திருக்கும்போது அவனால் எதைத்தான் செய்யமுடியும் பாவம்.

"அம்மா! அம்மா!........." என்று தாயைப் பலமுறை அழைத்தான். கேட்குமா? அவன் தாய்க்கு.

அவனை வளர்த்தெடுத்த அந்தத் தாய அவன் நோயால் வாடிய போதே நொந்து தவித்தாள்.

தனது மைந்தன் இறந்தான் என்ற செய்தி கேட்டால துடித்திட மாட்டாதா! அந்தத் தாயினுள்ளம்.

இப்படித்தான் தமிழினத்தின் விதி அமைந்து கிடக்கின்றது. "அடுத்ததோர் சந்ததிக்கு நமது போராட்டம் கையளிக்கப்படக் கூடாது. நான் பட்ட வேதனை எனது சகோதரர்கள் படக்கூடாது" என்று அடிக்கடி சொல்லிக்கொள்ளும் மயூரன. இன்று எம்மை விட்டே பிரிந்து போகின்றான்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அவன் நடந்து வந்த பாதையில் பதித்து வைத்த தடங்களில் மீண்டும் புதியதோர் உலகச் சமைப்புக்கான உதயம் எழுந்து வரும் என்ற நம்பிக்கை எம்மில் அறவே இல்லை. அந்த இடத்தில் அவர்களுக்கு இருந்த அசையா உறுதி யார்க்குத்தான் வரும்.

சிறிது நேர இடைவெளி எடுத்திருந்த தாக்குதலணியினர் மீண்டும் தொடங்குகின்றார்கள்.

நெருங்கி முன்னேறுவதற்கு அவர்கள் இப்போது தயாராகி இருக்கின்றனர். முகாமை நோக்கி சுடும் குழுவினர் பராலையிற் செலுத்துகின்றனர். முகாம் தெளிவாக தெரிகின்றது. அந்த முகாமின் கூரைகள் சிதைவுற்றுக் கிடக்கின்றது.

அந்த இடிபாடுகள் சிவந்த ஒளியில் சிற்ப வேலைப்பாடுகளைப் போல் தெரிகின்றன.

முகாமில் இராணுவத்தினர் அனேகமானோர் மண்மூடைகளுக்கு அருகில் இருக்கின்றனர்.

வெடி மருந்துக்கலன்கள் கொழுத்தி எறிந்திருக்க வேண்டும். பலத்த வெடிசத்தம் தீயைக் கக்கிக் கொண்டு எழுகின்றது.

''மகே அம்மே'' என்ற சத்தங்கள் எழுகின்றன.

இராணுவத்தினர் அச்சமடைந்து விடுகின்றனர்.

எம்மில் எரியும் விடுதலைத் தீயை அவர்கள் காண்கிறார்கள். அது அவர்களை சுட்டெரித்துக் கொண்டிருக்கின்றது.

இராணுவத்தினர் தோற்றுப் போகப் போகிறார்கள். கூலிக்காக யார் தான் உயிரைக் கொடுப்பார்கள்.

சுடும் குழுவினரின் ஒரு பகுதி தாக்குதலணியினருக்கு உதவியாக குதிக்க உள்ளது.

எதிரியின் தரப்பிலிருந்து துப்பாக்கிக் குண்டுகள் பாயத் தொடங்குகின்றன. அவர்கள் களத்துக்கு வருவதற்கு கொடுக்கப்பட்ட கால இடைவெளி கைகொடுத்து விட்டது போலும். இராணுவத்தினர் எறிந்த கிறனேட்கள் முகாம் வெளியில் விழுந்து வெடிக்கின்றன.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அந்தக் கணங்களில் எமது தோழர்களில் சிலர் காயமுறுகின்றனர். உண்மையில் தாக்குதலின் கோரத்தை அப்போது தாங்கிக் கொள்ள முடியவில்லை. பல திசைகளிலும் குண்டுகள் சிதறுகின்றன. இராணுவத்தினருக்கு பயங்கரமாக கட்டளைகள் பிறந்து கொண்டிருக்கின்றன.

அந்த வேளை எமது விஷேச அதிரடிப்படை இயங்கத் தொடங்கிற்று ஸ்.........ஸ்.........சத்தத்தோடு கிறனைட் லோஞ்சரால் செலுத்தப்பட்ட கிறனைட்கள் விழுந்து வெடிக்கின்றன. றொக்கட்கள் முகாம் மைதானத்தால் மிதந்து சென்று மோதின.

கட்டடத்தின் ஒரு பகுதிச் சுவர் இடிந்து விழுகின்றது. "இனி அவர்களுக்கு ஓய்வு கொடுப்பதில்லை. தொடர்ந்து தாக்குவோம்" என்ற உறுதி எடுக்கப்படுகின்றது.

அவர்கள் எம்மை நோக்கி பராலையிற் அடிக்கின்றனர் அந்த பராலையிற்றை நோக்கி வெள்ளையன் தனது குறியை வைத்தான். வெள்ளையனால் அதனைச்சுட்டு விழுத்த முடியும் அவனிடம் அந்த திறமை உண்டு. நான்கு ஐந்து றவைகள் அதனை நோக்கிச் செல்கின்றன.

படவேயில்லை. மீண்டும் தொடங்குகின்றான்.
பராலையிற் சிதறி அணைந்தும் விடுகின்றது.

சுடும் குழுவொன்று தாக்குதலணியாகின்றது. முகாமை நெருங்கிக் கொண்டிருக்கின்றது. கெனடியும் தனபாலும் அதில் அடங்கியிருக்கின்றனர். வீறு கொண்ட புதிய தாக்குதல்ணியினர் களத்தில் மோதிக் கொண்டே முன்னேறுகிறார்கள். இராணுவத்தினர் எதிர் நோக்காத திசையால் தாக்குதல் தொடர்கின்றது. வெற்றி முழக்கமிடுகின்ற தாக்குதலணியினர் இராணுவத்தினரை ஓட ஓட விரட்டி அடிக்கின்றனர். எனினும் இறுதிவரை எமக்கு எல். எம். ஜி. நிலைகள் தான் சிரமத்தைக் கொடுத்தன. எதிரியின் தாக்குதலை நாம் முற்றாக தயார் கொள்ளுகின்றோம்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

சிறு சிறு காயங்கள் தானும் ஏற்படாதவர்கள் யாரும் இல்லை.

எதிரிகளோடு பலமாக பொருதிக் கொள்கின்றனர். தன பாலும் கெனடியும். தனபாலனின் துப்பாக்கி சுடுவதை நிறுத்துகின்றது. சடுதியாக கொக்கிங் கான்டிலை இழுத்து விடுகின்றான். வெடிக்காத ரவை வெளியே பாய்கின்றது. அடுத்த ரவை சுடுநிலைக்கு தயாராக ஏற்றப்பட்டு விட்டது. மீண்டும் சுடுவில்லை அழுத்தினான். தீயைக் கக்கிக் கொண்டு குண்டுகள் பாய்கின்றன. இராணுவத்தினர் இவர்கள் நின்ற திசை நோக்கி பொழிகின்றனர். இராணுவத்தினரை நோக்கி பரானலயிற் செலுத்தப்படுகின்றது. அந்தக் கணம் எமது வீரர்கள் ராணுவத்தினரைத் தெளிவாக கண்டு துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொள்கின்றனர். அவர்களும் திரும்பித் தாக்கிய போது அருகருகாக இருந்த கெனடியும் தனபாலும் காயமுறுகின்றார்கள். "அம்மான் நான் சாகப் போறன்" என்னுல் இயலவில்லை. என்றான் கெனடி அவனது கண்கள் அழுகின்றன, அந்தத் தனபால் கெனடியின் முகத்தைப் பார்த்துக் கொண்டு துடிக்கின்றான். தருணம் பார்த்து எதிரிமீது தாக்கிக் கொண்டிருந்த அந்த வீர வேங்கைகள் சாய்ந்து விட்டனர். சாவிலும் இணைந்து விடுகின்றனர். கண்ணீரால் களத்தில் கதை எழுதி விட்ட முன்னோரின் வழி நடந்து விடுகின்றனர்.

தமிழீழமே எனது தாகம் அதுவே எனது மூச்சும் கூட" என்றவர்கள் நிதமும் வாழ்கிறார்கள். எம் உள்ளங்களில்......... தமிழீழ நிர்மாணத்தில அவர்கள் கொண்டிருந்த நேசனையும் இடைவிடாத உழைப்பும் மறந்துவிட முடியுமா?

அவர்களை எம் நெஞ்சங்களில் சுமந்து செல்கிறோம்.

கெனடியின் அமைதி வழியும் முகமும் புன்சிரிப்பும் மறைந்து விடவில்லை, சாவிலும் அன்றே சிரிப்பு குடி கொள்டன்றது.

தனபாலின் தமையன் தனது தம்பி மேல் வைத்திருந்த பாசம் அந்தத் தனையனின் வாழ்வில் ஏற்பட்டிருக்கும் முடிவற்ற சோக



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

மும் விரக்தியும் இன்றும் தனபாலனை நினைவுக்கு கொணர்கின்றன

"நான் செத்துப் போய் விட்டாலும் என் அம்மாவுக்கு சொல்ல வேணும்" என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்ட தனபால் இறந்து கிடக்கும்போதும் அவ்வாறு அவன் கேட்டவைகள்தான் காதில் ஒலிக்கின்றன.

அந்தக் கணங்களில் சைமன் எமது தோழர்களின் இழப்பைத் தாங்கிக் கொள்ளாது துடிக்கின்றான்.

'டேய் அவங்களெல்லாம் சாகிறாங்களடா'' என்று கத்திய வாறே சுடும் குழுவை விட்டு தாக்கும் அணியினர் நின்ற இடம் நோக்கி ஓடுகின்றான். வெள்ளை அவனைத் தடுக்கின்றான்.

"டேய் சைமா நில்லு மச்சான்"

வெள்ளையின் பிடி சைமனின் உதறலால் தளர்கின்றது.

'சைமா சொல்வதைக் கேளடா'' ஒருமித்து தோழர்கள் குரல் கொடுத்தார்கள்.

அந்த நேரத்தில் சைமனை யாராலும் கட்டுப்படுத்தப் படமுடியவில்லை.

இராணுவத்தினரை நோக்கி வீராவேசமாக பாய்கின்றான்.

அவனது துப்பாக்கி எதிரிகளை நோக்கி பயங்கரமாக இயங்குகின்றது, தனது தோழர்கள களத்தில் சாவதைப் பார்க்கப் பொறுக்காத நிலையில் அவன் வெறிகொண்டெழுந்தான். நட்புக்கு அவன் கொடுத்த பரிசு யாராலும் எந்தக் காலத்திலும் மறக்க முடியாத ஒன்று.

அவன் - அவர்கள் படைத்து விட்ட தியாக வரலாறு.

சைமன் கொக்கிளாய் இராணுவ முகாமை நோக்கி சரமாரியாக குண்டுகளைப் பொழிகின்றான். அந்தப் பொழிவு புதிய அத்தியாயத்தை போர்க்களத்தே சிருஷ்டிக்கிறது.

மார்பிலே குண்டேற்று விழுந்த சைமனை மண் மாதா தனது மடியில் அணைத்துக் கொண்டாள்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அவனது வாழ்க்கை அவன் காதலித்த காற்று வெளியிடையில் சங்கமம ஆகிறது.

நண்பர்களுடன் சதா சீண்டியும் சினத்தும் செய்த விளையாட்டுக் கள்தான் எத்தனை!......... ஓ! அந்த அருமையான தோழனை நாம் இழந்து விட்டோம்.

# 13

அந்த கொக்கிளாய் இராணுவ முகாமினர் எமது வீரத் திற்கும் தியாகத்துக்கும் முன்னிற்க முடியாது புறமுதுகாட்டி ஓடுகின்றனர். எமது மக்களின் துயரம் நிறைந்த வாழ்வுக்கும் எமது பிரதேசங்களை ஆக்கிரமித்தலும் வழிசமைத்தவர்கள் அந்த இடிபாடுகளுக்குள் சிக்கிக் கிடக்கின்றனர்.

வீறுப்போடும், திமிரோடும் நிமிர்ந்து நின்ற கொக்கிளாய் இரா ணுவமுகாம் இடிந்து விழுந்து கிடக்கின்றது. முகாமின் வாசல் கள் ஓரமாக இரத்த ஆறு ஓடிக்கிடக்கின்றது.

இப்பெரிய இராணுவ நிலை மீது முதன் முதலாக மேற்கொள் ளப்பட்ட தாக்குதல் இதுவே. இத்தாக்குதலில் எமக்கு ஏற்பட்டி ருந்த வெற்றி. தமிழீழ மலர்வை மேலும் உறுதி செய்கின்றது. முழுமையாக சேதமடைந்த இராணுவ முகாமின் அழிவுகளை கண்டே எமது மனங்கள் ஓரளவு திருப்தி செய்தன.

எத்தனையோ தோழர்களை இழந்துவிட்ட நாம் எப்படி வெற்றி மூழங்கிட முடியும்.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



பிரபாகரன் (ஜெகன்)

26- 01- 1963

உடப்புவெளி

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# 14

சொந்தங்கள், சுகம்பேசும் உறவுகளைத் தாண்டி முழு மைமிக்க இனத்தின் விடிவிற்காக வாழ்ந்து காட்டி விட்டார்கள்

வரலாறு அவர்களை நினைவு கூறும். இனி அவர்களுக்கு எந்தச் சோர்வும் இல்லை. பெருக்கெடுத்தோடிய குருதியாறு தமிழீழ மலர் வுக்கு உரமிட்டது. இத்தியாகிகளின் தியாகங்களை பேசி முடியுமா?

அவர்களுக்கு இப்போ எம்மால் எதைத்தான் செய்ய முடி யும். எந்த இனத்துக்காக சுதந்திர வாழ்வுக்காகப் போராடி ஞர்களோ? அந்த மக்களின் சுதந்திரம் மண்ணில் வேரூன் றும் போதும் அவர்கள் சாந்தி எய்துவார்கள்.

ஓ! எம் தோழர்களே எம்மோடு சுக துக்கங்களில் கலந்து கொண்டு வரிக்கப்பட்ட இலட்சியத்துக்காக நீங்கள் வாழ்ந்தீர்கள் போராடும் தமிழீழ விடுதலைப் புலிகளின் போர் மரபுக்கேற்ப எதிரியின் கையில் அகப்படாது உயிர் துறக்கும் சிறந்த போர்க்குணம் படைத்தீர்கள். இன வெறி பிடித்த சிங்கள இராணுவத்தினர் மூகாமை முற்றுகை யிட்டு அழித்தொழித்த வீர வரலாற்றைக் சிருஸ்டித்து விட்டீர்கள். வீரமும் தியாகமும் நிறைந்த வரலாற்றுச் சிற்பிகளான உங்கள் இலட்சியச் சாவைக் கண்டு முழு உலகமுமே தலை வணங்குகிறது. மலரப் போகும் தமிழீழத் திற்கு உங்கள் பணி மகத்தானது.

புனிதம் நிறைந்தது.....................

களத்தில் இறந்து கிடக்கின்ற எம் தோழர்கள் மீது காற்று மண் தூவுகின்றது. நிமால் காதலித்த சிட்டு அங்குமிங்கு மாக சுத்தி சுத்திக் கத்திற்று முகம் சிவந்த சூரியன் தன் கிரணங்களால் இறந்து கிடந்த தோழர்களின் மேனி தொட் டான்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# 15

வெற்றிகரமாக தாக்குதலை முடித்துக் கொண்டு காயப்பட்ட தோழர்களை தூக்கிச் செல்லத் தயாராகின்றனர். எமது தோழர்களில் காந்தரூபனையும் இழந்து விட்டிருப்பது அப்போது தான் தெரிய வந்தது. அந்த தோழனின் தலையில் குண்டு பாய்ந்திருந்தது. யார் இனங்கண்டு கொள்ள எமக்கு கஸ்டமாக இருந்தது. முகம் சிதறிக் கிடந்தது. உருக்குலைந்த அவனது நிலையை கண்கொண்டு பார்க்க முடியவில்லை. வழி நீட்டும் வந்த தோழர்களை விட்டுச் செல்லத் தவித்த மனத்தோடு காயமடைந்த தோழர்களை தோளில் தூக்கிக் கொண்டு பாதுகாப்பான ஓரிடத்தை அடைய வேண்டியிருந்தது.


முதல் நாள் தென்னந்தோப்பில் குடித்த இளநீர்களோடும் சுவைத்த புளியங்காய்களோடும் தாக்குதலிரா த்தினம் கழிந்தது தண்ணீர் தாகத்தால் எல்லோரும் அவதியுற்றனர். காயப்பட்டவர்களுக்கு ஏற்பட்டு இருந்த நீர்த் தாகத்தால் அவர்கள் மேலும் களைத்துப் போயிருக்கின்றனர். அவர்களின் உடலில் குருதிக் கறைகள் படிந்து கிடக்கின்றது. அவர்கள் அடைந்திருந்த வலியையும் வேதனையையும் தாங்காது துடிக்கின்றனர். சிறுச் சிறு அசைவின் போதும் அவர்கள் முகங்கள் கறுத்துக் கிடக்கின்றன. கண்கள் நனைவுற்றுக் கிடக்கின்றன.

"இனி நாம் ஏன் இருந்து என்று கூட நினைத்தார்கள்"

தம்மைச் சுமந்து தோழர்கள் படும் கஸ்டம் அவர்களுக்கு ஆறுதலளிக்கவில்லை. சிறிது தூர நகர்வின் பின் காட்டின் மரத்தடிகளை முறித்து ஸ்ரெச்சர் தயாரிக்கின்றனர். ஸ்ரெச்சரில் காயப்பட்டவர்களை கிடத்தித் தூக்கிச் செல்கின்றனர்.



தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive



ஜெயந்தன் (நிமால்)

வயது - 18

துப்பளா

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஹெலிஹொப்ரர்கள் ஐந்து மணியளவிலேயே முகாமை அண்டிய அயலில் சுற்றிக் கொண்டிருக்கின்றது. நாம் முகாமில் இருந்து புறப்பட்டு சிறிது நகரின் பின் பேரிரச்சலை எழுப்பிக் கொண்டு வருகின்றன. பெரு வெளியொன்றைக் கடக்க வேண்டியிருக்கின்றது. பரந்த வெளியூடாக நாம் செல்வதைக் கண்டு கொள்கின்றனர். துப்பாக்கி சூடுகள் எம்மை நோக்கி வருகின்றனர். அதிஸ்டவசமாக எம் மீது குண்டுகள் ஏதும் தாக்கவில்லை.

சோர்வையும் மறந்துஅப்பகுதியைக் கடக்கஓடியும்விழுந்தும் சென்றோம். வேகமாக ஓடமுடியாது கால்கள் பின்னுகின்றன, அவர்களின் அத்தாக்குதலை முறியடிக்க எமது தோழர்கள் முயற்சி எடுக்கின்றார்கள்- ஜி3 ஏ3 எம்16 போன்ற துப்பாக்கிகளின் குண்டுகள் ஹெலிஹொப்ரைத் துரத்திச் செல்கின்றன, சிறிது உயர்வதும் பணிவதுமாக இருக்கின்றனர், இயந்திரச் சத்தம் காதை மேலும் செவிடு படுத்துகின்றன.

வெளியைக் கடந்து செல்ல பலத்த சிரமம் உறுகிறார்கள் தாக்குதலை முடித்து விட்டு அனைவரையும் பாதுகாத்து செல்வதே மிகப் பெரிய செயலாக இருக்கின்றது,

எதிரி எம்மை எப் போதும் அழிப்பதற்காக தயார் நிலையில் இருக்கின்றான், அவன் பல தந்திரோபாயங்களை பயன் படுத்தி எம்மை வலிய சண்டைக்கு இழுத்து எம்மை அவனது பொறியில் அகப்பட வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்கின்றான். ஹெலிஹொப்ரரில் ரோந்து செய்து சுட்டுக்கொள்வதன் மூலம் எமது விரைவைக் கட்டுப்படுத்தி அப்பகுதியைச்சுற்றி வளைத்து எம்மைப் பிடித்து விடலாம் என்ற எண்ணம் அவர்களிடம் இருக்கின்றது.

இப்போது நாம் காட்டை அடைகின்றோம். அக் காட்டின் கிளைகள் தலைசாய ஹெலிஹொப்ரர் மிக நெருங்குகின்றது. இந்த வேளை ஒரு தோழனின் ஜீ3 ஏ3 ஆயுதம் பயங்கரமாக இயங்குகின்றது. அவர்களின் துப்பாக்கி சூடுகள்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

மரங்களையும் செடிகளையும் உரசிச் செல்கின்றன, ஹெலி கொப்ரர் சுற்றிச் சுற்றி தலைகுத்தி கீழே வருவதும் மேலே போவதுமாக இருக்கின்றது. முகாமை அண்மித்து ஹெலி கொப்ரர் ஒன்று தரை இறங்குவதும், ஓரிரு நிமிட தாமதம் கூட இன்றி எழுந்து திருகோணமலை நோக்கிச் செல்வதும் வருவதுமாக இருக்கின்றது. நாம் அந்த சிறு காட்டை கடப்பதற்கு இடையிலேயே பலதடவை வந்து போவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. காயப்பட்டும் பயத்தில் காடுகளில் ஒழித்தும் இருந்த இராணுவச் சிப்பாய்களை எடுத்துச் சென்று கொண்டிருந்ததாகவே பின்னர் நாம் அறிந்தோம்.

உருமறைப்புச் செய்யப்பட்ட ஹெலிகொப்ரர் ஒன்றும் கடல் விமானம் ஒன்றும் மரத்தின் உச்சிகளை உராசிச் செல்கின்றன. அந்தக் காடு எம்மைப் பாதுகாக்கின்றது. பலத்த குண்டுத் தாக்குதலை அது தான் ஏற்றது. அதன் சிறுமரக்கிளைகள் ஒடிந்து விழுகின்றன. அவ்வாறான நிகழ்வு எமக்கு ஏற்பட்டிருக்குமாயின்........ நாம் அணிந்திருந்த உருமறைப்பு ஆடை பெருமளவு அழுக்கை ஏற்றிருக்கின்றன.

எத்தனையோ சிறு சிறு துன்ப நிகழ்வுகள் எம்மை ஆட்கொள்கின்றன. இவற்றையெல்லாம் பொருட்படுத்த யாருக்கு அங்கு நேரமிருக்கின்றது. தளத்தை அடைந்து விட்டால் நல்ல குளிப்பு குளித்து புத்தாடை அணிந்து நிம்மதியாக தூங்க வேண்டும் என்ற ஆசை அந்த நேரங்களில் எழுகின்றன.

எல்லோருமே வாடியிருக்கின்றனர். இளமைகள் செத்துக் கிடக்கின்றனவா என்ற ஐயம் எழுந்தது. சளைக்காத உள்ளத்தோடு அவர்கள் மீண்டும் மீண்டும் புதிய மிடுக்கோடு நாளையும் நடைபோடுவார்கள். துன்பம் அவர்களை பெரிதும் வாட்டவில்லை. ஆனால் அவர்களின் உடல்கள் வாடிப்போயிருக்கின்றன.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

மரங்களில் இருந்து நீர்த்துளிகள் சிந்திக் கொண்டிருந்தன. மரங்கள் மோனத்தவம் செய்து கொண்டிருக்கின்றன. சூரியனும் பெருமளவு வெப்பம் தணிந்திருந்தான். பறவைகளின் கீதம் முகாரி வாசித்ததுபோல் இருக்கின்றது. இயற்கையே முகாரி மீட்டிக் கொண்டிருக்கின்றது. தனது குழந்தைகளின் இழப்பை அது தாங்கமுடியாது தவித்ததா?...

ஹெலிஹொப்ரர் வேதா நின்ற திசை நோக்கிச் சுடுகின்றது. வேதாவை அவதானமாக காப்பாற்றிக் கொள்கின்றனர்.

''பட்டகாலிலே படும், கெட்ட குடியே கெடும்'' என்பது சரியாகத்தான் இருக்கின்றது வளைத்துக் கட்டியிருந்த மரத்தடியொன்று பலமாக தாக்கி விடுகிறது அந்தத் தோழனை; காட்டு விலங்குகளுக்காக யாரோ பொறிவைத்திருக்கின்றனர். அந்த பொறித் தடிதான் அடித்து விடுகின்றது. தாங்கமுடியாத வலியினைப் பற்றிக் கொள்கின்றது. ஆ!...... என்று நெஞ்சை பிடித்தவாறு கீழே இருக்கின்றான் கண்களில் கண்ணீர் பனிக்கின்றது. அவனை நோக்கிய கண்கள் அனுதாபிக்கின்றன.........

ஹெலிஹொப்ரரின் தொடர்ச்சியான தாக்குதலில் இருந்து மீள்வதற்காக காயப்பட்டவர்களை மறைவாக பற்றைப் பகுதிக்குள் வளர்த்தி விட்டு தோழர்கள் மறைந்து கொள்கின்றனர்.

அந்தக் கணமே! கோரம்...... கோரம்......

அந்தோ! மார்பில் குண்டு பாய்கின்றது. தாங்க முடியாத வேதனையால் வேதா துடிக்கின்றான்.

ஏற்கனவே கால்களை பறி கொடுத்திருந்தவனை; இப்போது அவனது மக்களை நேசித்த இதயத்தையுமல்லவா சிதைத்து விட்டனர் படுபாவிகள்!

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

களத்தில் ராணுவத்தினரை தாக்கடா சுடடா என்று வார்த்தைகளைப் பொழிந்தவன் வாய் திறக்கவேயில்லை. சிறு முனகல் நிறைந்த ஓசைகள் நோவுற்றுப் பிரசவமாயின. தாங்கொணு வேதனை தாங்க முடியாது கழுத்தில் கட்டிக் காத்திருந்த வெள்ளை நிறப் போத்தல் அவன் கண்களில் பட்டதோ? என்னவோ? இட்டுகரம் எடுத்துக் கொடுக்க உணவை உட்கொள்வது போல் உண்டு விடுகின்ருன். தோழர்கள் பாய்ந்து செல்கின்றனர். தடுத்து நிறுத்தி விட முடியாத ஏமாற்றம் சூழ தலைகுனிந்து நிலம் நோக்கி நிற்கின்றனர்.

''வேதா என்ன இது''...... அந்த ஒரு தோழனின் அழுகையோடு பிறந்தது.

ஒரு பூ மண்ணில் மணம் பரப்பி எல்லோரும் மகிழ்வுற சிறிது நேரம் சிரித்து விட்டு. மீண்டும் மண்ணில் உதிர்கிறது. அதன் முகம் நீலம் காய்க்கின்றது. அவன் கண்கள் ஒடிச்சொருகுகின்றன, தாக்குதல் முடித்து வீடு செல்ல விரும்பியவன் விடுதலையையே அடைந்து விட்டான்.

காயப்பட்டவாகள் பல தடவை குப்பி அடிக்க எத்தனித்தனர்,

''அமான் எங்களை நீங்கள் கொண்டு செல்வதனுல் உங்களையும் இழந்து விடும் பேரபாயம் உண்டு.,, என்று கருத்துப்பட ஒரு தோழன் சொன்னது நினைவில் வந்தது, பல மைல்களுக்கு நடந்து செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை நேரலாம் எமது இரகசிய பாதைகளை அவர்கள் அறிவதற்கு நிறைய சந்தர்ப்பங்களுண்டு, தடை செய்யப்பட்ட பிரதேசங்களாக இருப்பதனுல், அவ்வாறு கருதினுர்கள்.

'ஹெலிஹொப்ரர் எம்மோடு பொருதும் வேளை இனி மறுதாக்குதல் நாம் தொடுப்பதில்லை என எண்ணினேம்', அதற்கான கட்டளையையும் அண்ணர் பிறப்பித்திருந்தார், அவர்களின் பலம் வாய்ந்த இராணுவ முகாம் ஒன்றை முற்றுகையிட்டு



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அழித்து விட்ட சந்தோஷத்தை அனுபவிக்க முடியவில்லை தொடர்ச்சியாக சாவுக்கு சவால் செய்துவிட்டு அரை அடி தூர நகர் வைக்கூட மேற்கொள்ள வேண்டியிருக்கின்றது ஹெலிஹொப்ரர் முதலில் கூறியது போன்று ஒரு பெரியதந்திர நடவடிக்கையைக் கையாண்டது, காட்டில் சசலதிக்கும் எமது இரகசியப் பாதைகள் தோறும் இராணுவம் முற்றுகை செய்கின்றது என்பதை அவர்களின் நடமாட்டத்தை வைத்தே தெரிந்து கொள்கின்றோம்.

''நாசம் விழுந்தது,, என்று ஒரு தோழன் தலையில் அடித்துக் கொண்டான்.

ட்றக்ரறிலும் போக முடியாது,என்று அவன் கருதி விட்டிருந்தான், ''வேதாவையும் இழந்து விட்டோம் காத்தா... இல்லை......... ... மாமா தான் இருக்கின்றான். எனப்பேசிக் கொள்கின்றனர். ட்றக்ரர்களை ஓட்ட இனி யாருண்டு? இனிக என்ன செய்வோம்?

ஹெலி ஹொப்ரரின் ரோந்து நடவடிக்கை மோசமானதாக இருந்தது; இதனால் எமது தோழர்களில் சிலர் வழி மாறியும் சென்றிருந்தனர்.

ஒரு தோழன்''மாமா எங்கே?",என்றான்.

அந்தவரிசையில் மாமாவைக் காணவில்லை'பாதை மாறியவர்களில் அவனும் இருக்கலாம்;, என ஊகம் தெரிவிக்கின்றனா நேரமும் காலை பன்னிரண்டுக்கு மேலாகியிருந்தது, காலை ஆகாரமோ மதிய உணவோ ஏதும் இதுவரை இல்லை.

கொச்கிளாய் கிராமத்தை தாண்டிச் சென்று கொண்டிருக்கிறோம்' எனி எமது பாதைகளால் செல்வது முட்டாள் தனமானது எனவே காட்டூடாக புது வழி சமைக்கின்றோம். ஒரு தோழன், மகான் தனக்கருகில்இருந்தாகவும் அவனை நாம் இழந்து விட்டோம்; என்று பின்னரே நாமறிகின்றோம். அவன் தனக்கருகில் இறந்து கிடந்த தோழர்களின் துப்பாக்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கிகளை எடுத்து எதிரியோடு கோபா வேசமாக மோதினு லும் அவனது றவைகள் முடிந்த நிலையில் தான் அவன் அவ் வாறு மேற் கொண்டான் என்றும் அந்த வீரன் சொல்லி கொண்டான் இரா ணுவத்தினரைபலமாக தூஷித்தாலும் மகானை இறந்து விட்டமை மனதில் மேலும் கவலையைக் கொடுக்கிறது. தாங்கமுடியாத சோக உணர்வுகள் நெஞ்சில் மிதந்து கொண் டிருக்கின்றன. தோழர்கள் வழி நீட்டும் அதிக தடவைகள் இருந்துஆறுவதும் எழுவதுமாக வந்தனர்.

எல்லோரும் ட்றக்ரர் விட்டிருந்த இடத்தை அண்மிக்கின்ற னர். அங்கே இராணுவ உடையில் சிலர் நிற்பதைக் கண்டு எமது தோழர்கள் மறைந்து கொள்கின்றனர்.

அவர்கள் யார் ... ............இராணுவத்தினரா?

ஆம் அப்படியாகத் தானிருக்க வேண்டும். என நினைத்தார் கள் ட்ரக்ரர்களை பாதுகாப்பாக விட்டுச் செல்ல முடியவில்லை. என நினைத்தவாறு நடந்து கொள்ள தீர்மானிக்கின்றனர். அந்தக் கணங்களில் அவர்கள் எம்மை அழைத்தார்கள் என்ன...... ? எங்கள் மொழியில பேசுகிறார்களே! கேட்க இனிமையாக இருக்கின்றது, எனினும் சிறிது ஐயம் எழுந்து தணிந்து விடுகிறது. அவர்கள் எமது வீரர்கள்தான் நாயாற் றுப் பாலத்தின் இராணுவத்தினரை தாக்கி விட்டு வந்திருந் தனர் அவர்கள்.

''இராணுவ முகாம் தாக்குதலின் போது மூல்லைத்தீவு இராணுவ முகாமில் இருந்து கிடைக்க இருக்கும் உதவியை தடைசெய்வதற்காக நாயாற்றுப் பாலத்தில் கண்ணி வெடி களை நிலைப்படுத்திக் கொண்டு தயார் நிலையிலிருந்தோம். நாம் எதிர்பார்த்த சங்கள இராணுவத்தினர் அவ்விடத் திற்கு வந்தனர். இந்தவேளை எமது கண்ணிவெடி சரியாக வாகனத்தின் யந்திரப் பகுதியைத் தவிர்த்து இராணுவத் தினர் கூட்டமாக இருந்த பகுதி அண்மிக்க வெடித்துச் சிதறியது. ஏனைய வாகனங்களில் இருந்து குறித்த சில



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இராணுவ வீரர்களை எமது தோழர்கள் சுட்டுக் கொன்ற னர். அவர்களின் பலமதிகமாக இருந்தது.

அவர்களுக்கான சாவை எந்த மரங்களில் மறைந்திருந்து நிர்ணயிக்கிறோம் என்பதைக் கண்டு கொள்ள, அவர்களால் முடியவில்லை. ஒரு சிலர் அவ்விடங்களிலே பாதுகாப்பை எடுத்துக் கொண்டனர்.

கொக்கிளாய் இராணுவ முகாமுக்கு உதவிபுரிய வந்தவர் களுக்கு உதவிசெய்ய இன்னுமோர் குழுவை வரவழைக்க வேண்டிய நிலை, அவர்களுக்கு ஏற்பட்டது. இதனால் அதி தாக்குதலை முழுமைப்படுத்த முடியவில்லை. இராணுவத்தி னரில் அதிகமானோர் காட்டைச் சுற்றிவர நிலைகளை எடுக் கத் தயாராகினர். இதனைக் கண்டு கொண்ட நாம் தொடர்ந்து மோதிக் கொள்வதை நிறுத்திக் கொண்டு வெற்றிகரமாக பின்வாங்கினோம்.

சல சலத்துக் கேட்ட திசைகள் தோறும் இராணுவத்தி னர் குண்டுகளால் பொழிந்தனர்.

அதிஷ்டவசமாக நாம் தப்பித்தோம். குண்டுகள் எம்மைத் தாக்காதவாறு குனிந்து கொண்டு ஓடினோம்'' என்று தமது தாக்குதல் பற்றி அத்தாக்குதலுக்கு தலைமை தாங்கிய வீரன் அண்ணனுக்கு சொல்லிக் கொண்டிருந்தான். அண் ணன் அவர்களிடமே காயப்பட்டவர்களை கொண்டு சேர்க் கும் பொறுப்பை ஒப்படைத்தார். செவ்வனே அப்பணியை செய்து முடிக்கும் வல்லமை அவர்களிடம் இருந்தது... அந்த வீரர்கள் அப்பணியை செய்து முடிப்பதாக உறுதி பகன்றார்கள். அவர்கள் சுருக்கமான பாதை ஒன்றை தேர்ந்து அவ்வழியால் நகர்வதாக தீர்மானிக்கின்றனர்.

இந்நிலையில் குழுக்கள் இரண்டாகப் பிரிந்து நகர வேண்டிய நிலை ஏற்பட்டது. அண்ணர் தலைமையிலான குழுக்கள் கடினமான பாதைகளால் நகரவேண்டி இருக்கின் றது. அனைவரும் ஒன்றாக நகர்வது ஆபத்தைக் கொடுப்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

பதாகவே தெரிந்தது. இந்த நிலையில் தான அவர்கள் பிரிந்து கொண்டு நகரத் தொடங்கினர்.

காயமடைந்தவர்களுக்கு நோய் எதிர்ப்பு முறிகள கொடுக்கப்பட்டிருந்தன. காயங்களில் மருந்து இட்டு கட்டப்பட்டிருந்தது. ஒரு தோழனின் காலில் பாய்ந்திருந்த குண்டு எலும்பை சிறிது தேய்த்துக் கொண்டு சென்றிருக்க வேண்டும், அதனால் அவன் பெரிதும் அவதியுறுகின்றான். சுண்டிச் சுண்டி இழுப்பது போன்ற வலி அவனுக்கு ஏற்பட்டு இருக்கின்றது.

பல தடவைகள் அவன் ''அம்மான் என்னால் ஏலாதிருக்கு'' என்று கூறியழுதான். சிலவேளை அவனது காயத்தில் குழைக் கொப்புகள் உராசிய போது பற்களை நறுமி கண்களை மூடிக் கொண்டு ஆ!...... ஆம்மா என்கின்றான்.

''அம்மான் எனக்கு என்ன நடந்தது'' எனக் கேட்டு பிதற்றவும் செய்கின்றான்.

காயமடைந்திருந்த ஒன்பது தோழர்களையும் கொண்டு சேர்க்கும் பணியே எமக்கு அப்போது பாரிய வேலையாக இருந்தது.

அழுகையும் வேதனையும் நிறைந்த அவர்கள் முகங்கள், அவர்களில் சிலர் சுயநினைவு அற்றிருந்தனர்.

''தண்ணீர் தண்ணீர்'' என்று அடிக்கடி ஒரு தோழன் கேட்டுக் கொண்டான். தண்ணீர் தாகத்தால் எல்லோரும் துடித்துப் போயினர். அவனின் தொடர்ச்சியான கதறல் எம்மால சகித்துக கொள்ள முடியவில்லை.

காட்டைக் கடந்து சென்று கடற்கரையை அண்மித்திருந்தனர். தோழர்களை கொண்டு செல்வதற்கு படகு ஒழுங்கு செய்வதற்காக தோழர்கள் சிலர் சென்றிருககின்றார்கள். கரையில் ஒருசில குடில்கள் மட்டுமே இருக்கின்றன. அந்த குடில்களில் வாழும் மக்கள் எம்மைக் கண்ட



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தும் பயந்துகொண்டார்கள். அதனால் அவர்களுக்கு எம்மை இனம் காட்ட வேண்டிய நிலை இருக்கின்றது. மத்திய வயதை உடைய ஒருவர் எம்மோடு மிகவும் அன்பாக பேசினார்,

''உங்களுக்கு எந்த உதவியையும் என்னால் முடிந்த வரை செய்து தருகின்றேன்'' என்று அந்த மனிதர் சொன்னார். காயமுற்றிருந்த எமது தோழர்களை மணல் நிறைந்து கிடந்த இடத்தில் கிடத்தப்பட்டிருக்கிறார்கள்.

அவர்கள் தயாரித்துத் தந்திருந்த தேநீரை எல்லோரும் அருந்துகின்றோம். அவர்களிடம் ''படகு ஒன்று தந்து உதவுமாறு கூறினோம்,'' எமது காயமடைந்த தோழர்களை கொண்டு சேர்க்க அது பெரிதும் உதவியாக இருக்கும்'' என்றும் அவர்களுக்கு கூறினோம். அவர்கள் பெருமனதோடு உதவ முன்வந்தார்கள்.

கரையில் தரித்திருந்த படகை எடுத்துக் கடலுள் இறக்கினோம். ஒரு அடி உயர அளவில் கடலில் நீர் இருந்தது. அதனால் படகை இழுத்துச் செல்ல வேண்டியிருக்கின்றது. படகு மிதக்கவில்லை. படகுள் சாக்குகளை விரித்து மெத்தை போன்று செய்திருந்தோம். அதன் மேல் காயப்பட்டவர்களை கிடத்தி படகை இழுத்துச் செல்கின்றோம். இடுப்பு வரை சேற்றுள் புதைந்து விட்டிருக்கின்றோம். எனினும் சேற்றுக்குள்ளால் படகை இழுத்து சென்று கொண்டிருக்கின்றோம்.

ஒரு மைல்கள் வரை அப்பிரதேசம் நீண்டு கிடக்கின்றது. அப்பிரதேச எல்லைகளைக் கடந்து செல்ல எமது தோழர்கள் பெரிதும் கஸ்டமடைகின்றனர். அதிக நேரங்களின் பின் பிரதான பாதை ஒன்றை அண்மித்து எல்லோரும் கரை சேர்கின்றோம். அந்தப் பாதையைக் கண்டதும் எல்லோரும் சந்தோஷம் அடைந்தோம். ஆனால் சந்தோஷம் நீடிக்கவில்லை. அப்பாதைகளூடாக எந்த வாகனங்களும்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

போக்குவரத்திலீடுபடவில்லை, இந்த நிலையில் நாம் ஒரு கிரா மத்தை அண்மிக்கின்றோம். அக்கிராமம் வெறிச்சோடிக் கிடக்கின்றது. வீதிகளில் ஓரிரு மனிதர்கள் துயரம் சுமந்து செல்கின்றனர். எங்கும் ஒரே வெறுமை காய்த்துக் கிடக் கின்றது. அங்கு பழகிய ஒரு சில முகங்களைக் கண்டோம். அவர்கள் எங்களுக்கு நன்கு தெரிந்தவர்களாகி இருக்கின் றனர். அவர்களிடம் எமது நிலையை எடுத்துக் கூறு கின்றோம்.

அவர்களும் எம்மோடு எமது கஸ்டங்களையும் அனுபவிக்கின் றனர். எமது தோழர்களை அவர்களும் தூக்கி வருகின்ற னர்.

மாட்டுவண்டி ஒன்றின் மூலம் கை, கால்களில் முறிவுற்றி ருந்த தோழர்களை எடுத்துச் செல்கின்றோம். இவ்வாறு எமது பயணம் நடந்து கொண்டிருக்கின்றது. அன்று இரவு பூராவும் நடந்து கொண்டிருக்கின்றது. மறுநாள் விடியற்காலை எமது தளத்தை சென்றடைவோம் என எண் ணியிருந்தோம். தோழர்களின் காயங்களில் இருந்து மணம் கிளம்பியிருக்கின்றது. காயங்களை துப்பரவு செய்யும் மருந் தும் தீர்ந்திருந்தது. அதிகமாக எதையும் நாம் எடுத்துச் செல்லவில்லை. அவையே எமக்கு பெரும் சுமையாக மாறி விடாதல்லவா.........

எம்மோடு வந்திருந்த கிராமத்தவர்கள் ரவியைப் பற்றி எம்மிடம் விசாரித்தார்கள்.

''ரவி எங்கே'' என்ற அவர்களது கேள்விக்கு பதில்சொல்ல சங்கடமாயிருக்கின்றது. அங்கு வந்தவர்களிற் சிலர் ரவியின் நெருங்கிய உறவினர்களாக இருக்கின்றனர். அவர்களால் தாங்கிக்கொள்ள முடியுமா? இந்த நிலையிலும் அவனது வீர மரணத்தை அவர்களுக்காகவே வாழ்ந்து போய்விட்ட அவனது வாழ்க்கையை எப்படி மறைப்பது. அவனைப்பற்றி சொல்லத் தொடங்கிய போதே அவர்கள் கண்கள் நிறைந்து



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

விட்டன. அழுத கண்ணீர் வீரத்தோடு மார்பில் உருண்டு மண்ணில் சிதறின. ரவி கொக்கிளாய் இராணுவ முகாம் தாக்குதலில் வீராவேசமாக எதிரியோடு பொருதியதையும் அவன் இராணுவத்தினரை எதிர்கொள்ளும்போது அவன் நடந்துகொண்ட விதங்கள் பற்றிப் பேசிக்கொண்டு நடைப் பயணம் சென்று கொண்டிருக்கின்றது.

அந்தக் கிராமத்தவர்களில் ஒருவர் "தான் ரவியை சந்திப்பதற்கு வந்ததாகவும் அன்றைய தினம் அவர் தாக்குதலுக்குச் சென்றுவிட்டிருந்ததாகவும் பின்னர் தான் அறிந்துகொண்டேன். ஐயோ! கடைசி நேரத்தில்கூடஎன்னால் காண முடியவில்லை,, என்று பெரிதும் கவலையோடு கூறிக் கொண்டனர். இந்த நேரத்தில் அவர்களுடன் ரவி பங்கு கொண்ட தாக்குதல்களை பற்றி பேசிக் கொண்டு வந்தோம்.

சிங்களவர் மயமாக்கப்பட்டிருந்த புல்மோட்டைப் பகுதி அங்கு எமது மக்களின் பாரம் பரியமான பிரதேசங்களை ஆயுதம் தரித்த சிங்களக் காடையர்கள் அபகரித்திருந்தனர். அந்த இடத்தில் முப்பத்தி நான்கு பேரைப் பலி கொண்ட தாக்குதலில் இவர்கள் பங்கு கொண்டனர். வெடிமருந்து அடையப்பட்ட கலன்களையும் ரொக்கட்லோஞ்சருக்கான ஏவுகணைகளையும் காட்டின் ஊடாக அதிக தூரம் நடந்தே எடுத்துச்செல்கின்றனர்.வெடி மருந்துக்கலனில் இருந்து கிளம்பும் மணம் தொடர்ச்சியாக ஓரிரு நாட்களுக்காயினும் தலைவலியையும் மூட்டுக்களில் பாரிய வலியையும் ஏற்படுத்தும் அதனைக்கூட பொருட்படுத்தாது காவிச் சென்று தாக்குதலை மேற் கொள்கின்றனர். இரண்டு ட்றக்குகளில் சிங்கள ராணுவத்தினர் இவர்கள் காத்திருந்த இடங்களை நோக்கி நகர்ந்து வந்து கொண்டிருந்தனர். கண்ணி வெடி வைக்கப்பட்டிருந்த இடத்தைக் கடக்க முயன்றதும். ட்றக் புகை மண்டலத்தோடு சிதறிப்பறந்தது.

அதற்குள் பத்தொன்பதுக்கு குறையாது இருந்த இராணுவத்தினர் உடல்கள் சிதைந்த நிலையில் மரணத்தைத் தழுவினர். பின்னுக்கு வந்திருந்த ட்றக்கை நோக்கி ரொக்கட்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கள் மோதி வெடித்தன அதற்குள் சடுதியாக பாய்ந்து கொண்ட இராணுவத்தினர் குறித்த பிரதேசத்தை நோக்கி நின்றனர். அவர்களின் பலமான தாக்குதலை தனியனாக நின்று 'ஐங்கரி' எதிர் கொள்கிறார்.

மாமாவின் கைக்குண்டுகள் அவன் குறித்த இடங்களில் விழுந்து வெடிக்கின்றன. ஏவுகணை லோட்பண்ணிக் கொண்டிருந்த தனபால் அங்கு கிடந்த ஆயுதங்களை எடுக்க ஓடினான். அவனை இழுத்துக் கட்டுப்படுத்த மாமா பலத்த சிரமம் உற்றான் சிறந்த தாக்குதல் வீரனும் அஞ்சா நெஞ்சம் படைத்த. அவனின் செய்கை எம்மால் மறக்க முடியவில்லையே........

இவ்வாறு அவர்களுக்கு இடையில் நடந்த சம்பவத்தின் போது ஐங்கரியில கோரமான தாக்குதலை எதிர் கொள்ள முடியாது சிதறி ஓடிச் சுட்டுக் கொள்கின்றனர். இந்த நேரத்தில் எதிரியிடமிருந்து பாய்ந்து வந்த குண்டு சுடாபியை' க்காயப்படுத்துகின்றது.


காயப்பட்ட தோழனைக் காப்பாற்றுவதற்காக படுக்கை நிலையில் இருந்து தாக்குதலை மேற்கொண்டவன் எழுந்து அவனைத் தூக்கிக் கொண்டு செல்ல முயல்கின்றான். அவர்களின் தாக்குதல் சுடாபியை நோக்கிக் கொண்டிருந்த வேளை ரவி தனது மறபிளின் நிலையை தொடர்ச்சியாக தாக்குவதற்கு தயாராக்குகிறான். ஐங்கரன் மார்பில குண்டு பாய்கிறது. அந்த வீரன் தனது நண்பனை அணைத்தவாறே மண்ணில் சாய்கின்றான்.

ஹெலிஹெப்ரர் இயங்கும் சத்தம் பலமாக கேட்டுக்கொண்டிருக்கின்றது, எமது வீரர்கள் நின்ற இடம் நோக்கித் தாழ்வாய் பறந்து சுடத் தொடங்கிற்று.

அதனை நோக்கி தோழர்கள் சுட்டபோது குண்டுகள் வழுவிச் சென்றன. அந்த வெளியைக் கடக்கும்வரை பலத்த கஸ்டத்தை எதிர்நோக்கினர். சிறிது தூரம் ஓடுவதும் சுடுவதுமாக நகரத் தொடங்கினர். அங்கு அவர்கள் நின்று



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



தர்மராசா (ரவி)

செம்மலை

02 - 11 - 1961

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

சமர் புரிவதற்கு எந்தவிதமான நிலைகளும் எடுக்க முடிய வில்லை. அதிக நேரம் தாமதிப்பதால் முகாமில் இருந்து இராணுவத்தினரின் முற்றுகையையும் எதிர்கொள்ள வேண்டி வரும் இந்த நிலையில் அனைத்து வீரர்களும் பாதுகாப்பாக திரும்புவதே சரியானதாகத் தெரிந்தது.இதனால் இவர்கள் ஷெவிஷெப்டரின் தாக்குதலை,முறியடித்துக் கொண்டு தளத்தை வந்தடைகின்றனர். இன்று அத்தகையவீரர்களை எல்லாம் இழந்துவிட்ட கவலை வாட்ட நடந்து கொண்டிருக்கிறோம் அவர்கள் கதையைக் கேட்டு அழுது கொண்டார்கள்.

# 16

தாக்குதல் முடிந்து மறு நாள் உதயமான விடியல் பரபரப்பு மிகுந்த காணப்பட்டது' கிராமங்கள் ஊடாக நடந்து கொண்டிருக்கிறோம் அக்கிராம வாசிக எம்மைஅன்பாக உபசரித்தனர்','நாம் கிராமங்களைக் கடந்து சென்று கொண்டிருக்கின்றோம் என்று யாரும் பேசிக் கொள்ள வேண்டாம்;'' என்று அவர்களைக் கேட்டுக் கொண்டோம். அவர்கள் இறுதிவரை அவ்வாறு நடந்து கொண்டார்கள். அக்கிராமங்கள் அடிப்படைத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்ய முடியாத வறுமை நிலையை எய்திபிருந்தன. வீதிகள் வெறிச்சோடித் தான் கிடந்தன. ஒரு சிலரது நடமாட்டம் தான் அங்கு இருக்கின்றது.

காலை உணவுகள் பெரிதாக எடுத்துக் கொள்ளமுடியவில்லை. இரவும் நித்திரையின்றிய சோர்வினாலும் அதிக தூரங்கள் நடந்த களைப்பினாலும் எமது தோழர்கள் துன்புற்றனர். எப்படியாவது தளத்தை அடைந்து விட வேண்டும். என்ற முனைப்போடு நடந்து கொள்ளகின்றனர்' நாம் ஒரு கிராமத்தில் தரித்திருந்த வேளை ஒருமைல் தொலைவில் கூடஅவர்கள் எமது வருகையை காத்து நின்றனர். நாம் பிரதான பாதை வழியே நடந்து கொண்டால் அப்போராட்டத்திலிருந்து காப்பாற்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

றப்பட்டோம். இதனால் நாம் காட்டில் இராப்பொழுதுகளை கூட கழிக்காது நடந்து கொண்டோம் நான்கு நாட்களாக தொடர்ந்து பாரிய கஷ்டத்தை அனுபவித்தனர். இன்று விடிந்தும் தளத்தை அடைவது முடியாத காரியமாகிவிட்டது கால்கள் தளர்ச்சியுற்றன. நடை மெலிந்தது. கொப்புளங்கள் ஏற்பட்டிருந்த கால்களில் சீழ்பிடித்திருந்ததால் பெரு வலி ஏற்பட்டது.

பரட்டைத் தலைகளுடனும், இரத்தம் சிந்திய ஆடைகளுடனும் அவர்கள் இருந்த நிலைகள் இன்றும் எம்மால் மறக்க முடியவில்லை. இவ்வாறான தொல்லைகள் சூழ்ந்திருந்த போதும் அவர்களிடம் இருந்த வலிமை அளப்பரியது.

எமது இயக்க ஆதரவாளர்கள் சிலர் எமக்காக உணவுகளைத் தயாரித்து வழியில் காத்து நிற்கின்றனர்.

மதிய வேளை பசி மேலிட்டு இருக்கின்றது.

நிறைய சாப்பிட வேண்டும் என்ற ஆசை தோழர்களிடம் எழுந்தன. ஆனால் அவர்களால் முடியவில்லை. தொண்டைப் பகுதிகள் சுருக்கம் எய்தி இருந்தன. ஒரு கவளம் உணவைக் கூட சாப்பிடுவதற்கு பெரிதும் அவஸ்தைப் பட்டனர்.

அதிக நாட்களாக உணவுகள் எடுத்துக் கொள்ளாததால் இந்த நிலை ஏற்பட்டு இருந்தது?

எனினும் தமது பசியை ஓரளவு தீர்த்துக் கொண்டனர். "எமது ஆதரவாளர்களிடம் ட்றக்ரர் ஒன்று பெற்றுத்தருமாறு கோரினோம்."

ட்றக்ரர்கள் உள்ளவர்களிடம் நிலையைக் கூறிக் கேட்ட போதும் கூட அவர்கள் தர மறுத்து விட்டனர். இந்த நிலையில் நாம் மேலும் நடந்து செல்வதாக இருந்தால் எமது தோழர்களின் நிலைமை மோசமாகி விட்டிருந்தது. இன்னும் நாம் தாமதிப்பதால் எமது தோழர்களை இழந்துவிடும் நிலை கூட எமக்கு இருந்தது. இதனால் ட்றக்ரரைத் தருமாறு மன்றாட்டமாக கேட்டுக் கொண்டோம். அதன்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

பின்னர் அந்த ட்றக்ரர் சொந்தக் காரர்கள் பலமணி நேரத்தின் பின் ட்றக்ரரை தந்துதவினார்கள்.

ட்றக்ரர்களில் தோழர்களை ஏற்றி தளத்தை நோக்கி நகரத் தொடங்கினோம். எமது அடுத்த குழுவினரின் தொடர்பு எமக்குக் கிடைக்கவில்லை. ''அவர்கள் எப்படியான வழிகள் ஊடாக நடந்து கொள்கிறார்களோ? எது நடந்ததோ? தெரியவில்லை?'' எனத் தோழன் ஒருவன் கூறிக் கவலைப்பட்டுக் கொண்டான்.

தொலைத் தூர செய்தித் தொடர்பாளர் அவர்களுடனான தொடர்பை ஏற்படுத்த முயற்சித்தார்.

ஒவ்வொரு மணித்தியாலத்துக்கு ஒவ்வொரு தடவையும் அவர்களின் தொடர்பை ஏற்படுத்த அவர் பெரிதும் கஸ்டமுற்றார்.

இறுதியில் அவர்களின் தொடர்பு கிடைக்கின்றது. அவர் முகத்தில் ஆனந்தம் வெடித்தெழுகின்றது. அவர்களுடன் அவர் பேசிக் கொண்டிருக்கின்றார்கள்.

அண்ணர் குழுவினர் திக்கு திசை தெரியாத காட்டினூடாக நடந்து கொண்டிருந்தார்கள். ஹெலி கொப்ரரின் பேரிரைச்சல் இன்னும் காதுகளில் ஒலிப்பது போலிருக்கின்றது. கால்கள் எடுத்து அடுத்த அடி தொடர முடியாது நோக்கள் எய்தியிருந்தன. தோழன் ஒருவன் தூக்கமின்றி நடந்ததால் தலையிடியும் காய்ச்சலும் அடைந்திருந்தான். உடம்பெல்லாம் நெருப்பைக் காட்டி எரிப்பது போன்ற அனல் அவனுக்கு வீசிக் கொண்டிருக்கின்றது. இந்த நிலையில் பக்கட்டுக்குள் இருந்த தலையிடி மாத்திரையை இட்டு விழுங்க முடியாது தவித்தான். தொண்டை காய்ந்து போய் சுருங்கி விட்டன.

''பாவமடாப்பா அவன்'' என்றார் அண்ணர்.

'ஓமண்ண விளங்குது'' என்றார் அந்தத் தொடர்பாளர் அவன் ஓங்காளித்துக் கொள்கிறான். மஞ்சள் நிறமான பித்த வாந்தி எடுக்கின்றான். ஒருவாறு அவனை அணைத்து நடத்து

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கொண்டிருக்கின்றோம். தம்மைத் தாமே தூக்கி நடக்கமுடியாத நிலை.

"கை கால்கள் தமது பாட்டில் இயங்குகின்றன" என்றார் அண்ணர்.

"சொல்லுங்கம்மான்" அந்தச் செய்தித் தொடர்பாளர் தூக்கம் விழிகளைத் தழுவ சோர்ந்து மரங்களோடு முட்டி மோதி நடந்த காட்சிகள் நெஞ்சைப் பிழிகின்றன.

"எனக்கு தெரியுந் தானே" வழக்கமான பாதைகளால் போகமுடியாத நிலை. மேலும் கஷ்டத்தை கொடுக்கின்றது. "எங்கட நிலையும் படு மோசம் தானண்ணை" என்றார் செய்தித் தொடர்பாளர்.

சிவப்பு, மஞ்சள், றோஸ் பல வர்ணப் பூச்செடிகள் அழகாகத் தானிருக்கின்றது.

அந்த பூவனத்தால் நாம் நடந்து கொள்ளப் போகிறோம். பூக்கள் நிறைந்து மலர்ந்து கிடக்கின்றன, செடிகளை விலக்கிக் கொண்டு பாதை சமைக்கும் கரங்கள் தமது தொழிலைத் தொடங்குகின்றன. அங்கே ஆபத்துத் தான் நிறைந்து கிடக்கின்றது. அரம் போன்ற செடியின் தடிகள் உடலைக் கீறி காயப்படுத்துகின்றன.

வேர்வைகள் நீண்டு காயங்களில் படிந்து எரிக்கின்றன.

"என்னப்பா கொடுமை இது" எனத் தோழனின் குரல் ஒலிக்கின்றது. அந்தக் குரலில் தொனிப்பில் சலிப்பும், மெல்லிய சிரிப்பும் இழையோடிக் கிடக்கின்றது.... ...

அந்தப் பகுதியை கடக்கும் வரை மீண்டும் செத்துப் பிறந்த உணர்வுதான்......... மேலிட்டது. ஆத்திரமும் கோபமும் மேலிட அந்தச் செடிகளை முறித்துப் போட்டனர். தடயங்கள் விழும் என்பதற்காக எச்சரிக்கை உணர்வு தாண்ட நிறுத்தி விடுகின்றனர்.

தூரத்தேயும் எந்தக் கிராமங்களோ? ஆள் அரவமோ, எதிர்ப்படவில்லை. எங்கு பார்த்தாலும் முடிவற்ற பற்றைக் காடு. எம்மோடு சேர்ந்து அதுவும் வருகிறது.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

ச்.சே...! என்ன இந்தக் காடு கூடாது. எங்களைப் போக விடக் கூடாதா? என பைத்தியக் காரத் தனமாய் ஒரு தோழன் பிதற்றிக் கொண்டான்.

சிறுகாயமடைந்திருந்த தோழர்கள் எம்மோடுதான் வருகின்றனர்.

எறும்பு கடித்தாலே ஏற்படுகின்ற வலியைத் தாங்கிக் கொள்ள முடியாது தவித்தவர்கள்.

ஏன் தாயின் அரவணைப்பும் அப்படித்தானே.........?

அவ்வாறு வளர்ந்தவர்கள்; இன்று எத்தனை இடர்களை ஏறி மிதித்துச் செல்கின்றனர். அவர்கள் வாடியிருக்கின்றனர். சுட்டு விரலில் குண்டு பாய்ந்த காயத்தோடு கையைகீழே விடமுடியாது பல மைல்கள் கழுத்தில் கட்டித் தூக்கிய நிலையில் வந்த தோழனைப் பார்க்க பரிதாபமாக இருக்கின்றது. அவன் கண்களின் ஓரமாக நீர் வடிந்து காய்ந்து போயிருக்கின்றது. கையில் வடிந்திருக்கின்ற உதிரம் வெடில் நிறைந்த மணத்தை வீசிக் கொண்டிருக்கிறது.

அது அருவருக்கச் செய்கின்றது.

மருந்துகளும் ஒழிந்த நிலையில் சிரமுறுகின்றோம்.........

கொக்கிளாய் இன வெறி நாய்களோடு இவன் பொருதிக் கொண்டிருந்த வேளை இவனின் ஜி3 ஏ3 ஆயுதத்தின் பிஸ்ரல் கிளிப்பையும் உடைத்து பாய்ந்த குண்டு அவன் விரலைச் சேதப்படுத்தியது;

சுடுவில்லை அழுத்தும் விரல் உடைந்து விட்டது என்ற கவலை அவனை வாட்டியது.

“அம்மான் அது மாறிவிடும்” என்ற தேற்றுதல் மொழி அவனுக்கு நிலாவைக் காட்டிச் சோறு ஊட்டுவது போல் இருக்கின்றது.

“ஒன்றுக்கும் யோசிக்காதீங்க” என்றான் ஒரு தோழன். “அம்மா தொந்தரவு கொடுக்காதையடாப்பா” மன சினத்துக் கொண்டு நடந்தான் அந்த வீரன்.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

''டேய்! திசைக் கூட்டுப்பூச்சி உழக்கிவிடாதே'' உழக்கி விட்டால் திசை தெரியாது தத்தளிக்க நேருமாம். எத்தனையோ வேட்டைக் காரர்கள் இதனை உழக்கி விடு வந்துசேரவே இல்லையாம்; என்று கதைசொல்லிக் கொண்டு வந்தான் தோழன்ஒருவன்.

சூரியனும் நடு உச்சிக்கு வந்திருந்தான். பறுகுக் காடு தூரத்தே ஓரிரு கிராமத்து ஜனங்கள் நிற்பது தெரிந் தது. ஐயமின்றி நாம் அவர்களை நெருங்கினேம். எனினும் முன்னையகால நிகழ்வுகள் நில்! நில்! என்று கால்களை இழுத் துப் பிடிப்பது போலிருக்கின்றது. எமது முக்கிய கெரில்லா த் தளங்களை அண்டிய காட்டுப் பகுதிகளில் இராணுவம் ட்றக்ரர் டிறைவர்கள் போல விறகுஏற்ற வந்ததாக ஆடிய நாடகங்கள் நாம் பார்க்காதன அல்ல- இவர்களை யார் என்று தெரியாத முறையில் நாம் அறிய முயன்றதும் காட் டுக்குள் ஓடி மறைந்ததும் தமது பாதுகாப்புக்காக கொண்டு வந்திருந்த 'பிஸ்ரலை கொக்பண்ணி சுடு நிலைக்கு கொணர்ந் தமையையும் நாமறிவோம். இது போன்ற பல அனுபவங் களை நிறையப் பெற்றிருந்தனர். இதனால் அவர்களை அறியா மல் நெருங்க சிறிது சங்கடப்பட்டோம்.

அந்தக் கிராமத்தில் ஓரிரு ஓலைக்குடில்கள் தான் தெரிந்தன. மழைக்காலங்களில் மழைநீர் ஒழுகாதிருப்பதற் காக வைக்கோல் இடப்பட்டிருந்தது. அந்த வீட்டில் வய தான தாத்தாவும் ஒரு பாட்டியும் இருந்தார்கள். அவர் களின் அருகில் வேட்டைக் குணம்மிக்க நாய் ஒன்று நிற் கின்றது. அது மோப்பம் இட்டுக் கொண்டு செல்கின்றது' அங்குமிங்குமாக ஒரு சுற்றுச் சுற்றுகின்றது. மறுகணம் மூர்க்கமாக பாய்ந்து சென்றது. அந்தத் தாத்தா நாயைத் தனது கட்டுப்பாட்டுள் கொண்டுவர எண்ணினார்.

அந்த நாயின் பெயரைச் சொல்லிக் கூப்பிடுகின்றனர்.

அந்த நாயின் பெயர் நல்ல ஞாபகமாக இல்லை; அது பற்றை களையும் இடறிப் பாய்ந்து ஓடிய வேகம் எமக்கு சந்தோஷத் தைக் கொடுக்கின்றது. அந்தத் தாத்தா; ''தம்பி! அதுஎதை யோ கண்டு விட்டது போலிருக்கு சிறிது பொறுங்கள்; வந்தி



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

டுகிறேன்.'' என கூறிவிட்டு துடிப்போடு' சிறிது அச்சமூட்ட ஓடுகின்றனர்'

சிலவேளை நாய் கொடிய விலங்குகளையும் இனமறியாது மாட்டி விட்டால் நாய்க்கு விபத்து நேர்ந்து விடக்கூடாது என்ற துடிப்புத்தான் அது எனப் பின்னர் அறிகின்றோம். நாயின் கடைவாயில் இரத்தம் வடிந்து கொண்டிருக்கின்றது அந்தத் தாத்தாவின் கையில் பெரிய முயல் ஒன்று இருக்கின்றது. அவருக்கு ஏற்பட்ட சந்தோஷத்துக்கு அளவே இல்லை தனதுபொக்கு வாயைத் திறந்து சிரிக்கின்றார்.

என்ன? அப்படிச் சந்தோஷப்படுகிறீர்கள்' எனக்கேட்டபோது, ,,பிள்ளைகளுக்கு முயல் வாட்டித் தரலாம் என்பது தான்...... ..—....,

தாத்தா முயலை உரித்து நெருப்பில் வாட்டி எடுக்கின்றார்' தோழர்கள் சிலர் காவலில் நிற்கின்றனர் சிலர் படுத்துத் தூங்குகின்றனர். எருமைப் பாலைக் கறந்து காய்ச்சினள். அந்தத் தாய் குனிந்து கொண்டு கட கட என்று நடந்து பெரிய விறகு கட்டைகளை எடுத்து அடுப்பில் இட்டு மூட்டி விட்டார் ....

தாத்தா முயலைச் சிறு சிறு துண்டுகளாக அறுத்து வாட்டிக் கொண்டு வந்திருந்தார்கள். உப்புத்தூள்சிறிதளவு தூவிக் கிடந்த இறைச்சித் துண்டுகளை தோழர்கள் எடுத்துச் சுவைக்கின்றனர். சூரியன் வெப்பம் தணிந்தான் மீண்டும் எல்லோரும் நடக்கத் தயாரானார்கள்

அந்த வேளை வழி தவறிச் சென்ற எமது தோழர்கள் எம்மை வந்தடைந்திருக்கின்றனர். வழி தவறிய மூவரும் முகாமை அணமித்த காட்டில் தங்கியிருந்து திசைகளை குறித்து நடக்கத் தொடங்கினராம் தாம் உயிரோடு போய் சேரும் என்ற நம்பிக்கை தமக்கு இறுதிவரை இருக்கவில்லை எனினும் ,,நடந்து செல்வோம் வருவது வரட்டும் என நினைத்துக் கொண்டனராம்.,' தாங்க முடியாத பசியின்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

மெலிட்டால் காட்டில் விளாங்காய்களைப் பறித்து உண்டதாகவும் கூறினர் அவர்கள் நமது நிலை குறித்து அச்சமடைந்தனராம்.

எம்மைச் சந்தித்ததும் அவர்கள் அடைந்த ஆனந்தத்துக்கு அளவேயில்லை. முகாமை அண்டிய காட்டினுள் பெரிய மரம் ஒன்றில் நாம் ஏறியிருந்து பார்த்த போது முகாமில் ஹெலிகொப்டர் பல தடவை வந்து தரையிறங்குவது போவதுமாக இருந்தது. இவ்வாறு அந்த வழி தவறி மீண்டும் எம் வழியில் வந்த தோழர்கள் கூறிக் கொண்டிருந்தனர். எழுந்து நடக்க முடியாத நிலை அவர்களுக்கு ஏற்பட்டிருந்தது போன்ற உணர்வின் உந்தல் அந்த கிராமத்திலே தங்கி விட்டுச் சென்றால் என்ன? என அவர்கள் நினைத்தார்கள்

நடந்து சென்று கொண்டிருக்கும் போது ஒரு தோழன் நிலத்தில் இருந்து கொண்டான். மீண்டும் சுய நினைவு பெற்றவனை எழுந்து நடந்து கொள்ள முனையும் போது அவன் வைத்திருந்த கிறனைட்டை கீழே விட்டு வந்திருந்தான். அவனுக்கு அருகில் வந்த தோழன் கிறனைட்டை எடுத்து அவனிடம் கொடுத்தான் அந்த நேரத்தில் அவன் ',என்னுடையதா?,. எனத் திடுக்குற்றுக் கேட்டான்.

இராப் பொழுதும் தங்காது நடந்து கொள்ளுவோம் எனத் தீர்மானித்தனர். காட்டில் ஜில்வண்டுகளின் ரீங்காரம் எழுந்து கொண்டிருந்தது நரிகளின் ஊளைச் சத்தங்களும் கேட்க் கொண்டிருந்தன. இருண்டு கிடந்தது அந்தக்காடு'

அந்தக் காட்டூடாக நடந்து கொண்டிருக்கின்றோம். ஆற்றைக் கடந்து செல்ல வேண்டியிருந்தது. ட்றக்ரரில் வரும் போது கடந்து சென்ற அதே ஆறு தான். கடந்து செல்லும் போது இழந்த எமது தோழர்களின் நினைவுகள் தான் எழுந்தன. ஆற்றைக் கடந்து கரை சேர்ந்திருந்த போது அவர்கள் குளிராமல் நடுங்கிக் கொண்டிருந்ததையும் எண்ணுமலிருக்க முடியவில்லை.


தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

''கிராமம் ஒன்றை அடைவதற்கு இன்னும் சில மைல்கள் நடக்க வேண்டியிருந்தது'' என வழி காட்டிய தோழன் கூறினான் அவனிடம் காட்டைப் பற்றிய பூரண அறிவு நிறைந்திருந்தது. காட்டில் பதித்திருக்கும் கால் தடங்களைப் பார்த்து அந்தக் கால் தடங்கள் எந்த மிருகத்துடையது எனக் கூறி விடுவான்.

காட்டில் கிளம்பும் மணத்தைக் கொண்டு மிருகங்களின் நடமாட்டம் மிக அண்மையிலா இருக்கிறது என்பும; எந்த மிருகக் கூட்டம் என்று கூட சொல்லி விடுவான். காட்டில் ஒற்றையடிப் பாதையூடாக நடந்து செல்லும் போது இடையில் அது முறிந்து விடும்.

அப்படியிருந்தும் கூட அவன் தொடர்ந்தும் பாதைகளைக் கண்டு பிடித்து கூட்டிச் சென்றான்.
நாம் ட்றக்டர் விட்டுச் சென்ற இடத்திற்கு இராணுவத்தினர் ஹெலிஹெப்ரரில் வந்து இறங்கி ட்றக்ரர்களைத் தீயிட்டுக் கொழுத்தினராம். இராணுவத்தினர் அப்பாதையில் அதிக நேரங்கள் தாமதித்து எமது வருகையை எதிர் பார்த்துக் கிடந்தனராம். என்பதை பின்னராக அறிந்தோம். இராணுவத்தினரின் வலை விரிப்பில் சிக்காது இருப்பதற்காகவே நாம் எமது வழியை கடினமானதாக இருந்தாலும் மாற்றிக் கொண்டோம்.

இதனால் இராணுவத்தினர் பெரும ஏமாற்றமே அடைந்தனர்.

தூரத்தே சில விளக்குகள் எரிந்து கொண்டிருக்கின்றன. இரவுகளில் மிருகங்கள் வயல்களை சேதப்படுத்தி விடும் இதனால் அவ்வூர் விவசாயிகள் காவலில் ஈடுபட்டிருந்தார்கள். ஒரு சிலர் ரோச்லையிற்களுடன் நடமாடுவது தெரிகின்றது.

புதிய கிராமத்தை அடைந்து விட்ட சந்தோஷம் மேலிடுகின்றது.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

பொழுது புலர்வதற்கு முன் அக்கிராமத்தின் மறைவிடத்தை நெருங்கவேண்டி இருக்கின்றது. வயல்களூடாக நடந்து சென்று கொண்டிருக்கின்றோம். எமக்கு அப்போது ஏதோ இருண்ட கண்டம் ஒன்றில் இருந்து விடுபட்டு மறுபிறப்பு எய்தியது போன்ற உணர்வு ஏற்பட்டது.

பட்சிகளின் கதங்கள் விடியலைத் தட்டி எழுப்பிக் கொண்டிருக்கின்றது. நாய்கள் பயங்கரமாக குரைக்கின்றன.
முற்றாக விடியாத காலைப் பொழுது; எமது தோழர்களை இழந்துவிட்ட துயரம் தோய நடைப்பயணம் நீள்கிறது யாரும் எம்மைக் கண்டு கொள்ள வாய்ப்பை ஏற்படுத்த வில்லை. எமது தோழர்களில் சிலர் அக்கிராமத்தவர்களின் உதவியோடு காலை உணவு எடுத்து வரச் சென்றனர்.

இப்போதெல்லாம் ட்றக்ரர்களில் நகர்ந்து கொண்டிருந்த குழுவினரின் தொடர்புகள் எளிதாக கிடைக்கின்றன. இதனால் குழுவினர் சந்தோஷமடைந்திருந்தனர்.

# 17

காயமடைந்தவர்களை பாதுகாப்பாக எடுத்துச் சென்று கொண்டிருக்கின்றோம். இந்த நேரங்களில சாந்தானும் வேதாவும் மாறி மாறி எம் நினைவுகளில் மனதில் எழுந்த எம் நினைவுகள் எம்மைக் கொலை செய்கின்றன.
கொக்கிளாய் இராணுவ முகாம் தாக்குதலுக்காக அவர்கள் ட்றக்ரர் ஓடிச் சென்ற நிகழ்வுகள் தான் இன்னும் எம் நெஞ்சில் நிறைந்திருக்கின்றது.
இறுதியாக சந்தித்தபோது கண்ட அவர்களது முகங்கள் அவர்களின் சிரிப்பொலிகள் ஒரு கணப் பொழுதுகளில் ஓடி மறைகின்றன.
அந்தி சாயும் நேரம். மழைக்கால இருட்டு வேளை வானத்தில் நட்சத்திரங்கள் ஒளி சிந்தவில்லை.


தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

தாக்குதலன்று இருந்த அதே சூழல் இன்றும் சூழ்ந்திருக்கின்றது?

அந்த நேரங்களில எமது தோழர்கள் களத்தில் எதிரியோடு பொருதியபோது எழுந்த சத்தங்களும் துப்பாக்கிச் சூடுகளும் தொடர்ந்தும் காதுகளில் ஒலிப்பது போல இருக்கின்றது.

இறந்த எம் தோழர்களை எங்கோ; இடம் தெரியாத யாருமற்ற தீவில் விட்டு வந்திருப்பது போன்ற உணர்வுகள் எழுகின்றன, முடிவில்லாத சோகத்தை நினைவுகள் இசைத்தன. அந்த ட்றக்ரர்களில் அவர்கள் நடாத்திய சம்பாஷணைகளும் சிரிப்பொலிகளும் எப்படித்தான் மனித நேய முள்ளவர்களால் மறந்துவிட முடியும்.

இறந்துபோன எம் தோழர்கள் எழுதிவிட்ட தியாக வரலாறுகள் தான் எத்தனை..... ... எத்தனை.. ......
இவர்கள் இன்றும் எம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அந்த தோழர்களின் நினைவுகளோடு ட்றக்ரர் வேகமாக ஓடியது. வீதிகளில் யாருமற்று இருந்தனர். எமது தளத்தை அடைய இன்னும் சிலமணி நேரங்களே இருக்கின்றன.

தளத்தை நெருங்க எமது தோழர்கள் உயிர்த்தெழுகின்றார்கள், புதிய துடிப்பும் புதிய வேகமும் அவர்களில் பிறக்கின்றது.

நிம்மதியையும் சுகம் பேசும் தூக்கத்தையும் அணைத்துக் கொள்ளப் போகிறோம் என அவர்கள் ஆனந்திக்கின்றனர். அவர்களை சதா நேசித்த "அந்த தாய்" முகம் கறுத்துக் கிடக்கின்றாள்.

ஆற்றின் கரையை ஊடறுத்துச் செல்லும் இருகரையும் நின்ற மரங்கள் மௌனித்து நிற்கின்றன. தளத்தில் காவலில் ஈடுபட்டிருந்த தோழர்கள் எம்மை இனம் கண்டு கொள்கின்றனர், அவர்கள் பெரிதும் மனக் கிலேசம் அடைந்திருக்கின்றனர் காயப்பட்டவர்களை தூக்கிச் சென்று தக்க

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

சிகிச்சைகளை மேற் கொள்ளுகின்றனர். எல்லோரும் தளத்தை வந்தடைகின்றனர்.

அடுத்து எமது கெரில்லா அணியினர் இன்னும் வரவேயில்லை, அவர்களை எதிர் பார்த்துக் கொண்டுதான் தோழர்கள் நின்றனர்,

''அவர்கள் வருவதற்கான சாத்தியக் கூறுகள் உண்டு என்றும் கிராமம் ஒன்றை காலையே அவர்கள் வந்தடைந்தனர் என்றும் செய்தித் தொடர்பாளர் கூறியது தோழர்களுக்கு சந்தோஷத்தைக் கொடுக்கின்றது.

தளத்தில் துணிகளால் செய்யப்பட்டிருந்த வீடுகளில் சிறுகுப்பி விளக்குகள் எரிகின்றன, அவை பெரிதாக ஒளியைக் காலிக்கவில்லை.

சிங்கள இராணுவத்தினர் எந்தச் சமயத்திலும் எமது தளங்களை முற்றுகையிட்டு அழிக்கத் திட்டம் தீட்டியிருப்பதால் காவல் பலப்படுத்தப் பட்டிருக்கின்றது.

காயப்பட்டவர்களை கவனிப்பதற்காக தோழர்கள் தூக்கமின்றி விழித்திருந்தனர். ''பிள்ளையைக் காக்கும் தாய்போல்'' இன்று பணி புரிகின்றனர், அவர்களின் முழுத் துன்பங்களையும் அந்த பராமரிப்பு சுகப்படுத்துகின்றது.

சுடு நீரில் துணியைத் தோய்த்து எல்லோரது உடல்களையும் கழுவி விடுகின்றனர்,

புதிய ஆடைகள் அணிந்து இருக்கின்றனர். காயங்கள் துப்பரவு செய்யப்பட்டு மருந்து இட்டு கட்டிக் கொண்டு ஊசி மருந்து ஏற்றிக் கொண்டும் தோழர்கள் திற்சென்றார்கள்.

அண்ணர் குழுவினர் அந்த கிராமத்தின் பசும்புற்தரைகளைப் பாயாக்கி கொண்டனர். பனிக் குளிர் காற்று வீசிக்கொண்டிருந்தது. இயற்கையின் பசுமையில் கண்கள் மேய்ந்தன. கண்கள், உள்ளம், உடல் எல்லாமே குளிர்த்தி அடைந்தன, இது போன்ற இயற்கைச் சூழல்கள் எமது



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

உறுத்தின. பயிற்சிக் காலங்களில் எமது தோழர்களோடு இத்தகைய சூழலில் நடாத்திய கலை அம்சம் நிறைந்த நிகழ்வுகளின் நினைவுகள் நெஞ்சில் மீட்டப்பட்டன. பயிற்சி முகாமிலே கலைநிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தது. அந்தக் கலை நிகழ்வில் எமது தோழர்களில் சௌனி; நிமால், சங்கரி தனபால் ஆகியோரும் பங்கு கொண்டிருந்தனர். எல்லோரும் அளவற்ற மகிழ்ச்சி அடைந்திருந்தனர், அப்போது அவர்களுக்கு பயிற்சி அளித்த எமது ஆசிரியர் எழுந்து பேசத் தொடங்கினர், எல்லோரும் அவரை நோக்கினர். அவரது முகத்தில் படர்ந்திருந்த சோகம்; அவரது கண்களில் ஒளிர்ந்த பார்வை எம்மை அனுதாபித்தன,

'எம் தோழர்களில் தவழ்ந்த சந்தோஷத்தை அவர் தொடர்ந்து நிலைக்க வேண்டும் என்றே விரும்பியிருக்க வேண்டும்.

''அடுத்து வரும் நாட்களிலும் உங்களை நான் சந்திக்கவேண்டும்... ... அன்றும் இதே முகங்களும் இதே சிரிப்புக்களும் நிறைந்திருக்க வேண்டும்'' என்று அவர் கேட்டுக்கொண்ட போது அவரின் அந்த உரையைக் கேட்ட தோழர்கள் பெரிதும் கவலையுற்றனர்.

இவ்வாறு பேசிக்கொண்ட அந்த ஆசிரியர் ஓ! என்கடவுளே என்று அழுதும் விட்டனர்..........

அன்று எம்மோடு இருந்த தோழர்கள் இன்று இல்லை...
அவர்களின் நினைவைத் தூண்டி விட்ட அந்தச் சூழல் மெல்ல மெல்ல மாறிக் கொண்டது.
சூரியனும் எழுந்து வந்தான். புள்ளினங்கள் சிறகடித்துப் பறந்தன.

அந்தக் கிராமத்திலிருந்து எமது தளத்தை அடைவதற்கான நடைப் பயணம் மீண்டும் தொடங்கிற்று.......... ஒருமணி நேரத்துக்கு முன்பாக செய்தித் தொடர்பை ஏற்படுத்திக் கொண்ட போது மாமாவை இழந்திருப்பது உறுதிப் படுத்தப்பட்டு விட்டது. வழி மாறியவர்களிலும் மாமா

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இயலாததால் அவன் நிச்சயமாக களத்தில் இறந்திருக்கலாம் என நம்பினோம். அவனுக்கு அருகில் இருந்த ஒரு வீரன் அவன் இறந்த கதையைக் கூறிக் கொண்டான்.

சில மைல் தூரப் பிரதேசங்களை நடந்து எமது குழுக்கள மேலும் பிரிந்தன.

பாதுகாப்பை உறுதிப் படுத்துவதற்காகவே குழுக்கள் பிரிந்து கொண்டன. அந்தக்குழு அவர்களது களத்தை நெருங்கிச் செல்கின்றது.

நடைப்பயணம் சோர்வோடும் வேதனையோடும் நடந்து கொண்டிருக்கிறது. தோள்களில் ஒவ்வொருவரிடமும் இரண்டுக்கு குறையாத ஆயுதங்களோடு நடப்பது மேலும் சிரமமாயிருந்தது. தோல் பைகளைச் சில தோழர்கள் விட்டு வந்திருந்தனர்.

காயமடைந்த தோழர்கள் தளத்தை அடைந்த செய்தி கிடைத்தது. அப்போது இரவு பத்து மணிக்கு மேலிருக்கும். அவர்கள் ட்றக்ரர்களைக் கொண்டு வந்திருப்பதாகவும் அவர்கள் குறித்த இடத்துக்கு எம்மை வரும்படியும் கேட்டார்கள். அதற்கு அண்ணர் இசைந்தார்.

கிராமங்களை அண்டிய பாதை ஒன்றால் கடந்து கொண்டிருக்கின்றோம். தூரத்தே எங்கோ ட்றக்ரர் எரைச்சல்கள் எழுந்து கொண்டிருக்கின்றது. ஒளி வானில் சுடராய் மிதந்தது.

எமது தோழர்களுடையது தான் எனவே அச்சமின்றி நடந்து கொண்டிருக்கின்றோம். குறித்த இடத்தை நெருங்கியதும் எல்லோரும் ஆறலாம் எனப் பேசிக் கொள்கிறார்கள்

அதிக நேரங்கள் தாமதமாகி குறித்த இடத்திற்கு நாம் போய் சேர்கின்றோம். தோழர்கள் எம்மை ஏற்றத் தயாராகவும் நின்றார்கள். அவர்கள் எம்மை எதிர்பார்த்து நின்றார்கள். தளத்தை நோக்கி ட்றக்ரர்கள் ஓடத்தொடங்கின. சிறிது நேரத்தில் தளத்தை அடைந்திடலாம் என

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஆறுதல் பகன்றார்கள்; ''தளத்தில் ஒரே பரபரப்பு மிகுந்து காணப்பட்டதாகவும் தோழர்கள் துக்கித்து நிற்கின்றார்கள் என்றும் அவர்கள் பேசிக் கொள்கின்றார்கள்'

''காந்தரூபன் என்ற ஒரு தோழன் குரல் கொடுத்தான். அந்தக் கணமே விழித்து நிற்கிறான்.

ஓ! அந்தத் தோழனையும் இழந்து விட்டோம் என நினைத்துக் கொண்டான்.

எல்லோரும் தளத்தை அடைகின்றனர். அங்கு எங்கு பார்த்தாலும் எமது தோழர்களைப் பற்றி பேசும் சாயலே தொனித்தது.

அவர்கள் சாய்ந்திருந்த மரங்கள், படுத்துறங்கிய தரைகள், இருந்து பேசி மகிழ்ந்த ஆற்றங்கரை அவர்கள் நடந்து திரிந்த முற்றங்கள் அனைத்தும் எமது தோழர்களின் நினைவை ஊட்டுகின்றன.

இன்றும் அவை திரும்பி வராத எம் நண்பர்களின் கதையை எமது மண்ணில் துயரோடு அவை கூறுகின்றன. எமது இதயங்களில் அவர்களை புனிதமாக இருத்திக் கொண்டோம். எனவே அவர்கள் வாழ்கிறார்கள் ஆம் அவர்களின் மரணம் வாழ்வின் முடிவல்ல . . .

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

## பாலகணேசன்
### (சங்கரி)

வயது 21

வல்வெட்டித்துறை

---

## இராசநாயகம்
### (வேதா, சிவா)

30-10-1959

கண்டாவளை

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



துவாரகன் (மயூரன்)

மீசாலை

02 - 02 - 1967

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive